விகடன்
பிரசுரம்

# சிறகை விரி! பற

பாரதி பாஸ்கர்

Https://T.Me/eNoolagam



# சிறகை விரி, பற !

பாரதி பாஸ்கர்

Https://T.Me/eNoolagam



# சிறகை விரி, பற!

பாரதி பாஸ்கர்

விகடன்
பிரசுரம்

Title :

SIRAGAI VIRI, PARA!
© BHARATHI BASKAR
ISBN : 978-81-8476-495-6

விகடன் பிரசுரம்: **729**

நூல் தலைப்பு:

**சிறகை விரி, பற!**

நூல் ஆசிரியர்:

**© பாரதி பாஸ்கர்**

அட்டை வடிவமைப்பு:

**த.வினோத்**

முதற்பதிப்பு : **மே, 2013**

விலை : **₹ 75**

பதிப்பாளர்:

**பா.சீனிவாசன்**

ஆசிரியர்:

**இரா.சரவணன்**

முதன்மை உதவி ஆசிரியர்:

**அ.அன்பழகன்**

தலைமை உதவி ஆசிரியர்கள்:

**எம்.நாகமணி, கே.பாசுமணி, சிவராஜ்**

முதன்மை வடிவமைப்பு:

**மு.ராம்குமார்**

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

**விகடன் பிரசுரம்**

757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்:044-28524074 / 84

விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84

e-mail: books@vikatan.com

## ஆன்மிகப் பார்வையும் அற்புதப் பதிவும்!

**மை**க் பிடிப்பதும் பேனா பிடிப்பதும் பாரதி பாஸ்கருக்கு கைவந்த கலையாகிவிட்டது. பட்டிமன்றப் பேச்சில் நமக்கான நம்பிக்கையாக - ஆறுதலாக - ஆத்மார்த்தமான வாதங்களை வைத்து கைத்தட்டல் பெறும் பாரதி பாஸ்கர், தன் வாழ்வியல் பகிர்வாக - பிறர் வாழ வேண்டிய பக்குவமாக ஆன்மிகத்தின் வழிநின்று சொல்லும் பாடங்களே இந்த நூல். நம் நெஞ்சத்துள் நன்னெறிக்கான பாதை போடும் பணியை பாரதி பாஸ்கரின் எழுத்துகள் செவ்வனே செய்திருக்கின்றன.

வங்கியில் உயர் அதிகாரியாக இருக்கும் பாரதி பாஸ்கர், ‘சிறகை விரி, பற!’ எனும் இந்த நூலில் புராண, இதிகாசங்களில் வரும் சம்பவங்கள், மன்னர்கள் காலத்தில் நடந்த வரலாற்று நிகழ்வுகள், சிறு வயதில் தான் உற்று, உணர்ந்த பக்தி அனுபவங்கள், படித்த, தனக்கு ஏற்பட்ட அனுபவங்களோடு அன்றாடம் நடக்கும் இன்றைய நிகழ்வுகளையும் ஒப்பிட்டு மிக அற்புதமான விஷயங்களைத் தோரணமாகப் படைத்திருக்கிறார்.

குறிப்பாக அனுமன் ராமனிடம் ‘கண்டேன் சீதையை’ எனச் சொன்னது, ஔவையார் வாழ்த்தும்போது ‘வரப்புயர’ என வாழ்த்தியது, மனுநீதிச் சோழன் நீதி கேட்ட பசுவுக்காகத் தன் மகனைத் தேர்க்காலில் இட்டது, கண்ணதாசன் கம்பன் விழாவுக்குத் தாமதமாக வந்தது, செல்போன் பேசிக்கொண்டே பேருந்தைக் கவிழ்த்த இன்றைய நிகழ்வு வரை பாரதி பாஸ்கரின் பார்வையும் பதிவும் அதியற்புதம்!

எல்லாவற்றுக்கும் ஹைலைட்டாக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இந்த நூலுக்குக் கொடுத்திருக்கும் வாழ்த்துரை மகத்தானது. அவ்வளவு சீக்கிரத்தில் யாருக்கும் வாழ்த்துரை வழங்காத ரஜினிகாந்த், இந்த நூலின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு இதயம் திறந்து பாராட்டி இருக்கிறார். இந்த நூலின் அற்புதத்தைச் சொல்ல ரஜினியின் பாராட்டே போதுமானது. பட்டிமன்றப் பேச்சாளர் ராஜாவின் அணிந்துரை இந்த நூலுக்குக் கூடுதல் அழகு!

விகடன் பிரசுரத்தில் இருந்து வெளியாகும் பாரதி பாஸ்கரின் இரண்டாவது நூல் இது. காற்றின் போக்கில் மிதக்கும் பறவையின் இறகாக எல்லோருடைய மனதையும் ஈர்க்கக்கூடிய பாரதி பாஸ்கரின் எழுத்து நடை, இன்னும் பல நூல்களை வாசக உலகுக்கு வழங்கட்டும்!

- ஆசிரியர்

## வாழ்த்துகளுடன்...



‘சிறகை விரி, பற!’ - பாரதி பாஸ்கர் எழுதி, விகடன் பிரசுரம் வெளியிடும் இரண்டாவது படைப்பு.

பெரும்பாலும் பேச்சாளர்களுக்கு எழுத வராது. பல எழுத்தாளர் களுக்கு மேடைப் பேச்சு அமையாது. பெற்றோர் சூட்டிய பெயர் ராசியாலோ, கலைவாணியின் அருள் ஆசியாலோ பாரதி பாஸ்கரின் பேச்சும் எழுத்தும், மூச்சும் உயிருமாக இணைந்து புகழ் சேர்க்கிறது.

‘எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை’ என்ற தாயின் போதனை தாலாட்ட, வெளிச்சமும், காற்றும், இலக்கியமும், இறை உணர்வும் வளர்க்க வளர்ந்தவர் பாரதி.

இளமைக் காலம் தொடங்கி இன்றளவும் இவர் கண்ட, கேட்ட, கற்ற, உணர்ந்த, அறிந்த, அனுபவித்த ஆன்மிக தரிசனங்களின் தொகுப்பே இந்தக் கட்டுரை நூல்.

தெளிவான சிந்தனை, தேர்ந்த சொல்லாட்சி, வளமான தமிழ் நடை, வலிமையான வார்த்தைகள், எளிய உவமைகள், ஏராளமான நகைச்சுவை, மெலிதான அங்கதம், மேன்மையான தகவல்கள்...

ஊடும் பாவுமாக விரவிக்கிடக்கும் இந்த நூலை வாசிப்பவரின் மனம் சிறகை விரித்து ஆன்மிக வெளிகளில் மெல்லப் பறக்கத் தொடங்குகிறது.

கீதை - மௌனத்தின் மனவெளியில் ஒரு மகத்தான ஆசிரியன் தன் மிகச் சிறந்த மாணவனுக்கு வழங்கிய ஞான தரிசனம்.

மதம் - எல்லா உயிர்களிலும் தன்னையே விம்மும் மானிட மகோன்னதம்.

பசி - மானிடத்தின் மிக உக்கிரமான நெருப்பு. அதை அணைக்க நீளும் கைதான் ஆண்டவனுக்கு மிக அருகில் செல்லும் கை.

அக்கமகாதேவி முதல் ஆண்டாள் நாச்சியார் வரை...

அருணகிரிநாதர் முதல் ஆழ்வாராதிகள் வரை...

பகவான் ரமணர் முதல் பரமாச்சார்யார் வரை...

பத்ரிநாத் முதல் பார்த்தசாரதி கோயில் வரை...

பகவத் கீதை முதல் பைபிள் வரை...

தத்தாத்ரேயர் முதல் தாஸ்தாவஸ்கி வரை...

ஐசக் நியூட்டன் முதல் ஐ.பி.எல். கிரிக்கெட் வரை...

ஜூலியஸ் சீசர் முதல் ஜூலியா ராபர்ட்ஸ் வரை....

கால வெளிகளில் ‘பறவைகள் பறப்பதுபோல் ஒரு நிஜமான பயணத்தை’ மேற்கொண்டு இவர் காட்டி இருக்கும் மேற்கோள்கள் உண்மையில் பிரமிக்க வைக்கின்றன.

ஒரு புனித யாத்திரை போய் வந்த உணர்வை, ஒரு ஞானகுருவின் நேத்ர தீட்சையில் பாடங்கேட்ட தெளிவை இந்த நூல் வழங்குகிறது.

‘காலக் கறையான் அழிக்க முடியாமல் நிலைத்து நிற்கும் கோயில்களைப்போல’ பாரதி பாஸ்கர் அவர்களின் எழுத்தும், சிந்தனையும் என்றும் நிலைத்திட வாழ்த்தி, எங்கள் மதுரை மீனாட்சியின் அருளாசிகள் அவருக்குப் பூரணமாகக் கிடைத்திட பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்,

**S.ராஜா,**

பட்டிமன்றப் பேச்சாளர்.

10, மேலப்பொன்னகரம்,
4-வது தெரு, மதுரை - 16.

## சில தரிசனங்கள்

என் சிறு வயது பயங்களின்போது, 'பயத்தை உருவாக்குபவனும் விஷ்ணு; அதை நீக்குபவனும் விஷ்ணு' என்ற விஷ்ணு சகஸ்ரநாம மந்திரத்தை சொல்லிக்கொடுத்த அம்மாவின் குரல், எப்போதும் என் நெற்றியில் விபூதி பூசிவிடும் அப்பாவின் விரல்கள், பார்த்தசாரதி கோயிலுக்கு ஓடி ஓடிப்போய் பெருமாளை தரிசித்து வரும் அத்தையின் கண்கள்... என் வீடு விதைத்த நம்பிக்கைகளால் விளைந்தவை.

ஏதேதோ தரிசனங்களைக் கண்டு மானுடம் பரவசத்தில் ஆழ்ந்த தருணங்களில் மட்டுமே கலையும் இலக்கியமும் தோன்றியிருக்கின்றன என்ற தெளிவு, பேச்சு மேடைகளில் ஏறிய பின்பே என்னுள் பிறந்தது. அப்படிப்பட்ட மகத்தான தரிசனங்களைக் காண மனம் எனும் கதவு திறக்க வேண்டுமே... கதவைத் திறக்கும் தாழ்ப்பாள் எட்டாத குட்டிச் சிறுமி, கதவுக்கும் தரைக்கும் இடையே இருக்கும் கோடு போன்ற இடைவெளியில் தரையோடு கன்னம் இறுக்கி, வெளியே பார்க்க முயலும் எளிய முயற்சியே இந்தக் கட்டுரைகள்.

அவள் விகடனில் முதல் தொடர் எழுதி அதை விகடன் பிரசுரம் வெளியிட்ட மகிழ்ச்சியில் இருந்த என்னை, 'நீங்களும் ஆன்மிகத் தொடர் எழுதலாம்' என்று ஊக்குவித்த தினகரன் நிர்வாகத்துக்கும், குறிப்பாக ஆன்மிக மலர் பொறுப்பாசிரியர் பிரபு சங்கர், நிர்வாகத் தலைவர் ஆர்.எம்.ஆர்.ரமேஷ் ஆகியோருக்கும், என் இரண்டாவது செடியையும் தங்கள் தோட்டத்தில் நட இடம் தந்திருக்கும் விகடன் குழுமத்தினருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

வாழ்க்கை என்பது அழகான ஆச்சர்யங்கள் நிறைந்தது. அப்படிப்பட்ட ஓர் அழகான, மகத்தான ஆச்சரியம்தான் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் இந்த நூலுக்கு வழங்கியிருக்கிற

வாழ்த்துரை. வியக்க வைக்கிறது அவரது அன்பு; பிரமிக்கவைக்கிறது அவரது எளிமை. அவருக்கும், மற்றொரு வாழ்த்துரை வழங்கியிருக்கும் சக பேச்சாளர் ராஜாவுக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்.

அன்புடன்,

பாரதி பாஸ்கர்

இந்த நூல்...

எழுத்து, என்னுடைய எல்லைகளை
இன்னும் விரிவு செய்யும் என்ற
ஆழ்ந்த நம்பிக்கையை என்னுள் விதைத்த,
என் கணவருக்கும்,
என் மகள்கள் காவ்யா மற்றும் நிவேதிதாவுக்கும்...

# 1

## சிறகை விரி, பற!

'பசங்க' என்ற அண்மைத் திரைப்படம் எனக்குப் பிடித்த ஒன்று. வீட்டில் கணவன்-மனைவி சண்டை பெரிதாகி, பக்கத்து வீட்டுப் பையன் பள்ளிக்கூடத்தில் அதைப்பற்றி கேலி பேச, சண்டை போட்ட கணவன்-மனைவியின் குழந்தைகளுக்கு அவமானமாகி விடுகிறது. பக்கத்து வீட்டு பள்ளிக்கூட வாத்தியார், கணவனுக்கு தன் அனுபவங்களைச் சொல்கிறார். தான், தன் மனைவிக்கு விட்டுக் கொடுத்ததால் குடும்பம் ஜெயித்த கதையைப் பகிர்கிறார். சண்டை போட்ட கணவன், 'நீங்க என் குரு' என்கிறார். 'மத்தவங்க சொல்லுறதைக் கேட்டுக்கவும் வாங்கிக்கவும் ஒரு மனசு வேணும். அது உங்கக்கிட்ட இருக்கு' என்பார், வாத்தியார்.

'குரு-சிஷ்யன்' என்ற தத்துவத்தின் தாத்பரியமே இதுதான். இன்னொருவருக்கு எடுத்துச் சொல்ல ஒரு பிரியம், அதை வாங்கிக்கொள்ள ஒரு ஆர்வம்... இரண்டும் இணைகிறபோது கற்பித்தலும் கற்றலுமாக வாழ்வே இனிமையாகிறது. இப்போது வந்த புயல் மாதிரி, புதுச்சேரியில், பாரதியின் காலத்தில் ஒரு புயல் அடித்ததாம். பாரதியாரும் நண்பர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் அளித்தார்களாம். ஒரு கிழவி வந்து தன் வீடு இடிந்து

விட்டதென்றும் புது வீடு கட்ட உதவுமாறும் கேட்டாள். ‘பழைய வீடு எங்கே?’ என்ற பாரதிக்கு, வெறும் சட்டங்கள் மட்டுமே பாக்கியிருந்த தன் இடிந்த வீட்டைக் காட்டினாள் கிழவி. ‘இதுவா வீடு?’ என்று வேதனையுடன் வியந்த பாரதியிடம் கிழவி சொன்னாள், “காற்று அதிகம் உள்ளே வந்தாலோ, அல்லது வெளியே போனாலோ இந்த உடம்புகூட வெறும் சட்டம்தான்.’ பாரதிக்கு பளீர் என்று ஒரு வெளிச்சம் வந்தது. கதவு திறந்தது மாதிரி. அடுத்த நாள் சுதேசமித்திரனில் ஒரு கட்டுரை வாயிலாக இதைப் பதிவு செய்து, கிழவியும் தன் குருவான அதிசயக் கதையை எழுதினார் பாரதி.

இந்திய தாந்திரீக மரபுகளில் வழிபாட்டுக்குரியவர் தத்தாத்ரேயர். பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரின் ஸ்வரூபமான தத்தாத்ரேயரை ‘குருக்களுக்கெல்லாம் குரு’ என்று சொல்வார்கள். ‘யது’ என்ற அரசன் தனக்கான குருநாதரைத் தேடி காட்டுக்குள் அலைந்தபோது தத்தாத்ரேயரைக் கண்டு, “எனக்கு நீங்கள் குருவாக முடியுமா?” எனக் கேட்டான். ‘வாழ்க்கையே எல்லோருக்கும் குரு’ என்றார், தத்தாத்ரேயர். ‘நம்மைச் சுற்றியுள்ள எதுதான் நமக்கு பாடம் சொல்லித் தருவதில்லை?’ என்று கேட்ட தத்தாத்ரேயர் தன்னுடைய 24 ஆசிரியர்களை யதுவுக்கு அறிமுகம் செய்தார்.

எவர் தனக்குச் செய்யும் இழிவையும் பொருட்படுத்தாது யாவற்றையும் தாங்கும் பூமி, எல்லா மாசுகளையும் அழித்து எப்போதும் சுத்தமாயிருக்கும் நெருப்பு, எந்த வாசனையையும் எடுத்துச் சென்று சேர்த்தாலும் அந்த வாசனையை தன்னுள் ஏற்றிக்கொள்ளாத காற்று, எல்லையிருப்பது போல் தோன்றி, எல்லை இல்லாது விரியும் வானம், அனைத்து உயிர்களையும் மலரச் செய்யும் நீர், பார்வைக்கு வளர்வதும் தேய்வதுமாகத் தோன்றினாலும் வளராமலும் தேயாமலும் இருக்கும் நிலவு, எல்லா ஆத்மாக்களிலும் உறையும் ஒரே உயிர்போல, எல்லா இடங்களிலும் ஒன்றாக ஒளிரும் சூரியன், தன் உணவுக்காக தேனை எடுக்கும்போதே அந்தத் தேன் தரும் மலர்களின் சந்ததியை பெருக்கி உதவி செய்யும் தேன் என்று விரியும் ஆசிரியர் பட்டியல் மிக வசீகரமானது.

‘ஆச்சார்ய தேவோ பவ’ என்று கற்பிப்பவர்களுக்கு தெய்வத்துக்கு சமமான இடம் தந்த கலாசாரம் நம்முடையது. ‘பாடத்தை மகனிடமிருந்தும் கேட்கலாம் என்று சிவனே, சற்று

தலைசாய்த்து, வாய்பொத்தி முருகனிடம் பாடம் கேட்ட நம் பண்பாட்டின் உயர்கூறு, வேறு எந்த தேசத்திலும் காண முடியாதது. உண்மையில் நம் பிள்ளைகள்தான் நமது பெரும் ஆசிரியர்கள். நான் என் பெண்ணிடமிருந்து தினமும் கற்கிறேன். சிரிப்பின் பரிசுத்தத்தையும் கண்ணீரின் பவித்திரத்தையும் அவளிடமே தரிசித்து கற்கிறேன்.

'சீச்சி, வீடெல்லாம் புறா அசிங்கம் செய்யுது. முதல்ல இதத் துரத்தணும்' என்றேன் புது வீடு வந்த முதல் வாரத்தில். ஏகப்பட்ட புறாக்கள் வீட்டின் பால்கனியில் அசுத்தம் செய்ததால் வந்த எரிச்சல் எனக்கு.

"அதனோட வீட்ட அழிச்சு தான் நாம வீடு கட்டியிருக் கோமோ என்னமோ... அப்ப அத எப்படி விரட்ட முடியும்?" என்று கேட்டாள் என் செல்லப் பெண். எனக்கு அது ஒரு பாடம்தான். எது என் வீடு? இந்த உடல்கூட என் நிரந்த வீடில்லையே...

நாய்களுடனும் மனைவி களுடனும் எதிரே வந்த புலையனை "விலகு விலகு" என்றாராம் ஆதிசங்கரர். "எது விலக வேண்டும்? ஆன்மாவா? உடலா?" என்று திருப்பிக் கேட்டானாம் அவன். எல்லா உயிரிலும் ஒளிர்வது ஒரே ஆத்மாதான் என்ற ஞானத்தின் தரிசனம் ஆதிசங்கரருக்கு அங்கே கிடைத்தது. பாடம் யாரிடமும் கேட்கலாம் என்பதுதான் பாரதம் போற்றும் ஞான மரபு.



சுற்றி உள்ள எதுவும் நமக்கு குருதான். வாழ்வின் ரகசியத்தை, தோல்வியை ஜெயிக்கும் வலிமையை, வெற்றியை ஏற்கும் பக்குவத்தை, வலி தாங்கும் ரகசியத்தை, நேசிப்பின் நெகிழ்வை, யார் யாரோ நமக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். முழுதும் நிரம்பி இருக்கும் தேநீர் கோப்பையில் புதுசாய் தேநீர் ஊற்ற முடியுமோ? அதுபோல் நாம் நம் அபிப்ராயங்களால் நிரம்பியிருந்தால் எந்தக் கருத்தும் உள்ளே போக முடியாது. கண், கழுத்து, மனசு எல்லாம் கொஞ்சம் காலியாக இருந்தால் பிரபஞ்சம் முழுக்க நமக்கு குரு கிடைத்துக்கொண்டே இருப்பார்.

# 2

## பக்தியுடையார் பதறார்

சின்ன வயதில் நாங்கள் ஒரு காம்பௌண்ட் வீட்டில் குடியிருந்தோம். மூன்று வீடுகள் ஒரே வளாகத்தில். வீடுகள் எல்லாம் தீப்பெட்டி சைஸ்தான். ஆனால், ஒரு பெரிய திறந்தவெளி முற்றம் வீட்டின் முன். விரிந்த மொட்டை மாடி. நாங்கள் சுவர்களின் பாதுகாப்பில் உள்ளே வளர்ந்தவர்கள் அல்ல. தூங்குவது மொட்டை மாடியில். ஆட்டம், பாட்டம், படிப்பு, பேச்சு எல்லாம் திறந்தவெளியில்தான்.

வெளிச்சமும் காற்றும் எங்களை வளர்த்தன. இருப்பதிலேயே கொஞ்சம் பெரிய வீட்டில் ஒரு ஆச்சாரமான குடும்பம். அந்த வீட்டு மாமா பூஜை செய்வதில் மிகுந்த பிரியம் உள்ளவர். விடிவதற்கு முன்பே அவர் வீட்டில் பூஜை செய்யும் ஏற்பாடுகள் தொடங்கிவிடும். ‘டமால் டமால்’ என்று கதவுகள் திறக்கும் ஒலி, ‘சளப் சளப்’ என்று வாசல் தெளிக்கும் ஒலி, ‘ராகவா... பூ கட்டியாச்சா?’ என்ற மாமாவின் பிளிறல். இத்தனை சத்தத்திற்கும் எங்களுக்கு விழிப்பு வராதோ? ‘வரும்... ஆனால் வராது’ ஸ்டைலில் தொடர்ந்து போர்வைக்குள் நித்திரா தேவியின் நிரந்தர உபாசனைக் காரர்களாக படுத்தே கிடந்து, பரம சுகத்தை அனுபவித்தோம் அந்தப் பொற்காலங்களில்.



மாமா பக்தர்தான். ஆனால், பெரும் டென்ஷன் பார்ட்டி. ஒரு வார்த்தை சுலோகம் சொல்லி மந்திரத்தை முணுமுணுத்தார் என்றால் பத்து வார்த்தை மாமிக்கும் மகன் ராகவனுக்கும் திட்டு விழும். ‘சுக்லாம் பரதரம்... எங்கடி பூஜை மணி..? விஷ்ணும் சசிவர்ணம்... ராகவா என் வாட்ச் எங்கடா..? சதுர்புஜம் பிரசன்ன வதனம்... ராகவா, கட்டைல போறவனே, ரேடியோவை நிறுத்து..! பிள்ளையாரே இறங்கி வந்து, “அப்பா, நீ எனக்கு சுலோகம் சொல்றியா? கட்டைல போறவனேன்னு திட்டறியான்னு கன்ஃப்யூஷனா இருக்குப்பா” என்று சொல்வார் என நாளும் நாங்கள் எதிர்பார்த்தோம்... பிள்ளையாரைப் பார்த்து கன்னத்தில் படீரென்று போட்டுக் கொள்வார், பாருங்களேன்... அந்த அடி மட்டும் பிள்ளையாரின் கன்னத்தில் விழுந்திருந்தால், எஞ்சிய ஒரு தந்தமும் அவருக்கு கீழே விழுந்திருக்கும். மாமாவுக்கு எல்லாவற்றிலும் பதற்றம். மிகையான பதற்றம் விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களைச் சொல்லுவார். ‘நக்ரோதோ, நச மாத்சர்யம், நலோபோ, நாசுபாமதி, பவந்திக் கிருத புண்யானாம்; பக்தனாம் புருஷோத்தமே’ என்று சத்தம் போட்டுப் படிப்பார்.

அந்த வரிகளின் பொருள் என்ன? அப்பாவிடம் கேட்டேன். ‘விஷ்ணுவின் பக்தனுக்கு கோபமும் ஆத்திரமும் இருக்காது’ என்று

அப்பா பதில் சொன்னார். இத்தனை பதற்றமும் கோபமும் இருப்பவர் பக்தரே இல்லையோ என்று எனக்கு சந்தேகம் வந்தது. பின் பாரதியாரின் கவிதை வரி ஒன்று அந்த சந்தேகத்தைத் தீர்த்தது.

‘பக்தியுடையார் காரியத்தில் பதறார் -

மிகுந்த பொறுமையுடன்

வித்து முளைக்கும் தன்மை போல

மெல்லச் செய்து பயனடைவார் ’

- என்கிறார் பாரதி.

ஒரு விதை வறண்ட நிலத்தில் விழுந்தால், அது உடனே செத்து விடுவதில்லை. தன் உடல் இயக்கங்களை ஒடுக்கி, அது மழை நீருக்காக பொறுமையுடன் காத்திருக்கிறது. இறுதியில் மழை வந்தவுடன் அது துள்ளிக் குதிப்பதில்லை. மிகுந்த பொறுமையுடன் ஊறிப் பருக்கிறது. சின்னக் குழந்தையின் சிவந்த கால் பெருவிரல் போல மெத்து மெத்து என்று விம்முகிறது. சிறு முளை விடுகிறது. அது வேராகி விரிந்து, கிளை பரப்பி, இலை தழைத்து பெரு மரமாகிறது. வான் வரை உயர்ந்து நிற்கிறது. இப்போது பூமிக்கு மழையை அழைத்து வரும் காரணியாகிவிடுகிறது மரம்.

பக்தி உள்ளவனுக்கு கஷ்டம் வருகிறது. அவன் புலம்புவதில்லை. தற்கொலை செய்துகொள்வதில்லை. இறை அருள் வரும் என்று காத்திருக்கிறான். இறுதியில் இறைவன் அருள் வருகிறது. அவன் துள்ளிக் குதிப்பதில்லை. பொறுமையுடன் இறை அருளைப் பயன்படுத்தி மெல்ல முன்னேறுகிறான். பிறர் வாழ்வையும் வளப்படுத்துகிறான்.

மனம் ‘அடுத்தது அடுத்தது’ என்று துடிக்கும் நிலையை ‘பதற்றம்’ என்று அறிவியல் விளக்குகிறது. இழுக்கப்பட்ட ஒரு ரப்பரில் உறையும் நடுக்கத்துக்கும் ஆங்கிலத்தில் ‘டென்ஷன்’ என்றே பெயர். உண்மையில் பதற்றம் கொள்ளும் மனசு இழுக்கப்பட்ட ஒரு ரப்பர் பேண்ட் போலத்தான். ஒன்று அதுவே சுருங்கி தெறித்து விழுகிறது. அல்லது இழுப்பவர் கையில் பட்டு டப் என்று அடித்து வலி ஏற்படுத்துகிறது. அடுத்த முறை யாராவது பதற்றமாயிருக்கும்போது கொஞ்சம் உன்னிப்பாக கவனியுங்கள்.

கண் முன்னால் இருக்கும் பொருட்கள் அவர்களுக்குத்

தெரியாமல் போகும் அதிசயத்தைப் பார்க்கலாம்.

‘சாவி எங்க? சாவி எங்க?’ என்று அலறும் ஆணின் கண் முன்னாலே இருக்கும் சாவி அவருக்கு மட்டும் தெரியாமல்போவது ஏன்? பதற்றம் இல்லாமல் சமைக்கும்போது சர்வ சாதாரணமாக சுவை அடையும் சாம்பார், அவசரத்தில் சமைக்கும்போது உப்பும் உறைப்பும் கூடிப்போய் அல்லல்படுத்துவது எதனால்? இடுக்கி அந்த நேரம் பார்த்து நொடித்து, ரசம் கீழே கொட்டுதே, எதனால்..?

மூளையிலிருந்து வரும் செய்திகளை பதற்றம் முடமாக்கி விடுகிறது. ரத்தத் துடிப்பு அதிகரிக்கிறது. வார்த்தைகள் கட்டவிழ்ந்து வெளியே வருகின்றன. யார் யார் மனதிலோ தீக்காயம் போன்ற வடுவை ஏற்படுத்தும் வார்த்தைகள். உறவுகளைக் கீறும் வார்த்தைகள்.

‘பக்தி உள்ளவனுக்கு இது நேராது’ என்கிறார் பாரதி. எது தவறாகப் போனாலும் ஒரு ஆழமான உள் மூச்சும், ‘பதற்றம் தணியும் வரையில் பேசக் கூடாது’ என்கிற கட்டுப்பாடும், ‘நேற்று என்னை காத்த கடவுள் இன்று காப்பாற்ற மாட்டாரா?’ என்ற நம்பிக்கையும் மனசை வலுப்படுத்தும். அவ்வளவுதான், பதற்றம் தணிவதை உங்கள் உடலும் உள்ளமும் அவதானிக்கும்.

அண்மையில் ராகவனைப் பார்த்தேன். “அப்பா எப்படி இருக்கிறார்?” என்று கேட்டேன்.

“வயசாயிடுச்சு. முன்போல யாரையும் அடிக்கறதில்லை. ஆனால் சத்தம் குறையலை. ரொம்பக் கத்தினால் ரூம்ல போட்டு பூட்டிடறோம்” என்றான், ராகவன்.

‘நக்ரோதோ... நச மாத்சர்யம்...’ என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டேன்.

# 3

## சும்மா இருக்கும் சுகம்

அலுவலகத்தில் யோகா கிளாஸ் நடக்கப்போகிறது என்று எங்கும் பரபரப்பாக இருந்தது. கிளாஸுக்குப் போக ஏகப்பட்ட பேர் தயார் செய்துகொண்டார்கள். வேலை நேரத்தில் ஒரு மணி நேரம் டிமிக்கி கொடுத்து, யோகா பயிற்சி செய்ய கசக்குமா, என்ன? ‘சாந்தி ஆசனம் சொல்லிக் கொடுப்பார்களா?’ என்று ஒருவர் ஓயாமல் கேட்டார். விசாரித்ததில் தெரிந்தது ‘சாந்தி ஆசனம்’ என்பது பாயை விரித்து படுப்பது என்று. எல்லோரும் யோகா பாய் வாங்கினோம். (எழுநூறு ரூபாய்) சிலர் யோகா செய்ய பைஜாமா, சுடிதார் என்று வாங்கினர். முதல்நாள் வகுப்பில் கூட்டம் அலைமோதியது. இரண்டு, மூன்று சுமார். நாலாம் வகுப்பில் இருந்து பாராளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடர் மாதிரி கூட்டம் ஈயடிக்க ஆரம்பித்தது.

எனக்கு என் அப்பா வாக்கிங் போக ஆரம்பித்தது நினைவுக்கு வந்தது.

சென்னை திருவல்லிக்கேணியில் எங்கள் வீடு என்பதால் மெரினா பீச் ரொம்பப் பக்கம். அதனாலேயே நாங்கள் கடற்கரைக்குப் போனது அபூர்வம்! ‘பக்கத்லதானே இருக்கு, பார்த்துக்கலாம்’ என்ற அலட்சியம். அப்பா திடீரென்று

தொப்பையைக் குறைக்க வேண்டி வாக்கிங் போகப் போவதாக ஒரு நபர் தீர்மானம் நிறைவேற்றினார். அம்மா தனக்கே உரிய விவேகத்துடன், ‘அதெல்லாம் ரெகுலராகப் போகணும். உங்களால முடியுமான்னு பாருங்க’ என்றாள். அப்பா அந்தக் கணமே புயல் போல புறப்பட்டுப் போய், ஷார்ட்ஸ், பனியன், ஷூ, காலையில் எழுந்து நடக்கும்போது நாய் துரத்தினால் எதற்கும் இருக்கட்டும் என்று சிறு தடிக்கம்பு எல்லாம் வாங்கினார். கோலாகலமாக மொத்தம் மூன்று நாள் போனார். பிறகு சளி பிடித்தது என்று நாலு நாள், ஊருக்குப் போக வேண்டியிருந்தது என்று மூன்று நாள், திரும்பி வந்து அலுப்பாக இருந்தது என்று இரண்டு நாள் வாக்கிங் போவதை ஒத்தி வைத்து, கொஞ்ச நாளில் ஷூவை எலி கடித்து விட, ஒரு வழியாக வாக்கிங் படலம் முடிவுக்கு வந்தது. நாய் விரட்ட வாங்கிய கம்பு, மேலே சரிகைத்தாள் சுற்றப்பட்டு எங்கள் பள்ளி நாடகங்களில் பலவாறாகப் பயன்படுத்தப்பட்டு இறுதியில் ஒரு சுபயோக சுபதினத்தில் தொலைந்துபோனது.



ஏழுநூறு ரூபாய் யோகா பாய் அப்பா வாங்கிய ஷூபோல வீணாகப் போய்விடுமோ என்ற பயத்தில் பல்லைக் கடித்துக் கொண்டு வகுப்புக்குப் போனேன். யோகா மாஸ்டர் சாந்த ஸ்வரூபி, நல்ல மலையாள உச்சரிப்பில், ‘யோகா ஈஸ் ஸிம்பிள். யூ

பீ ஸைலன்ட்' என்று ஓயாமல் சொல்வார். 'யோகா மிக எளிது. மௌனமாக இருங்கள். அதுபோதும்' என்று அவர் சொல்லும் போதெல்லாம் நாங்கள் வாயை மூடி மௌனமாக இருப்போம். வாயை மூடிய மறுகணமே மனம் பேசத் தொடங்கிவிடும். 'இன்றாவது வீட்டுக்கு சீக்கிரம் போக முடியுமா? மகளுக்கு நாளை கணக்குப் பரீட்சை. யோகா மாஸ்டர்கூட வரும் உதவிப் பெண் அவரது மனைவியா? சீச்சி இருக்காது. சிறு பெண்ணாக இருக்கிறாளே... அவளுக்கு எத்தனை முடி! நமக்குத் தோளை விட்டு இறங்க மாட்டேங்குதே... கறிவேப்பிலை சாப்பிட்டால் முடி வளருமாம். இன்று இரவு சமையலுக்கு கறிவேப்பிலை குழம்பு வைக்கலாமா? ஃபிரிட்ஜில் கறிவேப்பிலை இருக்கிறதா..?

'நீங்கள் இத்தனை நேரம் அமைதியாக இருந்ததற்கு நன்றி' என்கிறார் யோகா மாஸ்டர். எனக்குச் சிரிப்பு வருகிறது. நாங்களா மௌனமாக இருந்தோம்? மௌனத்தின் இரைச்சல், சத்தத்தின் இரைச்சலைவிட பிரமாண்டமானதாக இருக்கிறதே...

'செம்மான் மகளைத் திருடும் திருடன்

பெம்மான் முருகன் பிறவான் இறவான்

சும்மா இரு சொல்லற என்றலுமே - அம்மா

பொருளொன்றும் அறிந்திலனே...'

என்கிறார், அருணகிரிநாதர். முருகன் அவரிடம் வந்து 'சும்மா இரு... சொல் இல்லாமல்' என்றானாம். சும்மா இருப்பதே பேச்சு இல்லாமல் இருப்பதுதானே. இதில் என்ன 'சொல் அற' சும்மா இருப்பது..? உண்மையில் சும்மா இருப்பது என்றால் மனசுக்குள்ளும் வார்த்தைகள் இன்றி கழுவிக் காயப்போட்ட தரை மாதிரி வெறிச்சென்று இருப்பது. யோகாவின் ஆரம்ப நிலைகளில் தியானம் செய்யும்போது மனசு பேயாட்டம் போடும். மனசை வார்த்தைகள் சுற்ற, மௌனத்துக்குத் திரும்புவது கடும் வேலை. பெரும் பொறுமை தேவைப்படும் வேலை. யோகா வகுப்புகளுக்கு பாய்கள் வாங்கலாம். மனசின் மௌனத்தை எங்கே வாங்குவது?

உண்மையில் மௌன விரதம் இருப்பதே யோகாப் பயிற்சிக்கு நிகர்தான். மௌன விரதம் இருக்கும் சிலர் பேப்பரில் எழுதிக் காட்டுவதும் அந்த சில மணி நேரம் மௌன விரதத்தில் நாட்டியப் பேரொளி பத்மினியாகத் தம்மை பாவித்து அபிநயம் மூலம் பேசுவதையும் பார்த்தால் படு தமாஷாக இருக்கும். மௌன விரதம்

என்பது இவை எதுவும் அல்ல. 12 மணி நேர மௌன விரதம் என்றால், அந்த நேரம் முழுதும் நம்மை வெளிப்படுத்தாது இருப்பது. அலறும் தொலைபேசியை எடுக்கப் பரபரக்கும் கையை இயக்காமல் இருப்பது; இதுதான் சாக்கு என்று நமக்குப் பிடிக்காத விஷயங்களைப் பேசும் குழந்தைகளை கண்களால் சுட்டெரிக்காது இருப்பது; முக்கியமாக விரத நேரம் முடிந்ததும் எல்லாவற்றுக்கும் சேர்த்து வைத்து பதில் சொல்லாது இருப்பது. காலம் நம்மைக் கடந்து செல்வதைக் கவனித்தபடி இருப்பது. நாம் இல்லாமலும் இந்த உலகம் இயங்கும் என்று அவதானிப்பது.

Eat, Pray, Love என்று ஓர் ஆங்கிலப் படம். ஹாலிவுட் நடிகை ஜூலியா ராபர்ட்ஸ் நடித்தது. தன் வாழ்வின் வெறுமை தாக்க, நடுத்தர வயது அமெரிக்கப் பெண் ஒருத்தி திடீரென்று கிளம்பிப் போகும் பயணம் பற்றிய கதை. முதலில் இத்தாலிக்குப் போய் பிரமாதமாகச் சாப்பிடுகிறாள். பிட்ஸாவும் பாஸ்தாவுமாகத் தின்று தீர்த்து, எல்லா பேண்டையும் பிரித்துத் தைத்துக்கொள்கிறாள். பின் இந்தியாவுக்கு வந்து தியானம் பயில்கிறாள். இறுதியில் பாலித் தீவுகள் சென்று தன் வாழ்வின் உண்மையான காதலைக் கண்டு அடைகிறாள் என்று கதை போகிறது.

இந்தியாவுக்கு வரும் கதாநாயகி ஹரித்வாரில் ஒரு ஆசிரமத்தில் தங்குகிறாள். அவளைப் போன்ற இன்னொரு அமெரிக்கப் பெண்ணைப் பார்த்ததும் ஆசையாகப் பேசப் போகிறாள். பேச மறுக்கும் அந்தப் பெண் தான் அணிந்திருக்கும் ஒரு பேட்ஜை சுட்டிக் காட்டுகிறாள். ‘நான் மௌனத்தில் இருக்கிறேன்’ என்று சொல்கிறது பேட்ஜ். ஒரு வாரம் சென்றதும் அந்தப் பெண் தானே வந்து இவளுடன் பேசுகிறாள். ‘எப்படி இருந்தது ஒரு வார மௌனம்?’ என்று கதாநாயகி கேட்க, ‘மௌனத்திற்குப் பிறகு வார்த்தைகள் மிக அழகாக இருக்கின்றன’ என்கிறாள் அந்தப் பெண்.

அந்த வசனம் என் மனத்தை அசைத்தது. சொல்லுக்கு என்ன சக்தி? ‘ஒவ்வொரு சொல்லும் அர்ஜுனன் வில் மாதிரி’ என்று கிராமங்களில் சொல்வார்கள். ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும். ஆனால் சொல்லைவிட மௌனத்தின் மதிப்பு அதிகம். இதைத்தான் ‘சொல்லாத சொல்லுக்கு விலையேதும் இல்லை’ என்று கண்ணதாசன் பாடியிருக்கிறார்.

காஞ்சி மகா பெரியவர் அவர் மனதுக்குப் பிடிக்காதது எதுவும்

நடந்தால் ‘காஷ்ட மௌனம்’ என்ற கடும் மௌன விரதத்துக்குப் போய் விடுவாராம். ‘நடந்த ஒன்றில் எனக்குச் சம்மதமில்லை’ என்று ஆயிரம் வார்த்தைகளால் அலறுவதைவிட ஒரு மணி நேர மௌனம் மகத்தான பலனைக் கொடுக்கிறது. ‘சொல் அற சும்மா இருப்பது’ ஆரம்பத்தில் கஷ்டம்தான். ஆனால் பழகினால்..? சுகம். அது தரும் மன வலிமைக்கு ஏதும் ஈடில்லை. நாம் பேசாமல் இருந்தால் மற்றவர்கள் நம்மை புரிந்துகொள்ள முடியாதே என்கிறீர்களா? நம் மௌனத்தைப் புரியாதவர்கள் வார்த்தைகளை மட்டுமா புரிந்துகொள்ளப் போகிறார்கள்?

# 4

## எல்லா மனிதருக்குள்ளும் ஒரு குழந்தை!

இந்தக் கட்டுரையின் முதல் அத்தியாயத்தில் ‘குரு-சிஷ்யன்’ பற்றிய நம் தேசத்தின் புனித மதிப்பீடுகளை எழுதிய ஈரம்கூடக் காயவில்லை. அதற்குள் இந்தியாவையே உறையச் செய்த அந்தக் கொடூர சம்பவம் தமிழ்நாட்டில் நடந்தேவிட்டது. 9-ம் வகுப்பு மாணவன், ஆசிரியை ‘நன்றாகப் படி’ என்று தொடர்ந்து நச்சரித்ததால் அந்த ஆசிரியரைக் கொன்றுவிட்டான்.

கடையில் இருபது ரூபாய் கொடுத்து வாங்கும் கத்தி நமக்கென்றால் கத்தரிக்காயைக்கூட வெட்டுவதில்லை. அந்தக் கத்தியை வைத்து ஆசிரியையின் கழுத்தில் ஆறு இன்ச் ஆழம் குத்தியிருக்கிறான். அத்தனை வெறுப்பு! அத்தனை குரூரம்... ஒரு 14 வயசுப் பையன் மனதில் யார் வளர்த்தது இந்த வெறுப்புச் செடியை? ஈடு செய்யவே முடியாத இழப்பை அந்த டீச்சரின் இரு சிறு பெண் குழந்தைகளுக்கு ஏற்படுத்தி, மீளமுடியாத பாழ்வெறுமையை அந்தக் குடும்பத்துக்குக் கொடுத்த மாணவன் மனதில் ஊன்றிய எந்த விதை தவறானது?

ஏதோ, எங்கேயோ என்று ஒதுக்க வேண்டிய ஒற்றைச் சம்பவம் அல்ல இது. நம் சமூகத்தின் மீது படர்ந்திருக்கிறது வெறுப்பு என்னும் மகத்தான பாசி. “என்னைப் பிடிக்காதவர், எனக்குப்


பிடிக்காதவர், நான் வேண்டுவதைக் கொடுக்காதவர், என்னை அவமானப் படுத்தியவர், என்னிடம் இல்லாத ஒன்றை வைத்திருக்கிறவர், அத்தனை பேரும் அழிய வேண்டியவர்களே" - என்னும் வெறுப்புப் பெருநெருப்பு இன்றைய இளைஞர்களை ஆட்டிப் படைக்கிறது. தன்னைக் காதலிக்காத ஒரு பெண்ணா, ‘அடிடா அவளை’ என்று ஆசிட் ஊற்றலாம். தன்னைத் தொடர்ந்து ‘படி, படி’ என்று நச்சரிக்கும் டீச்சரா, கொல்லலாம்!



வெறுப்புக்கு பதிலாக அன்பை விதைக்கச் சொன்னதுதான் நமது மதம், நமது பண்பாடு, நமது வேர். ‘விடிந்தால் பட்டாபிஷேகம்’ என்று தூங்கப்போன ராமனை காலைக்குள் காட்டுவாசியாக்கி விட்டாள் சிற்றன்னை கைகேயி. ராமனைக் கூப்பிட்டு ‘காட்டுக்குப் போக அப்பா கட்டளையிடுகிறார்’ என்று சொல்லும் கைகேயியை ‘பூழி வெங்கான்’ அதாவது ‘புழுதி படிந்த கானகம்’ என்று பேச வைக்கிறான் கம்பன்.

‘அப்பா சொன்னால் என்ன? தாங்கள் சொன்னால் என்ன?

நான் மறுக்க மாட்டேன்' என்று புன்னகையோடு அந்த முடிவை ஏற்கும் ராமன், மற்றவர்களிடம் தான் காட்டுக்குப் போகும் செய்தியைச் சொல்லும்போது 'மின் ஒளிர்கானம்' அதாவது மின்னும் ஒளி பொருந்திய காட்டுக்குப் போவதாகச் சொல்லி விடை பெறுகிறான். காடு உண்மையில் புழுதி மிக்கதா அல்லது ஒளி நிரம்பியதா? புழுதியும் ஒளியும் காட்டில் இல்லை. வெறுப்பு மண்டும் இதயம், காட்டை புழுதியாகக் காண்கிறது. அந்த வெறுப்புக்கு பதிலாக அன்பை வைக்கும் இதயத்தின் ஒளியால் புழுதிக் காடும் ஒளி பெற்றுத் திகழ்கிறது.



'வெறுப்பை அகற்றினால்தான் நிம்மதி' என்று தெரிகிறது. ஆனால், வெறுப்பை அகற்றுவது எப்படி? இதுதான் நம் முன்னே உள்ள மில்லியன் டாலர் கேள்வி. ஓயாமல் விமர்சிக்கும் மனைவி, நம்மைப் பார்த்து நக்கலாய்ச் சிரிக்கும் மாமியார், மதிக்காத வேலைக்காரர், அதிகாரம் செய்யவே பிறவி எடுத்திருக்கும் மானேஜர், ஏமாற்றிய நண்பர், எடுத்ததெற்கெல்லாம் சண்டை போடும் பக்கத்து வீட்டுக்காரர்... ஒவ்வொருவருக்கும் எத்தனை நீண்ட பட்டியல் இருக்கிறது.

ஏரி நீருக்குள் சூரியனின் ஒளியை யுக யுகாந்திரங்களுக்கு நுழையவே விடாத பெரும் ஆகாசத் தாமரை இலைகள் மாதிரி, கால காலங்களுக்கு மனசுக்குள் நிம்மதியை நுழையவே விடாத வெறுப்பின் படிமங்கள். அவமானத்தின் தீக்கங்கு பட்டுப்பட்டு கன்றிக் கருத்துப்போன மனசின் கசங்கல். இதை நீக்கி நிம்மதி காண்பது எப்போது?

வெறுப்பின் சாயலே படியாமல் இருப்பவர்கள் சிறு குழந்தைகள்தான். அதனால்தான் ராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னார், “எல்லா மனிதனுக்குள்ளும் ஒரு சிறு குழந்தை உண்டு. அது சுயநலமற்றது. குரோதத்தின் குணமறியாதது. உலகை ஒரு மழைத்துளி போல உள்ளங்கையில் ஏந்தி விளையாடுபவர்கள் அவர்கள். ஆனால், நீங்கள் காலப்போக்கில் உங்களுக்குள் இருக்கும் குழந்தையை கொன்று விடுகிறீர்கள். அதுதான் பிரச்னை. சந்தோஷத்தையும் துக்கத்தையும் திறந்த நெஞ்சோடு கொண்டாட முடியாமல் உள்ளே வைத்து குமைந்து சாகிறீர்கள். உங்களுக்குள் இருக்கும் குழந்தைகளை தீனி போட்டு வளருங்கள். அவர்கள்தாம் கடவுளிடம் உங்களை அழைத்து வருவார்கள்.”

நம் தலைமுறைக் குழந்தைகள் போல் சபிக்கப்பட்டவர்கள் வேறு எந்தத் தலைமுறையிலும் இந்தியாவில் இருந்ததில்லை. அவர்களை உந்தித் தள்ளும் பெற்றோர்கள் அவர்களிடம் உதாரணமாகக் காட்டும் வெற்றி பெற்ற மனிதர்கள் எல்லாம், மல்டி நேஷனல் கம்பெனிகளிலும் அமெரிக்காவிலும் போய் பணம் பண்ணியவர்கள்.

அப்படி வெற்றி மனிதர்களாக மாற முடியாத சிறார்களுக்கெல்லாம் ‘மாதிரி மனிதர்களாக’ இருக்கும் நம் கதாநாயகர்கள் முதுகின் பின்னாலிருந்து தம்மையும்விட கனமாக இருக்கும் அரிவாளை ஓங்கி, ‘ஏய்’ என்று சொல்லியபடியே யாரையோ வெட்டி திரையை சிவப்பாகச் செய்பவர்கள் மட்டுமே. இவர்கள் உலகில் லட்சியவாதம் இல்லை; தியாகம் இல்லை; தென்னாப்பிரிக்காவில் தன்னிடம் கெடுபிடி செய்த உயர் அதிகாரி ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவருக்குப் பரிசாக, சிறையில் இருந்தபோது செருப்பு தைக்கக் கற்றுக்கொண்டு ஒரு ஜோடி செருப்பை பரிசாக அளித்த காந்தியின் வாழ்வு அவர்களைத் தொடவே இல்லை.

“அவளைப் பழிவாங்காம விடவே மாட்டேன்” என்று ஓயாமல் அலறும் தொலைக்காட்சித் தொடர்கள் மத்தியில் வாழ்வைத் தொலைத்து வரும் நம் குழந்தைகளை, வெறுப்பெனும் முள் வேலியில் விழுந்திருப்பவர்களை, நாம்தான் மெல்ல விலக்க வேண்டும். வீட்டில் அன்பான வார்த்தைகளே ஒலிக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வாருங்கள்.

தீம் பார்க்குகளுக்குக் கூட்டிப்போவதை விடுத்து அணையாத

நெருப்பு ஆண்டாண்டுகளாக ஏழைகளின் பசி நீக்கும் வடலூர் வள்ளலாரின் திரு ஆலயத்துக்கு, பிள்ளைகளை அழைத்துச் செல்லுங்கள். வளர்ப்பதற்கு சில பூச்செடிகள், வசதியிருந்தால் ஒரு வளர்ப்புப் பிராணி என்று புதிய பந்தங்களை ஏற்படுத்திக் கொடுங்கள். அவர்கள் தவறு செய்யும்போது மன்னியுங்கள். மன்னிக்கப்பட்டவர்களே பிறரின் தவறுகளை மன்னிக்கிறார்கள்.

உமாமகேஸ்வரி டீச்சர் ஒருவரோடு இந்த ரத்த சரித்திரம் முற்றுப் பெறட்டும்.

# 5

## ஆன்மிகச் சிந்தனையின் உச்சமே, பகிர்ந்துண்ணல்தான்!

நீலகண்ட பிரம்மச்சாரி என்கிற தேசபக்தர் பாரதியாரின் வீட்டுக்கு வந்திருந்தார். ‘பாரதி, சாப்பிட ஏதாவது இருக்கா?’ என்றார் கம்மிய குரலில். ‘ஓய் நீலகண்ட பிரம்மச்சாரி, என்ன ஆச்சு?’ என்று பதறினார் பாரதியார். ‘சாப்பிட்டு நாலு நாள் ஆச்சு’ என்று பதில் வந்தது. வீட்டில் இருந்த சாப்பாட்டை உடனே பரிமாறச் செய்து, நீலகண்ட பிரம்மச்சாரி கண்ணீருடன் உண்ணும்போது நெஞ்சு வெடிக்க பாரதி எழுதிய பாடல்தான் -

‘இனியொரு விதி செய்வோம் - அதை

எந்த நாளும் காப்போம்

தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்

ஜகத்தினை அழித்திடுவோம்.’

பசியை ‘அன்னை இட்ட அடிவயிற்றுத் தீ’ என்றார் பட்டினத்தார். பசியை இன்னும் உயர்த்தி, ‘அது தேவியின் வடிவம்’ என்கிறது, தேவி மகாத்மியம்.

‘எந்தத் தேவி எல்லா உயிர்களிலும்


பசியின் வடிவில் உறைகிறாளோ...

அவளுக்கு நமஸ்காரம்

அவளுக்கு நமஸ்காரம்

அவளுக்கே நமஸ்காரம்.’

என் அத்தையின் நினைவு நாளில் சென்னை திருவல்லிக் கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலில் நானும் என் அக்காக் களும் தயிர்சாதம் விநியோகம் செய்வோம். தொன்னையில் தயிர் சாதத்தை வாங்கிக்கொண்டு சில பேர் கை கூப்புவர், சிலர் தலையசைப்பார்கள், சிலர் கைகொடுப்பார்கள். வார்த் தைகள் ஏதும் அங்கே வராது. ஆனால், அங்கே சொல்லாமல் சொல்லப்படுவது ஒன்றுதான் - ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே,’ என்ற வாழ்த்து, ‘அன்னதாதா... சுகிபவ’ என்ற நெஞ்சார்ந்த நன்றி. நம் கோயில்கள், எத்தனை தலைமுறையாக எரியும் பசித் தீயை அணைத்திருக்கின்றன என்று பார்த்தால், அவை தவச்சாலைகளாக மட்டுமல்ல அறச்சாலைகளாயும் இருந்தது நமக்குப் புரியும். பற்பல கோயில்களின் நைவேத்யப் பட்டியலே படு சுவாரஸ்யமானது. திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில், மதுரை) அழகருக்கு அக்கார அடிசில் எனும் சர்க்கரைப் பொங்கல். இந்த அழகருக்குத்தான் ஆயிரம் அண்டா நிறைய அக்கார அடிசில் படைப்பதாகக் கனவு கண்டாள் ஏழை பட்டர் வீட்டு ஆண்டாள். ஆண்டாளுக்கு எத்தனையோ ஆண்டுகள் பின் பிறந்த ஸ்ரீராமானுஜர், குட்டித் தங்கையின் ஆசையை நிறைவேற்றும் பொறுப்புள்ள அண்ணன்போல, அழகருக்கு ஆயிரம் அண்டா நிறைய அக்கார அடிசில் சமர்ப்பித்து ஆண்டாளின் அன்பான அண்ணன் ஆனார்.



ஸ்ரீமுஷ்ணத்தில் இருக்கும் பூவராக ஸ்வாமி கோயிலில் கோரைக்கிழங்கே நைவேத்யம். குற்றாலத்தின் குறும்பலா ஈசனுக்கு சுக்குக் காப்பியே சுகம். பின்னே? ஓயாமல் அருவிச் சாரலில் நனைந்து சளி பிடித்தால் என்ன செய்வதாம்? காஞ்சி வரதராஜப் பெருமாளுக்கு இட்லி; மல்லை ஸ்தல சயனப்பெருமாளுக்கு தயிர்சாதம்; உப்பிலியப்பன் கோயிலில் உப்பில்லா புளியோதரையின் சுண்டும் ருசி! உப்பிலியப்பப் பெருமாள், சிறு பெண்ணான பூமிதேவியை மார்க்கண்ட மஹரிஷியிடம் பெண் கேட்டாராம். ‘சின்னப் பெண். சமைக்கத் தெரியாது. சமைத்தாலும் உப்பிருக்காது’ என்று பதில் சொன்னார் பாசக்கார அப்பா. ‘உப்பில்லாமல் சாப்பிட்டா போச்சு’ என்று உடனே கல்யாணம் செய்து கொண்டாராம் பெருமாள். நம் வீட்டு ஆண்களுக்கெல்லாம் இந்த பெருந்தன்மை இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்?

இளையான்குடி என்னும் ஊர், பரமக்குடி பக்கத்தில் இருக்கிறது. அந்த ஈசனுக்கு கைக்குத்தல் அரிசிச் சாதமும் கீரையும்தான் அவ்வப்போது படைக்கப்படும் நைவேத்யம். 63 நாயன்மார்களில் ஒருவரான இளையான்குடி மாறனார், ஈசனுக்குப்

படைத்ததே அதைத்தானே! ஏழையான மாறனார் வீட்டில் ஒரு கைப்பிடி அரிசிகூட கிடையாது. மழை கொட்டிய ஓர் இரவில் வழக்கம்போல் சோதனை கொடுக்க சிவபெருமான் வந்து விட்டார் - ஒரு பசித்த சிவனடியார் வேடத்தில். கூரையின் மூங்கிலைப் பிடுங்கி விறகாக்கி, விதைத்த நெல்லை எடுத்து வந்து அரிசியாக்கி, தோட்டத்து கீரையை சமைத்து சிவனடியாருக்கு சோறு போட்டாராம் மாறனார். இத்தனைக்கும் பக்கபலமாக உதவிய அவர் மனைவியின் பெயர் எங்கும் பதியப்படவில்லை. என்னைக் கேட்டால் சரித்திரத்தில் பெயரில்லாது உறைந்துபோன அந்த மனைவியைத் தான் முதல் நாயன்மாராக அறிவித்திருக்க வேண்டும் என்பேன்.

உண்மையில் நம் 63 நாயன்மார்களின் வரலாறுகளில் பாதிக்கு மேல் பசித்தவருக்கு உணவளிக்கும் தர்மத்தைச் செய்து, அதனால் ஆண்டவனை தரிசிக்கும் பாக்கியம் பெற்ற தாத்பரியமே சொல்லப்படுகிறது. ‘செருப்புத் தைக்கும் மார்டின்’ என்ற கதையில் டால்ஸ்டாய் சொல்வதும் இதே சிந்தனையைத்தான். பரமபிதா தன்னைப் பார்க்க வருவதாக கனவில் சேதி வர, காத்திருக்கிறான் மார்டின். அவருக்காக உணவு சமைத்து வைத்து, பசியோடு வந்த சிலருக்கு அந்த உணவை பங்கிட்டுத் தந்துவிடுகிறான். ‘பரமபிதா ஏன் வரவில்லை?’ என்ற கேள்வியோடு தூங்கிப்போகும் அவனுக்கு, கனவில் தேவகுமாரன் சொல்கிறார், ‘பசியோடு வந்தவர்கள் வடிவத்தில் நான் வந்தேன்.’ இந்தத் தத்துவம் இல்லாத எந்த ஒரு மதத்தையும் உலகில் நீங்கள் காட்டிவிட முடியாது. அத்தனை சமயங்களும் சொல்லும் ஆன்மிகச் சிந்தனையின் உச்சமே, பகிர்ந்துண்ணல்தான். பசித்த வயிற்றில் விழும் சோறு, பகவான் மேல் சாற்றப்படும் புஷ்பங்களைவிட புனிதமானது.

அப்படி போடப்படும் உணவும் ‘நான் உணவளிக்கிறேன்’ என்ற கர்வமில்லாது கொடுக்கப்பட வேண்டும். ரமண மஹரிஷியின் ஆசிரமத்தில் ஒரு முறை, உணவுவேளையில் ஆசிரம வாயிலில் குவிந்த பரதேசிகளை ஒழுங்குபடுத்த வேண்டி, ஆசிரமப் பணியாளர்கள், ‘முதல் பந்தி பக்தர்களுக்குதான்; பரதேசிகள் வெளியே போய் நில்லுங்கள்’ என்றார்களாம். எல்லாப் பரதேசிகளும் வெளியே போய் நின்றனர். கொஞ்ச நேரம் கழித்துத்தான் பகவான் ரமணரைக் காணவில்லை என்று பணியாளர்கள் உணர்ந்தனர். ‘பகவான் எங்கே?’ என்று தேடியலைந்தால் வெளியே நின்ற பரதேசிகளின் பின்னால்

உட்கார்ந்து இருந்தாராம். ‘பரதேசிகளை வெளியே நிற்கச் சொன்னீர்களே, நானும் அவர்களில் ஒன்றுதானே. அதுதான் வெளியே நிற்கிறேன்,’ என்றாராம். சிப்பந்திகள் கண்ணீர் மல்க, அவரையும் மற்ற பரதேசிகளையும் உள்ளே அழைத்துப்போய் உணவளித்தனர்.

எந்தப் பந்தியிலும் முதலிடம் கொடுக்கப்பட வேண்டியது பட்டுக் கரைகளைவிட பசியெடுத்த வயிறுகளுக்குத்தான். எழுத்தாளர் அமரர் தி.ஜானகிராமனின் ‘பரதேசி வந்தான்’ என்ற கதை இன்று படித்தாலும் சிலிர்க்கச் செய்யும் ஒரு காவியம். பணக்கார வக்கீல் ஒருவர், ஏக பந்தாக்களோடு ஒரே மகனுக்கு கல்யாணம் செய்கிறார். முதல் பந்தி பொறுக்கியெடுத்த பந்தி. எல்லாரும் பெரிய மனிதர்கள். இதற்கு நடுவில் ஒரு பிச்சைக்காரன் எப்படியோ நுழைந்துவிடுகிறான். ஒரு வாய் சாப்பாடும் உள்ளே போய்விட்டது. வக்கீல் பார்த்துவிட்டார். அவரது அகந்தை சும்மா இருக்குமோ? பிடித்து வெளியே தள்ளிவிடுகிறார். தூண்டப்பட்ட பசித்தீயின் வெம்மையில் பரதேசி சாபமிடுகிறான்: ‘இன்னும் பதினைஞ்சு நாள்ல நீர் அழுதுகிட்டே போடற சாப்பாட்டை சாப்பிட வருவேன்.’ அதுபோலத்தான் நடந்தது. ஜம்மென்று இருந்த கல்யாண மாப்பிள்ளை, வக்கீலின் ஒரே பிள்ளை, அகால மரணமெய்தி விடுகிறான். சொன்னபடி பரதேசி வந்தான். ‘சாபமிட்டு என் பிள்ளையை பிரிச்சிட்டியே...’ என்று வக்கீல் விம்முகிறார். ‘நானா சாபமிட்டேன்? என் பசி சாபமிட்டது’ என்கிறான் பரதேசி.

பசித்த உயிருக்குச் சோறிடல் நம் பாரம்பரியத்தின் பெரும் தருமம். வாசல் அரிசிமாவுக் கோலத்தில் எறும்புகளும் முற்றத்தில் உலர்த்தும் தானியத்தில் குருவிகளும் பசியாறின. காகங்களுக்கும்கூட பசியாற்றிய அறத்தைச் சார்ந்தே, நம் முன்னோர்களின் வாழ்வு அமைந்திருந்தது.

அடுத்த முறை நம் வீட்டுக் குழந்தைகள் தட்டில் சோற்றை மீதம் வைத்து, அதை குப்பைத்தொட்டியில் கொட்டும்போது சோமாலியாவில் அன்றாடம் பட்டினியில் சாகும் குழந்தைகளைப் பற்றி அவர்களிடம் பேசுங்கள். ஏனென்றால், மானிடத்தின் மிக உக்கிரமான நெருப்பு பசிதான். அதை அணைக்க நீளும் கைதான் ஆண்டவனுக்கு மிக அருகில் செல்லும் கை.

# 6

## யாதுமானவள்

அண்மையில் நல்லபடியாக பெண்கள் தினக் கொண்டாட்டம் நடந்து முடிந்தது. அன்றும்கூட பெண்களுக்காகத் தரப்பட்ட ரகசிய செய்தி: ‘பெண்களை வாழ்த்துகிறோம், அவர்கள் அழகாக இருந்தால்!’ தோற்றம் மற்றும் உடல் சார்ந்தே ஒரு பெண்ணைப் பார்க்கும் பார்வைகள் கொண்ட ஒரு சமூகம், மகளிர் தினத்தை அளவுக்கு மீறிக் கொண்டாடுவதிலேயே ஓர் ஆண் ஆதிக்க மனப்பான்மை தெரிகிறதோ என்று எனக்குத் தோன்றுகிறது.

நூறாண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் பஞ்சாலையில் பணியாற்றிய பெண்கள் பலர், திடீரென்று தெருவில் இறங்கி, தமது வேலை நேரத்தைக் குறைக்கச் சொல்லி போராட்டம் நடத்திய நாள்தான் மார்ச் 8. அந்த நாள்தான் மகளிர் தினமாக பின்பு அறிவிக்கப்பட்டது. அமெரிக்கப் பஞ்சாலைப் பணிப் பெண்களின் போராட்டம் பல வருடங்கள் தொடர வேண்டியிருந்தது. இந்தியப் பெண்களின் போராட்டங்களும் பல்லாண்டு முயற்சி தேவைப் படுகிற போராட்டங்களே. முப்பத்து மூன்று சதவிகித ஒதுக்கீடு பாராளுமன்றத்தில் ‘பாஸ்’ ஆகுமுன் என் மகள் பாட்டியாகி விடக்கூடும்.

33 விழுக்காடு தர நம் ஆண்களுக்கு மனத்தடைகள்

இருக்கலாம். ஆனால், ஆதிசிவன் தயங்காது 50 விழுக்காடு கொடுத்துவிட்டார் - உமாதேவிக்கு. அர்த்தநாரீஸ்வரர் வடிவம், சிவனின் 64 வடிவங்களில் தனிச் சிறப்பு பெற்றது. ஆணும் பெண்ணும் இவ்வுலகின் எண்ணிக்கையில் சமபங்கு வகிப்பவர்கள் என்ற அற்புத தரிசனத்தைத் தரும் தோற்றம். ஆணுக்குள் உறையும் பெண்மையும் பெண்மையின் மென்மைக்குள் லேசாய்ப் பூக்கும் ஆண்மையும் ஒரு குடும்பத்தின் வெற்றிக்குத் தேவை என்ற பாடம் தரும் தரிசனம் அது. பரமசிவனின் இடது புறம் எப்போதும் சக்திக்கானது. மார்க் கண்டேயன் லிங்கத்தைக் கட்டிக்கொண்டு இருக்கிறான். அவனது ஆயுள் முடிந்தது என்று பாசத்தைப் போட்டு அவனை இழுக்க வரும் யமனின் கயிறு மேலே பட வெடிக்கிறது சிவலிங்கம். வெளிப்பட்ட சிவனின் இடது கால் எமனை எற்றி எறிகிறது. தன் பிள்ளைக்கு வரும் ஆபத்தைக் காணப் பொறாது அதை எதிர்க்கும் தாயின் வேகம், தந்தையின் வேகத்தைக் காட்டிலும் அதிகம் அல்லவா? அதனால்தான் இடப்புறம் இருக்கும் சக்திக்கான கால், வலது காலையும் விஞ்சி யமனைத் தூக்கி அடித்தது போலும்!



பெண் - அவளின் தாய்மை வலிமையானது. மென்மை யானதும்தான். நாகப்பட்டினத்தில் கோயில் கொண்டுள்ளாள் அம்பிகை நீலாயதாட்சி. தமிழில் கருந்தடங்கண்ணி. எல்லாக் கடவுளர்க்கும் தாமரைக் கண்கள். ஆனால், தாமரையின் இளஞ்சிவப்புகூட தம் குழந்தைகளை வருத்தும் என்று கருமை நிறமும் மென்மையான ஒளியும் கொண்ட குவளை இன நீலோற்பவ மலர் போல கண்களைக் கொண்டவள் இந்த கருந்தடங்கண்ணி. அவள் அனைவருக்கும் தாய். சிவனுக்கும்கூட. ‘அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள்’ என்கிறார் அபிராமி பட்டர். கணவனின் பார்வையில் அவள் முதலில் காதலி, மனைவி, அவன் பிள்ளை களுக்குத் தாய். ஆனால், அவன் வயோதிகத்தின் மடியில், வாழ்வின் சாயங்காலத்தில் வந்து சேரும்போது அவளே அவனுக்குத் தாயும் ஆகிறாள் என்பதே பெண்ணின் மகத்துவம்.

தாய்மை பொலியும் அவளது மென்மை ஒரு அழகென்றால், மகளாக அவள் எடுத்துக் கொள்ளும் உரிமை பேரழகு.

சிறுவயதில் பாட்டியிடம் கேட்ட கதை, மொட்டைமாடியில், நட்சத்திரங்களின் ஒளியில், பாட்டியின் பாசம் ததும்பும் குரலில் வெளிப்படும் கதைகள் கண்முன் நாடகமாகத் தோன்றும் வசந்த காலங்கள் அவை.



கொல்கத்தா காளி

திருமலை நாயக்கர் குமர குருபரரைக் கூப்பிட்டு, உபசாரம் செய்து, மதுரை மீனாட்சி அம்மன் மேல் பாடுன்னு கேட்டாராம்.

'உம்' - இது நாங்கள். 'உம்' கொட்டாவிட்டால் பாட்டிக்குக் கதை மேலே ஓடாது.

குமரகுருபரர் பாட ஆரம்பிக்கிறார். பாட்டைக் கேட்க மீனாட்சியே ஒரு சின்னக் குழந்தையாக வந்தாளாம். பட்டுப் பாவாடை, சட்டை, நெத்தியிலே சுட்டி, கழுத்தில் மாலை, கால் சலங்கை ஜல் ஜல்னு சத்தம் போட மீனாட்சி நடந்து வந்து திருமலை மன்னரோட மடியிலே போய் உட்கார்ந்தாளாம். 'யாருடா இந்தக் குழந்தை!'ன்னு எல்லோரும் திகைச்சுப் போய்ட்டாங்களாம். திருமலை மன்னர் கழுத்து மாலையை எடுத்து குமரகுருபரர் கழுத்தில் போட்டு, கருவறைக்குள்ளே ஓடி மறைஞ்சு போனாளாம் அந்தக் குழந்தை..."

'உம்' கொட்டவும் மறந்து, பட்டுப் பாவாடை நகைகளுடன் ஜொலிக்கும் பெண் குழந்தை மன்னரின் மடியில் உட்கார்ந்த காட்சியை நேரே பார்த்தது போன்ற பரவசத்தில் நாங்கள் உறைந்திருப்போம். பாட்டி பிசைந்து வைத்த ஒரு சட்டி சோற்றையும் சாப்பிட்டு முடித்திருப்போம் என்பது வேறு கதை.

கன்னியாகுமரியில் அவளின் வடிவம் வேறு. சிற்றாடை அணிந்த பதினாறு வயதுப் பெண். கொஞ்ச நேரம் அவளையே பாருங்கள். திடீரென்று துள்ளிக் குதித்து ஓடி விடுவாளோ? அலை அலையான சிரிப்பு, கேலி, கிண்டல், அடுத்த நிமிடம் எதற்கோ அழுகை, வேறொரு நிமிடம் ஏதோ நினைவோட்டத்தில், வவ்வும் துயரத்தின் சிறு சாயல். அவள் மூக்கில் மலர்ந்திருக்கும் மூக்குத்தி, கப்பலைக் கரை சேர்த்த கலங்கரை விளக்கம்.

காசியில் பாருங்கள். பசித்த வயிற்றுக்குச் சோறு போடும் அன்னபூரணி. ஒரு முறை எங்கள் வீட்டில் வேலை செய்த பெண், வீட்டிலிருந்து ரூபாய் ஏழாயிரத்தை திருடி விட்டாள். ஒரே அமளி. எங்கள் குடியிருப்பில் எவை எவை காணாமல் போனதோ அதெல் லாம் இப்போது, அவள் தலையில் கட்டப்பட்டு தீவிர விசாரணை மணிக்கணக்காக நடந்தது. ஏமாந்து போனோமே என்று எனக்குள் சுரக்கும் கோப அமிலம். வயதான என் அத்தை வந்தாள். விஷயம் தெரிந்ததும், என் கோபத்தை சமாதானம் செய்து விட்டு, ‘சரி, சரி விட்டுத் தள்ளு. அந்தப் பொண்ணும் அஞ்சு மணி நேரமா அழுதுக்கிட்டு நிக்கறதே. ஏதாவது சாப்பிடக் கொடு. பின்னால விசாரணையை வெச்சுக்கலாம்’ என்றார்.



எரோம் ஷர்மிளா

அதற்குப் பின் எத்தனையோ நாட்கள் என் அத்தையின் கைகளை நான் என் கன்னத்தில் பதித்துக் கொண்டிருக்கிறேன். சோற்றின் மணம் வீசும் கை அது. காசி அன்னபூரணியின் கையை கன்னத்தில் வைத்துக்கொண்டாலும் அதே வாசம்தான் வீசுமோ!

கொல்கத்தாவில் அவள் உக்கிர காளி. தவறு செய்தவனை, தர்மம் கொன்றவனை, அவமானப் படுத்தியவனை கிழித்து

எறியும்- நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும் நிறைந்த சுடர்மணிப் பூண். காளியின் உக்கிரத்தைத் தணிக்க வேறு வழியில்லாமல் சிவன் அவளது பாதங்களின் கீழ் படுத்தார். தன் பாதம் அவர் தலையில் பட்டுவிட்டதைத் தெரிந்து ‘ஆ’ என்று நாவை நீட்டினாள், காளி. அதன் பிறகே அவளது ஆவேசம் அடங்கியது.

தன் இனத்து மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். ராணுவப் பாதுகாப்பு என்ற பெயரில் மணிப்பூர் பெண்கள் சூறையாடப் படக்கூடாது என்று 12 வருடங்களாக கையில் ஊசி மூலம் செலுத்தப்படும் திரவ உணவை மட்டுமே உட்கொண்டு போராட்டம் நடத்தி வருகிறாள் எரோம் ஷர்மிளா எனும் பெண். இன்னும் இந்தியாவில் இது போல் அறத்திற்காகப் போராடும் எத்தனை எத்தனை காளியின் வடிவங்கள்..!

பெண். அவள் சக்தி. சிவனுக்கும் தாய். சின்னக் குழந்தையின் வடிவில் அவளே சிரிக்கிறாள். சிறுமியாக, பருவ மங்கையாக, பசியாற்றும் அன்னபூரணியாக, போராடும் காளியாக - எல்லாமாக அவளே இருக்கிறாள்.

இயக்கமும் மயக்கமும் அவள் இடும் பிச்சை. இன்பமும் துன்பமும் அவளின் அசைவு. அவளே தொடக்கம். அவளே நிறைவு. பிரபஞ்சத்தின் பெரும் சக்தி அவள்.

மகளிர் தினங்களைப் பிறகு கொண்டாடலாம். முதலில் மகளிரைக் கொண்டாடுவோம்.

# 7


## பரம்பொருள் ஒன்றே!

கல்லூரி நாட்களில் சென்னை கம்பன் கழகம் நடத்தும் இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டேன். அதற்காக இஸ்லாமிய இலக்கியமான சீறாப்புராணத்தைப் புரட்டிப் பார்த்தபோது ஒரு சம்பவத்தைக் கவனித்தேன். நபிகள் நாயகம் அவர்களும், அவரின் உறவினர் ஒருவரும் பகைவர் துரத்த ஒரு குகையில் வந்து மறைந்திருந்தனர். ‘அவர்கள் பலர், நாமோ இருவர்’ என்று உறவினர் பதற, ‘நாம் இருவர் அல்ல; மூவர்’ என்றார் நபிகள். ‘இருவர்தானே இருக்கிறோம். மூன்று பேர் எப்படி?’ என்று, கூட இருந்தவர் குழம்ப, ‘இறைவனும் நம்மோடு இருக்கும் போது, நாம் மூவர்தானே?’ என்று நபிகள் விளக்கும் படலத்தை சீறாப்புராணத்தில் படித்தபோது, என்னுள் ஒரு மின்னல் -

“மூவரல்ல நாம் நால்வர்” என்று முதலாழ்வார்கள் உணர்ந்த வைணவ மரபுச் சம்பவம் ஒன்று உண்டே!

ஒரு கரிய மழை நாள் இரவு. கொட்டும் மழையில் ஒரு வீட்டின் திண்ணையில் பொய்கையாழ்வார் ஒதுங்கினார். சிறிய இடம். ஒருவர் மட்டும் படுக்கலாம். படுத்துக்கொண்டார். சற்று நேரத்தில் அங்கே பூதத்தாழ்வார் வந்தார். ‘ஒருவர் படுக்க, இருவர்

உட்காரலாம்' என்று இருவரும் உட்கார்ந்தார்கள். சற்று நேரத்தில் மூன்றாவதாக பேயாழ்வார் வந்து சேர்ந்தார். 'இருவர் உட்காரலாமெனில் மூவர் நிற்கலாம்' என்று அவரும் ஒதுங்க மூவரும் நின்று கொண்டார்கள். இருளில் அவர்களுடன் நான்காவதாக ஒருவர் இருப்பதை உணர்ந்தார்கள். மூவரல்ல; நாம் நால்வர் - கடவுளும் நம்முடன் இருக்கிறார் என்று கண்டு கொண்டனர். இது திருக்கோவிலூரில் நடந்த சம்பவம்.



பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார்

'இருவரல்ல நாம் மூவர்' என்று நபிகள் சொன்னதும், 'மூவரல்ல நாம் நால்வர்' என்று ஆழ்வார்கள் உணர்ந்ததும் ஒரே கோட்டில் சந்திக்கும் இந்த விந்தைதான் நம் மதங்களை இணைக்கும் வசீகரமான பாலம்.

இறைவன் கால எல்லைகளைக் கடந்தவன் என்கிறது இந்து மதம். 'காலமும் கணக்கும் நீத்த காரணன்' என்று கம்பர் சொல்கிறார். அந்த இறைவனை சத்ஸ்ரீஅகால் என்று சீக்கிய மதம் அழைக்கிறது. அகால் என்கிற வார்த்தைக்கு ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள். காலமில்லாதது எதுவோ, காலத்தை விஞ்சியது எதுவோ அதுவே கடவுள். காலத்தை விஞ்சிய கடவுளின் கால்களைப் பற்றினால் காலனையே வெல்லலாம் என்பது இரு

மதங்களும் விளக்கும் நம்பிக்கை.

சீனாவின் தொன்மையான மதமான ஷெனிஸம் வழங்கும் பாரம்பரிய கதை இது.

ஒவ்வொரு ஆண்டும் சீனப் பேரரசர் தன் குடிகளில் யாரேனும் ஒருவர் வீட்டுக்குப் போவார். அப்படி ஒரு விருந்துக்கு பேரரசர் போனபோது, கூட்டம் கூட்டமாக எறும்புகள் எங்கோ செல்வதைக் கண்டார். எறும்புகள் மொழியை அறிந்த, தன்னுடன் வந்த ஞானியிடம், எறும்புகள் எங்கே போகின்றன என்று கேட்டறியச் சொன்னார்.

எறும்புகளிடம் பேசிய ஞானி சொன்னார்: “ஒரு பேரரசனுக்கு வழங்கப்படும் மகத்தான விருந்துக்கு இவை செல்கின்றன!” இதைக் கேட்ட சீன மன்னருக்கு பெருமை தாங்கவில்லை. ஆனால், இதென்ன? எறும்புகள் வேறு திசையில் அல்லவா செல்கின்றன? அவற்றின் பாதையை மன்னரின் படை தொடர்ந்தது. எறும்புகள் போனதோ ஒரு மிக எளிய ஒரு குடிசைக்கு. “இதுவா பெரு விருந்து? என்ன நடக்கிறது?” மன்னர் கோபப்பட்டார். அந்நேரம் அவ்வழியே போன பிச்சைக்காரர் ஒருவர் தள்ளாடி விழ, குடிசைக்குச் சொந்தக்காரர் அவரை உள்ளே அழைத்துச் சென்று, நல்ல நீரும் உணவும் கொடுத்து, களைப்பு தீர விசிறியபடி நின்றார்.

எறும்புகளிடம் விசாரித்த ஞானி தயக்கத்துடன் மன்னரிடம் சொன்னார்: “மன்னா தனக்கான உணவை, பசியால் தள்ளாடும் விருந்தாளிக்குக் கொடுத்த குடிசையின் சொந்தக்காரர் தந்த விருந்தே பெரியது என்று எறும்புகள் நினைக்கின்றன. அங்கு சிதறும் உணவைத் தின்பதே அவற்றின் பசியைத் தீர்க்குமாம். சுயநலத்துடன் வழங்கப்படும் ஆடம்பர விருந்துகள் வெறும் கேலிக் கூத்துகளாம்.” சீன மன்னருக்கு ஞானம் பிறந்தது என்று கதை போகிறது.

இது வேறு எங்கோ நாம் கேட்ட கதைபோல இருக்கிறது அல்லவா? மிகப் பிரமாண்டமான வேள்வியைச் செய்துவிட்டு பெருமை பொங்க தானம் அளித்தார் தர்மபுத்திரர். தானம் செய்த இடத்தில் வந்து புரண்டு புரண்டு எழுந்தது ஒரு கீரி. அதன் உடலில் பாதி தங்கம் போல் மின்னியது. “எதற்காகப் புரள்கிறாய்?” கீரியைக் கேட்டார்கள். “மிகப் பெரும் தானம் நடக்கும் இடத்தில் புரண்டால், மீதி உடலும் தங்கமாகும் என்று

நம்பி வந்தேன். இந்த இடத்தில் பெரும் தானம் நடக்கவில்லை போலும். அதனால்தான் என் மீதி உடல் தங்கமாகவில்லை” என்றது, கீரி.

அதைக் கேட்ட தர்மர் பதறிப் போனார். “இது என்ன விந்தை? இதைவிடப் பெரிய அளவில் யாராவது தானம் செய்யமுடியுமா என்ன? எந்த இடத்தில் நடந்த யாகத்தில் பாதி உடல் தங்கமானது?” என்று கீரியை விசாரித்தார். “அது யாகத்தில் கிடைத்ததல்ல” கீரி பதில் சொன்னது.

“மிகச் சிறிய குடும்பம். சாப்பிட ஒன்றும் இல்லை. கொஞ்சம் மாவு கிடைத்தது. அதைக் குடும்பத் தலைவர் கொண்டு வரும் வரையில் உயிரைக் கையில் பிடித்திருந்த குடும்பம் அவர் வந்ததும் அந்த மாவில் ரொட்டி செய்து உண்ணத் தயாரானது. அந்த நேரத்தில் பசியோடு ஒருவர் வர, தன் பங்கு ரொட்டியை கணவன் அவரிடம் தந்தான். அது போதாமல் போகவே மனைவி, பின் மகன், பின் மருமகள் என நால்வரும் தம் பங்கு ரொட்டியை, பசியோடு வந்தவருக்கு முழுமையாக விட்டுக் கொடுத்த அந்த வீட்டில் சிதறிய சிறு மாவின் மீது நான் நகர்ந்தபோது என் பாதி உடல் தங்கமாகியது” என்றது கீரி. அதைக் கேட்ட தர்மபுத்திரர் அயர்ந்து போனார். ‘தானே எல்லாம்’ என்ற தற்பெருமை அப்போதே அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்ற கதையை மகாபாரதம் பேசுகிறது.

சீனப் பாரம்பரிய சமயத்தையும் மகாபாரதத்தையும் இணைக்கும் புனித சரடு எது?

உன் மதம் பெரிதா? என் மதம் பெரிதா? உன் கோயில் உயர்ந்ததா? என் கோயில் உயர்ந்ததா? முதல் மரியாதை எனக்கா? உனக்கா? எது முதலில் வந்தது? எது பின்னால் சேர்ந்தது - ஆயிரம் சர்ச்சைகள் நமக்குள். எல்லா மதங்கள், எல்லா நம்பிக்கைகள், எல்லா கலாசாரங்களும் சொல்லும் அடிப்படை உண்மைகள் மிக எளியவை. மிக அடிப்படையானவை. ஒரு சிறு ஊற்றிலிருந்து கிளம்பும் வேறு வேறு பேரருவிகள்.

ஒன்று பரம்பொருள். நாம் அதன் மக்கள். உலகின்பக் கேணி என்றான் மகாகவி. எந்த வீட்டில் இருந்தாலும் தாய் ஒன்றுதான். எந்தக் கோயிலுக்குப் போனாலும் கடவுள் ஒன்றுதான்.

# 8

## விடை தேடும் வாழ்க்கைப் பயணம்

“மன்னும் இமயமலை எங்கள் மலையே...” என்று பாரதி போற்றிப் பாடும் நம் இமயமலை, எத்தனையோ ஆன்மிகச் சிந்தனைகளின் அபூர்வ உச்சம்! ஆதிசங்கரர் மானா கணவாயின் வழியே இமயமலைத் தொடரைக் கடந்து சென்று கயிலையில் சிவ-பார்வதி தரிசனம் பெற்றது இந்து மதத்தின் மகத்தான ஒரு நிகழ்வு. சிவபெருமானை கண்டு, மகிழ்ந்து, கால் முதல் தலை வரை அவரை ‘பாதாதி கேசமாக’ப் புகழ்ந்து பாடி, அது மனநிறைவு தராமல், மீண்டும் தலை முதல் பாதம் வரை விரிவாகப் பாடினார்.

அடுத்து இருந்த சக்தியைப் பார்த்து, அவளின் எழிலால் வாய் அடைத்துப்போன அவருக்கு உதவி செய்ய, பார்வதியைப் பற்றித் தானே பாடிய நூறு பாடல்களை சிவபெருமான் தந்தார். திரும்பும் வழியில் அப்பாடல்களில் பாதியை சங்கரரிடம் இருந்து, வாயிலில் காத்து நின்ற நந்தி தேவன் கவர்ந்து கொண்டார்.

சிவன் திரும்பவும் காட்சி தந்து உமையைப் பாடும் ஆற்றலையும் 5 லிங்கங்களையும் ஆதிசங்கரருக்குத் தந்து அருளியிருக்கிறார். சிவபெருமான் இயற்றிய முதல் நாற்பத்து ஒன்பது பாடல்கள், ‘ஆனந்த லஹரி’ என்ற பெயரிலும் சங்கரர் இயற்றிய ஐம்பத்தியோரு பாடல்கள் ‘சௌந்தர்ய லஹரி’ என்ற

பெயரிலும் இன்றும் வழங்கி வருகின்றன. சிவன் கொடுத்த ஐந்து லிங்கங்களில் போக லிங்கம் காஞ்சியிலும், முக்திலிங்கம் கேதார்நாத்திலும், வரலிங்கம் நீலகண்ட க்ஷேத்திரமான நேபாளத்திலும், யோக லிங்கம் சிருங்கேரியிலும், மோட்சலிங்கம் சிதம்பரத்திலும் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.



இமயமலையின் மானஸரோவர் ஏரி

இந்த மலைதான் எத்தனை அபூர்வமான உயரங்களுக்கு மனித மனங்களை அழைத்துச் செல்கிறது! ஒருமுறை வியாசரும் அவரது மகனான சுகமுனிவரும் இமயமலையின் மானஸரோவர் ஏரியின் வழியே சென்றார்கள். அங்கு நீராடிக்கொண்டிருந்த தேவமங்கையர் சுகர் வருவதைக் கண்டும் சலனமில்லாது தொடர்ந்து நீராடினார்கள். அடுத்து வியாச முனி அவ்வழியே வந்தார். தேவமங்கையர் உடனே விரைந்து கரையிலிருந்த தம் ஆடைகளை எடுத்துத் தம்மை மறைத்துக் கொண்டார்கள். வியாசர் அதிசயித்துப் போனாராம். "வயதான என்னைப் பார்த்து ஆடைகளை எடுத்து அணிந்த நீங்கள், இளைஞனான என் மகனைப் பார்த்தும் தொடர்ந்து நீராடினீர்களே, ஏன்?" என்று கேட்டார்.

"சுகர் பரப்பிரும்மத்தில் ஒன்றியவர். ஆண்-பெண் வடிவத் தோற்றங்களைப் பற்றிய சிந்தையே இல்லாதவர். அவர் கண்களுக்கு நாங்கள் பட்டாலும் நாங்களும் அவருக்கு பரப்பிரும்ம ஸ்வரூபமே. ஆனால், உங்கள் கண்களுக்கு நாங்கள் பெண் வடிவங்களாகத் தெரிகிறோம்" என்று பதில் வந்தது. வியாசர்

கண்ணனிடமும் இதே பதிலைக் கேட்டார் என்றும் ஒரு கதை உண்டு.

இமயமலையிலிருந்து புறப்படும் கங்கையை கடக்க வேண்டி இருந்தது கண்ணனுக்கு. கங்கையை நோக்கி, “பிரம்மச்சாரிக்கு வழிவிடு” என்று அவன் சொன்னதும் கங்கை பிரிந்து வழிவிட்டது. சற்று முன்தான் கோபியருடன் கிரீடையில் அவன் ஈடுபட்டதைக் கண்ட வியாசர் திகைத்தார். கண்ணனிடம் விசாரித்தார். “நீ பிரம்மச்சாரியா, எப்படி?” என்று கேட்டார். அதற்கு கண்ணன், “ஆத்மா ஈடுபடாதபோது புலன்கள் எதையும் அறிவதில்லை. புலன்கள் ஆத்மாவின் வாசல்கள் மட்டுமே” என்றான். அந்த மானஸரோவர் ஏரியில் இன்றைக்கும் கைலாஷ் யாத்திரை செல்கிறவர்கள் அதிகாலை மூன்று மணிக்கு ஒளிப்பிழம்புகள் வானில் வரிசையாகத் தோன்றி ஏரி நீரில் மூழ்கிச் செல்வதைப் பார்க்க முடிகிறது. ‘மாநிலமீது இது போல் பிறிதில்லையே’ என்று இமயத்தை பாரதி பாடியது எத்தனை பொருத்தம்!

இமயமலையில் உச்சச் சிகரமான எவரெஸ்டில் ஏற இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து எத்தனையோ பேர் முயற்சி செய்தார்கள். 1953-ல் முதல் வெற்றி கிடைத்தது, ஹிலாரி-டென்சிங்குக்கு. இவர்களுக்கு முன் நூறு நூறு பயணிகள் அடைய நினைத்து பாதி வழியில் பயணம் தொடர முடியாமலோ, பனிப்புயலில் சிக்கியோ காணாமல் போன கதைகள் ஏராளம். ஆனால், ஏறுகிறவர்களின் ஆன்மாவை புனிதப்படுத்தும் ஒப்பற்ற மாமலையாக இமயாசலன் நிற்கிறான்.

ஹிலாரியோடு கூடப்போன எடுபிடி ஆள்தான், டென்சிங் நார்கே. பரம்பரை பரம்பரையாக இமயமலையைத் தம் தாயாக நினைத்து வணங்கும் ஷெர்பாக்கள் இனத்தைச் சேர்ந்த திபெத்தியர்தான் டென்சிங். ஹிலாரி தன்னோடு துணையாக வரும்படி டென்சிங்கைக் கேட்டபோது, உலக மலை ஏறும் பயணிகளின் சாதனைப் பாதையில் ஒரு புதுக்கதவு திறந்தது. எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தபோது டென்சிங் அங்கு நிற்பதை படம் எடுத்த ஹிலாரி, ஏனோ தன்னைப் படம் எடுத்துக் கொள்ளவில்லை. ஏறவே முடியாத மலைச் சிகரத்தில் விடா முயற்சி ஒன்று மட்டும் துணை நிற்க, உயிரைப் பணயம் வைத்துச் செய்து மகத்தான வெற்றியின் பொன்னான நொடியை தன் எடுபிடியான டென்சிங்குக்கு சமர்ப்பணம் செய்துவிட்டார் ஹிலாரி. அதுமட்டுமல்ல தனக்குக் கிடைத்த பரிசுகளின் பெரும்

பங்கை ஷெர்பாக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான அறக்கட்டளைகள் ஏற்படுத்துவதில் செலவழித்துவிட்டார். மற்றவரின் வேலையை, உழைப்பை தான் உறிஞ்சி, அவர்களுக்கான புகழையெல்லாம் தாங்கள் ஸ்வீகாரம் செய்துகொள்ளும் உலகில், ஹிலாரியின் ஆன்மா இமயமலையைவிட விஸ்வரூபம் எடுத்து எப்படி நின்றது? இமயம் தந்த ஆன்மிக தரிசனம் மட்டும்தான் இதைச் சாதித்திருக்க முடியும், இல்லையா?

டாக்டர் ஹோவர்ட் சாமர்வெல்லின் வாழ்க்கை அதைவிட விசித்திரமானது. டாக்டர் சாமர்வெல் எவரெஸ்ட் ஏற முயன்று தோற்ற பலரில் ஒருவர். ஒருமுறை ஏழு ஷெர்பாக்களுடன் தன் எவரெஸ்ட் பயணத்தைத் தொடங்கினார் அவர். ஷெர்பாக்களின் வேண்டுகோளுக்கு மாறாக புதுப்பாதையைத் தேர்ந்தெடுத்தார். அந்தப் பாதையில் ஏறிக்கொண்டிருந்தபோது திடீரென்று மாபெரும் ‘அவலான்ஷ்’ (Avalanche) என்ற பனி அருவி, கண்முன்னே மேலிருந்து திடீரென்று தரை இறங்கக் கண்டார். மரணம் அவர்களை கபளீகரம் செய்யப்போகும் கொடூரத்தைப் பார்த்தபடி நின்றபோது திடீரென்று அந்தப் பேரதிசயம் நிகழ்ந்தது. இமாலயத்தின் பிரசித்தி பெற்ற ஒரு பனிப்பாறை, குச்சி மாதிரி நீட்டிக் கொண்டிருந்ததில் அந்தப் பனி அருவி இரண்டாகப் பிளந்து டாக்டர் சாமர்வெல்லின் இருபுறமும் விழுந்தது. ஏழு ஷெர்பாக்களும் கண்ணெதிரே காணாமல் போக, டாக்டர் மட்டும் பிழைத்தார். தன்னைக் காப்பாற்றிய பனிப்பாறையைப் பார்த்தார். அது ஒரு சிலுவையின் வடிவத்தில் இருந்தது.

“ஆண்டவரே என்னை மட்டும் ஏன் உயிர்ப்பித்தீர்? நான் மட்டும் ஏன் பிழைத்தேன்?” என்று கதறி அழுதார். தன் நண்பர்களோடு சேர்ந்துகொள்ள தானும் பனிப்பாறையில் குதிக்க நினைத்தார். ஆனால் தன்னை மட்டும் ஆண்டவர் காப்பாற்றியதில் ஒரு செய்தி இருந்ததாக அவருக்குத் தோன்றியது. ‘ஏன் நான் மட்டும் காப்பாற்றப்பட்டேன்?’ - இந்தக் கேள்விக்கு பதில் தேடி இந்தியா முழுதும் அலைந்தார். திருவனந்தபுரத்தின் அருகே உள்ள நெய்யூர் என்ற சிறு ஊரில் பயணம் செய்துகொண்டிருந்தபோது தன் கேள்விக்கான பதில் கிடைத்தது.

அந்த ஊரில் ஒரே டாக்டர் பணியாற்றிக்கொண்டிருந்த ஒரு ஓட்டை மருத்துவமனையில் 500 நோயாளிகள் காத்திருந்ததைப் பார்த்தார். தன் மருத்துவப் பணியை அந்த நிமிடமே அங்கே

தொடங்கினார். தன் சொத்துகளை விற்று அந்த மருத்துவமனையை பிரமாண்டமாகக் கட்டினார். அந்தப் பகுதியில் மரணத்தை விதைத்து வந்த காலரா நோயோடு போராடினார். இருபது ஆண்டுகள் பணி செய்துவிட்டு இங்கிலாந்து திரும்பி அமைதியாக இறந்தார்.

சாமர்வெல் போல நம்மையும் ஒரு கேள்வி துரத்துகிறது. நம் வாழ்வின் பொருள் என்ன, எதற்காக இந்தப் பிறவி? இந்தக் கேள்விக்கான பதில் ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் பிரத்யேகமானது. அதற்கான பதில், இமயம் மாதிரியான ஆன்மிகத் தலங்களில் கிடைக்கலாம். அல்லது அதை ஒத்த நம் மனத்தின் மௌனப் படிமங்களில் கிடைக்கலாம். அதைத் தேடுவதே நம் வாழ்வின் மகத்தான ஆன்மிகப் பயணம்.

# 9

## எந்த மனதில் தைரியம் வரும்?

அண்மையில் காஞ்சிபுரம் சென்றபோது திருவெஃகா என்ற கோயிலுக்குப் போனேன். இங்கு பெருமாளின் பெயரே ரொம்ப வித்தியாசமானது. ‘சொன்ன வண்ணம் செய்த பெருமாள்’ என்று பெயர், இங்கே துயில் கொண்டிருக்கும் ரங்கநாதருக்கு. திருமழிசை ஆழ்வார், இந்தக் கோயிலில் இருந்தபோது, தனக்குப் பணிவிடைகள் செய்த ஒரு கிழவியைச் சட்டென்று இளம் பெண் ஆக்கிவிட்டாராம். இதைக் கேள்விப்பட்ட அந்த நகரத்து அரசன் தன் கிழத்தனத்தையும் போக்குமாறு இவரது சீடன் கனிகண்ணன் மூலம் சொல்லி அனுப்பினான். ஆழ்வார் மறுத்துவிட்டார்.

அரசன் கோபம் கொண்டு சீடன் கனிகண்ணனையும் ஆழ்வாரையும் நகரத்தை விட்டு வெளியேற உத்தரவு போட்டான். திருமழிசை ஆழ்வார், கோயிலில் சயனக் கோலத்தில் இருந்த பெருமாளையும் ‘எழுந்திரு போகலாம்’ என்று சொல்ல, அதன்படியே அவரும் தன் பாம்பணைப் படுக்கையைச் சுருட்டிக்கொண்டு உடன் சென்றுவிட்டாராம். இதைப் பார்த்து மற்ற தேவதைகளும் உடன் சென்றுவிட, கோயில்கள் காலியாகிவிட்டன. அரசன் தன் தவற்றை உணர்ந்து ஆழ்வாரை அணுகி மன்னிப்புக் கேட்க, ஆழ்வார் திருமாலிடம் ‘சரி வாரும்;

திரும்பச் செல்லலாம்' என்று சொல்ல, அவரும் திரும்ப வந்து படுத்துக் கொண்டாராம்! இந்தக் கதையின் ஆதாரம், திருமழிசை ஆழ்வார் பாடியதாகச் சொல்லப்படும் இரு தனிப்பாடல்கள்:



திருவெஃகா கோயில்

கனிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி

மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - துணிவுடைய

செந்நாப் புலவனும் செல்கின்றேன் நீயும் உன்றன்

பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்.

- என்று முதல் பாடல் எழுதி, சமாதானம் ஆன பின் இரண்டாம் பாடல் எழுதினார்:

கனிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி

மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் - துணிவுடைய

செந்நாப் புலவனும் செலவொழிந்தான் நீயுமுன்றன்

பைந்நாகப் பாய் படுத்துக்கொள்.

என்ன அழகான வெண்பா! இரு வெண்பாக்களிலும் உள்ள 'துணிவுடைய செந்நாப் புலவன்' என்ற சொற்றொடரில் என்ன

ஒரு கம்பீரம்! சமண மதத்தில் மருள் நீக்கியாராக இருந்தவர் திருநாவுக்கரசராக மாறி சைவத்தில் சேர்ந்துவிட்டார் என்று கேள்விப்பட்டதும் மன்னன் மகேந்திர பல்லவன் கோபப்பட்டான். அவரை விசாரணைக்கு அழைத்துவர ஆள் அனுப்பினான். கட்டளையைக் கொண்டுபோன ராஜ தூதர்கள் அந்த மகா புருஷரைக் கொஞ்சம் அச்சுறுத்தினார்கள்.

'எனக்குத் தலைவன் சிவபெருமான்தான்; உங்களுடைய அரசன் கட்டளையை நான் மதிக்க மாட்டேன்!' என்று திருநாவுக்கரசர் கூறித் தூதர்களை திடுக்கிடச் செய்தார்.

'உம்மைச் சுண்ணாம்புச் காளவாயில் போடுவோம்; யானையின் காலால் மிதிக்கச் செய்வோம், கழுத்திலே கல்லைக் கட்டிக் கடலில் போடுவோம்' என்றெல்லாம் தூதர்கள் பயமுறுத்தியபோது திருநாவுக்கரசர் ஒரு பாடலைப் பாடினார்.

'நாமார்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்

நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்

இன்பமே எந்நாளுந் துன்பமில்லை '

அரச கட்டளை வரும்போது 'பணிவோமல்லோம்' என்று கூறும் நெஞ்சத்தில் எத்தனை துணிவு! 'ஒரு லோக்கல் கவுன்சிலரை எதிர்த்தால் வீட்டுக்கு ஆட்டோ வருமோ' என்று பயப்படும் தலை முறையில் வாழும் நமக்கு, எல்லாவற்றையும் துறந்த ஞானிகளின் தைரியமும் வீரமும் ஆச்சரியமாகத்தான் தெரிகின்றன.

சீக்கியர்களின் ஒன்பதாவது குரு, தேஜ் பகதூர். ஔரங்கசீப் டெல்லியை ஆட்சி செய்த காலம் அது. காஷ்மீரில் வசித்த இந்துக்களை கசையால் அடித்து மதமாற்றம் செய்து வந்தது ஔரங்கசீப்பின் அரசாங்கம். அந்த இந்துக்கள் தேஜ் பகதூரின் உதவியை நாடினார்கள். 'குருவை மதமாற்றம் செய்தால் எல்லா இந்துக்களும் மாறுகிறோம்' என்று அரசரிடம் போய் சொல்லச் சொன்னார், குரு தேஜ் பகதூர் சிங். இத்தனைக்கும் அவர் இந்து அல்ல! ஆனால், அவரவர் மத நம்பிக்கைகள் அவரவர்களுக்கு இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

இந்துக்கள் அரசரிடம் போய்ச் சொல்ல, ஆணவம் பிடித்த

சீக்கிய குருவை சங்கிலியில் பிணைத்து இரும்புப் பெட்டியில் பூட்டி எடுத்து வரச் சொல்லி உத்தரவு வந்தது. அப்படியே எடுத்து வரப்பட்ட சீக்கிய குரு சொல்ல முடியாத சித்திரவதைகளுக்கு ஆட்படுத்தப்பட்டார். இறுதிவரை எல்லா சித்திரவதைகளையும் இன்முகத்துடன் ஏற்று மதம் மாற மறுத்தார். டெல்லியின் நடுத்தெருவில் அவர் தலை வெட்டி எறியப்பட்டது. தோல்வி என்னவோ மன்னன் ஒளரங்கசீப்புக்குத்தான்.

‘துறவிக்கு வேந்தன் துரும்பு’ என்ற நம் பழைய பொன்மொழி விலைமதிப்பற்றது. நம் எளிய சராசரி வாழ்வில் அச்சமே நமது ஆசாரமானது. அலுவலகத்தில் மேலதிகாரியிடம் பயம்; வீட்டில் வேலைக்காரர்களிடம் பயம்; அநீதியைக் கண்ணால் பார்த்தால் பயம்; பற்றியது விலகுமோ என்று பயம்; விலகியது பற்றுமோ என்று பயம்; கேட்டது கிடைத்தால் நிலைக்குமோ என்ற பயம் - என்று கிட்டத்தட்ட தெனாலி ஸ்டைலில் வாழும் நமக்கு, அரசன் ஒரு ஆணையிட்டபோதும் அதை மறுதலித்த மனத்தின் சிந்தனைப் பின்னல்கள் புரியவே புரியாது. இறைவனுக்கு தன்னை முழுவதுமே ஒப்புக் கொடுத்துவிட்ட மனதில்தான் இந்தத் தைரியம் வரும்.

நவகாளியில் இந்து, முஸ்லிம்கள் கடும் போராட்டம். காந்தி உண்ணாவிரதம் இருக்கிறார். ராணுவத்துக்கும் அடங்காத கலவரம், ஒரு மெலிந்த கிழவரின் உண்ணாவிரதத்தின் முன் ஒடுங்கியது. ஒரு இஸ்லாமியர் ஒரு ரொட்டியுடன் வந்தார். காந்தியின் மேல் அதைத் தூக்கி எறிந்தார். ‘ஏன் உண்ணாவிரதம் இருந்து எங்களை கொடுமைப் படுத்துகிறாய்?’ என்று கர்ஜித்தார். ‘என் குடும்பத்தையே ஒரு ஹிந்து கொன்றுவிட்டான். நான் கத்தியை எடுத்துப் போனேன். நாலு ஹிந்து குழந்தையைக் கொன்றேன். இன்னும் என் வெறி அடங்கவில்லை. இது அடங்காது. நீ உண்ணாவிரதம் இருந்தால், என் கோபம் சரியாகுமா?’ என்று அலறினான். உண்ணாவிரதப் பந்தலில் மயான அமைதி நிலவியது. காந்தி மெலிந்த குரலில் பதில் சொன்னார். ‘உன் கோபம் தணியும்.’ ‘எப்படி?’ என்றார், அந்த மனிதர். ‘கலவரத்தில் அநாதையான ஒரு ஹிந்துக் குழந்தையை எடுத்து வளர்த்து வா. உன் கோபம் அடங்கும்’ என்றார் காந்தி. உண்ணாவிரதத்தால் உடல் தளர்ந்து போன ஒரு கிழவரின் குரலில் என்ன கம்பீரம், என்ன சக்தி! வந்தவர் கொஞ்ச நேரம் சிலைபோல இருந்தார். விசும்பி விசும்பி அழுதார். ‘பாபு, நீங்கள்

சொன்னதையே நான் செய்வேன்’ என்று சொல்லிச் சென்றார்.

ஆன்மிகத்தில் தோய்ந்து பதப்பட்ட மனமே அச்சங்களற்றது. ‘நாளைப் பொழுதை நடத்த இறைவன் உண்டு’ என்ற நம்பிக்கை நிறைந்த அகம் மனிதர்களைப் பார்த்து அஞ்சுவது இல்லை. பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் இல்லாத சமநிலை அந்த அகத்துக்கு மட்டுமே இயல்பு. எது சத்தியமோ அதை எந்தச் சூழ்நிலைக்கும் அஞ்சாது இனிய சொற்களால் கம்பீரமாகச் சொல்ல யாரால் முடிகிறதோ அவர்களே இந்தத் தேசத்தின் ஆன்மிகப் பேராற்றலை யுகங்கள் தோறும் காத்து வருகின்றனர்.

# 10

## தாயாக ஆசைப்பட்ட ஆண்கள்

என்னுடைய நீங்காத சிறுவயது ஞாபகங்களில் ஒன்று; அப்போதெல்லாம் வீட்டுக்கு வந்து போகிற எவர்சில்வர் பாத்திரக்காரர்களும் அவர்களோடு என் அம்மா நடத்தும் பேரமும். இப்போது? காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டியவர்களாகி விட்டார்கள் எவர்சில்வர் பாத்திர விற்பனையாளர்கள். இவர்களைப் போலத்தான் - தெருவில் பாய் விற்பவர்கள், சுக்குக் காப்பி சைக்கிளில் கொண்டு வருபவர்கள், 5 பைசாவுக்கு கையில் மிட்டாய் வாட்ச் கட்டிவிடும் வியாபாரிகள், ‘அம்மி பொளியலையோ...’ என்று கூவுபவர்கள், ‘அம்மா, கல்லுரலை சுத்தப் படுத்திக் கொடுக்கவா?’ என்று எப்போதும் சிறு குழந்தையோடு வரும் பெண்கள், ஐஸ் வண்டி தள்ளி வருகிறவர்... இன்னும் எத்தனை சிறு வியாபாரிகள் காணாமல் போய் விட்டார்கள்!

ஞாயிற்றுக்கிழமை என்றால் எங்கள் வீட்டுக்கு, எவர்சில்வர் பாத்திர வியாபாரியின் வருகை நிச்சயம் உண்டு. ‘எதுவுமே வேணாம்’ என்று அம்மா சொல்வதில் இருந்து வியாபாரம் ஆரம்பமாகும்! சொம்புகள், தவலைகள், சிறு குடங்கள், அடுக்கு சம்புடங்கள், அஞ்சறைப்பெட்டி என்று அழைக்கப்படும் அழகான

கம்பார்ட்மெண்டுகள் கொண்ட பாத்திரங்கள் என்று ஒவ்வொன்றாக கூடையில் இருந்து இறங்க இறங்க வியாபாரம் சூடு பிடிக்கும். என் அம்மாவின் கண்கள் ஏதாவது ஒரு பாத்திரத்தில் பதிய வியாபாரி, '80 ரூபாய்மா, உங்களுக்காக, கடைசி விலை' என்பார். கொஞ்சமும் கூசாது 'பதினேழு ரூபாக்கு மேல என்ன இருக்கு?' என்பார் அம்மா.

எனக்கு பயமாக இருக்கும். வியாபாரி மானங்கெட திட்டப் போகிறாரோ என்று. 'பூமி பிளந்து நான் உள்ளே போகமாட்டேனா' என்கிற அளவுக்கு இவ்வளவு குறைத்துக் கேட்கிற அம்மாவை நினைத்துக் கோபம் கோபமாக வரும். ஆனால், என்ன ஆச்சரியம்! பேரம் எப்படியோ படிந்து (அப்பாவின் இரண்டு மூன்று பேண்டுகள் வியாபாரியிடம் கொடுக்கப்பட்ட பின்தான்) அம்மா கேட்ட விலைக்குப் பக்கத்தில் வியாபாரம் முடியும்...

பக்கத்து வீட்டுக்காரர்களிடம் காட்டிய பின் அது பெட்டிக்குள் போய் சமர்த்தாக உட்கார்ந்து, ஏதாவது பண்டிகை நாளில் அம்மாவின் கையால் அடுப்பில் வைக்கப்படும். இதில் என்ன சுவாரஸ்யம் என்றால், எல்லாம் முடிந்தபின், 'எத்தனை நேரம் கத்தியிருக்க, இந்தா சாப்பிடு...' என்று ஒரு வாய் காபியோ, மோரோ கொடுத்துத்தான் அந்த மனிதரை அனுப்பி வைப்பார் அம்மா. எனக்கு அம்மாவை பார்க்கப் பெருமையாக இருக்கும். அநாவசியமாக ஒரு வார்த்தைக்கூட வராத கம்பீரம், கார்வார், நாசுக்கு... அதன்பின் கருணை... சிறு வயசு விளையாட்டுகளில் எல்லாம் நான் அம்மாவாகவே இருந்திருக்கிறேன். நான் மட்டுமா? அம்மா போல நடிக்கும் ஆசை இல்லாத பெண் குழந்தை இருக்க முடியுமா என்ன?

பெண் குழந்தைகளுக்கு மட்டுமல்ல... அம்மாவாகவே ஆக முடியாத ஆண்களுக்குக்கூட அம்மா ஆகும் ஆசை வந்ததன் விளைவுதான் 'பிள்ளைத்தமிழ்' என்னும் பக்தி இலக்கிய வகை. கடவுளைத் தன் குழந்தையாயும் தன்னை அன்னையாகவும் பாவித்துப் பாடப்படும் இந்தப் பாடல் வகையின் ஆரம்பங்கள் திவ்யப் பிரபந்தத்தில் பெரியாழ்வாரின் திருவாய்மொழியில் இருந்துதான் தொடங்கியிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். பெரியாழ்வாரின் காலத்துக்குப் பின் பிள்ளைத் தமிழ் நூல்கள் இதுவரை 150 கிடைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், பெரியாழ்வாரின்

பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் ரொம்ப ரொம்ப ஸ்பெஷல். படித்தால், நம் வீட்டில் விஷமம் செய்யும் ஒரு குழந்தையைப் பக்கத்தில் இருந்து பார்த்து, சுடச்சுட இப்போது எழுதிய பாடல் மாதிரி, கால எல்லைகளைத் தாண்டி அவரின் பாடல்கள் நிற்கும்.

“இவன் செய்யும் விஷமம் தாங்கவே முடியல. ஒரே நிமிஷம் அசந்தேன். ஒரு கிண்ணம் எண்ணெயைக் கொட்டிட்டான். கழுவித் தள்ளுவதற்குள்ள இடுப்பு விட்டுப் போச்சு. தூளியிலே தூங்கற சின்னவளை கிள்ளி விட்டுடறான். குளிக்கவே வரமாட்டான், கடங்காரா, இப்போ வரியா இல்லையா..? சரி, சரி சாக்லெட் தரேன்... குளிக்க வாடா கண்ணு” என்று ஒரு இளம் பயலின் அம்மா சொல்வதை நீங்கள் நிச்சயம் கேட்டிருப்பீர்கள். ஆயிரத்து நூறு வருஷங்களுக்கு முன் பெரியாழ்வார் தன்னை யசோதையாகவும் கண்ணனைப் பிள்ளையாகவும் கொண்டு இதையே பாடுகிறார்.

எண்ணெய்க் குடத்தை உருட்டி

இளம்பிள்ளை கிள்ளி எழுப்பிக்

கண்ணைப் புரட்டி விழித்துக்

கழகண்டு செய்யும் பிரானே

(கழகண்டு - விஷமம்)

உண்ணக் கனிகள் தருவன்

ஒலிகடல் ஓதநீர் போலே

வண்ணம் அழகிய நம்பி

(கடல் போல நிறம் கொண்டவனே)

மஞ்சனமாட வாராய்

(குளிக்க வா!)

மீனாட்சி அம்மன் சிறு பெண்ணாக கல்லாங்காய் விளையாடுவதை, தாய்போல பார்த்துக் களிக்கிறார் குமரகுருபரர். முத்தால் செய்யப்பட்ட கற்களால், மீனாட்சி அம்மன் ஆடுகிறாள். முத்து வெள்ளை நிறம்தானே? ஆனால், இந்த விளையாட்டைப் பார்த்து ரசித்தவர்களில் பாதி பேர் முத்து சிவப்பு நிறம் என்றும் மீதிப்பேர் கருப்பு நிறமென்றும் சொன்னார்களாம். என்ன இது,

இவர்களுக்கு ஏன் குழப்பம் என்று குமரகுருபரர் விளக்குகிறார். கல்லாங்காய் ஆடும்போது மீனாட்சி கைகளை மலர்த்திக் கற்களைப் பிடிக்கிறாள். அந்த உள்ளங்கையில் சிவப்பு நிறத்தில் முத்துக்கள் சிவப்பாகத் தெரிகின்றன. அவளது கூரிய கண்கள் கற்களில் கவனத்தை வைத்திருக்கின்றன. அக்கண்களின் கருமையில் தோய்ந்து கற்கள் கருப்பாகத் தெரிகின்றன.

மகள் விளையாட்டைக் கண்டு பூரிக்கும் தாயாக மட்டும் நிற்கவில்லை குமரகுருபரர். ‘இவர்கள் சண்டை போடுவது எப்படி இருக்கிறது தெரியுமா? வேறு வேறு சமயத்தைச் சேர்ந்தவர்கள் தன் சமயமே சிறந்தது என்று சண்டை போடுவதுபோல இருக்கிறது’ என்று தத்துவமும் சொல்கிறார்.

தானும் தாயாக வேண்டும் என்று ஆண் பக்தர்கள் ஏன் ஆசைப்பட்டார்கள்? தாய் ஒருத்தியே ‘தான்’ என்ற எண்ணம் இல்லாது பிள்ளையை நேசிப்பவள். அந்த ஒரு உறவில்தான் சுயநலம் என்ற ஒன்று எழுவதேயில்லை. அதனால்தான் நம் வேதங்கள் சொல்லின -

நூறு ஆசிரியர்கள் ஒரு ஞானாசிரியனுக்குச் சமம்.


நூறு ஞானாசிரியர்கள் ஒரு தகப்பனுக்குச் சமம்.

ஆனால் நூறு நூறு தகப்பன்கள் கூட ஒரு தாய்க்குச் சமமல்ல.

ஒரு அரசிக்குப் பிரசவ வலி கண்டு விட்டதாம். ஜோசியம் பார்த்த மஹானுபாவர்கள், ‘குழந்தை பிறக்கும் நேரத்தைத் தள்ளிப் போட்டால், பிறந்த குழந்தை பிற்காலத்தில் சிறப்பாக வாழ்ந்து நூறு ஆலயங்களைக் கட்டுவான்’ என்றார்களாம். பிரசவ நேரத்தைத் தள்ளிப்போட தன்னை தலைகீழாகக் கட்டிவிடச் சொன்னாளாம் அந்தத் தாய். குறித்த நேரம் வரை தொங்கிய பின் குழந்தையைப் பிரசவித்த தாய், சிவந்த கண்களைக் கொண்டு பிறந்த குழந்தையைப் பார்த்து ‘கோச்செங் கணான்’ என்று கூப்பிட்டுவிட்டு இறந்தாள். அந்தக் கோச்செங்கணான்தான் பிரசித்தி பெற்ற திருச்சி ஜம்புகேஸ்வரர் கோயில் உட்பட பற்பல கோயில்களைக் கட்டிய அரசனாக வரலாற்றில் இடம் பெற்றான்.

இந்தக் கதையைப் படித்தவுடன் ‘செம உடான்ஸ் இல்ல... பிரசவ சமயத்ல தலை கீழா யாராவது தொங்குவாங்களா?’ என்று நமக்குக் கேட்கத் தோன்றும். ஆனால், சமீபத்தில் போலந்தில் ஜோவானா கிறிஸ்டோநெக் என்னும் பெண்மணி 75 நாட்கள், ஒரு

கட்டிலில் பிணைக்கப்பட்டு தலைகீழாக இருந்திருக்கிறாள். காரணம்? அவள் வயிற்றில் வளர்ந்த இரட்டைக் குழந்தைகள் ‘ப்ரீமெச்சூர் குழந்தைகளாகப் பிறந்தால் உயிர் பிழைக்க மாட்டார்கள்’ என்று டாக்டர்கள் கூறியதால், பிரசவத்தைத் தள்ளிப்போட ஜோவானா தலைகீழாக இருந்தாள். 75 நாட்கள் கழித்து இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். குழந்தைகளும் தாயும் நலம்.



குமரகுருபரர்

கோச்செங்கணானின் தாயார் பெயரை வரலாறு பதிவு செய்யவில்லை. ஆனால், அவளும் ஜோவானாவும் ஒரே நேர்க்கோட்டில் சந்திக்கும் புனிதத்தின் பெயரே தாய்மை. அதனால்தான் பக்தியின் உச்சத்தைத் தொட விரும்பிய ஆண்கள் கூட தாயாக தம்மை மாற்றிக்கொண்டனர்.

# 11

## முள்ளில் நிற்கும் சரஸ்வதி

அப்பாடா... ஒரு வழியாக குழந்தைகளின் பரீட்சைகள் என்ற பயங்கரங்கள் ஓய்ந்து வருகின்றன. மொத்த பரீட்சைகளும் முடிவதற்குள் பெற்றோர்களின் ரத்த அழுத்தமும் நரைமுடிகளின் எண்ணிக்கையும் எத்தனை வீடுகளில் கூடினவோ! என்ன டென்ஷன், என்ன பயம்! பிள்ளைகளின் கூடவே படித்து, ரெகார்ட் எழுதிக்கொடுத்து, பரீட்சை சமயத்தில் வீட்டுக்கு வருவதாகச் சொல்லும் விருந்தாளிகளை இன்முகத்துடன் விரட்டி, டி.வி. பெட்டிகளைத் தூக்கிப் பரணில் போட்டு, அலாரத்துக்கு முன் எழுந்து அது அடிக்கிறதா என்று கவனித்து, தாங்களும் டியூஷனுக்குப் பயணம் செய்து... அப்பப்பா! தம் பிள்ளைகள் அவையத்து முந்துவதற்காக அலையோ அலை என்று அலைந்து, நொந்து நூடுல்ஸ் ஆகும் பெற்றோர்களின் வாழ்க்கை, ஒரு துன்பியல் சினிமாவின் கிளைமாக்ஸ் காட்சியைவிடத் துயரங்கள் நிறைந்தது.

அந்த காலத்தில் இவ்வளவு பெரும்பாடுகள் இல்லை.

‘ஓ நாளைக்கு பரீட்சையா, சரி சரி, படி...’ என்பதுடன் விசாரிப்புகள் முடியும். பரீட்சைக்கான அட்டையை கவனமாக எடுத்துக் கொடுப்பது, கணக்குப் பரீட்சையன்று

வெண்டைக்காய்ப் பொறியல் செய்வது (என்னவோ அது நேராக மூளையில் நரம்புகளைத் தூண்டி கணக்கில் நூற்றுக்கு நூறு எடுக்க வைக்கும் என்று ஒரு நம்பிக்கைதான்) பரீட்சைக்குக் கிளம்பும் நேரத்தில், ‘சரஸ்வதி, உன் பேனா முள்ளில் நிற்கட்டும்’ என்று ஆசி வழங்கி, நெற்றியில் திருநீறு பூசுவது என்று சில வேலைகள் மட்டுமே பெற்றோருக்கு இருந்தன.

பேனா முள்ளில் சரஸ்வதி நிற்கும் கற்பனை இப்போது எனக்கு ரொம்ப நயமாகத் தெரிகிறது. அந்த ஒரு வாழ்த்தில்தான் எத்தனை கவித்துவம்! இந்த வாழ்த்திலும் எங்கள் வீட்டில் நவராத்திரி பொம்மையிலும் கொலுவில் வைக்கப்படும் வெள்ளாடை அணிந்த சரஸ்வதி பொம்மையிலும் ‘சரஸ்வதி பூஜை. இன்று படிக்க வேண்டாம் ஜாலி!’ என்ற மனப்பதிவிலும்தான் எனக்கு கலைவாணிக் கடவுள் பற்றிய முதல் அறிமுகங்கள் நிகழ்ந்தன. இரண்டாம் வகுப்புப் புத்தகம் ஒன்றில் பாரதியார் பற்றிய ஒரு பாடத்தில் சுப்பையாவுக்கு ‘பாரதி’ என்ற பட்டம் கொடுக்கப்பட்ட சம்பவத்தைப் போட்டு ‘பாரதி என்றால் சரஸ்வதி என்று பொருள்’ என்ற வரியைப் படித்ததும்தான் என் பெயரின் பொருளில் இருக்கும் கல்வித் தெய்வத்தை அறிந்துகொண்டேன். என் அம்மா எனக்கு பெயர் வைத்தலிலேயே, பிறப்பிலிருந்து நான் மீற முடியாத கட்டளை ஒன்றை எனக்கு அளித்துவிட்டாள். ‘ஒரு நாளும் நான் கல்வியில் தேராத, கலைகளில் அறிமுகமும் ருசியும் இல்லாதவளாக இருக்க எனக்கு அனுமதியில்லை’ என்ற கட்டளை. பின்னிப் பின்னி வார்த்தைகளால் சொல்லப்படாத ஒரு சொல் கட்டளை!

‘லட்சுமி வருவா, போவா... ஆனா சரஸ்வதி கண் விழிச்சுப் பார்க்க ஏழு ஜென்மம் காத்திருக்கணும்’ என்று நம் கிராமங்களில் ஒரு பேச்சு உண்டு. கல்வியில் மேன்மையும் கவிதை சொல்ல வல்ல அவதானமும் தரும் கலைமகளின் ஆசி, கருணை கொண்ட மேகத்தைப் போன்றது. ‘சரஸ்’ என்றால் பொய்கை என்று பொருள். மனமாகிய பொய்கையில் வசிப்பவள் சரஸ்வதி. அவளுக்கு ஸ்படிகத்தின் தூய்மையான நிறம். அப்பழுக்கற்ற தூய்மைக்கு ஸ்படிகத்தை உவமையாகக் கூறுவார்கள். தெளிவான ஞானத்தை வழங்கும் கலைமகளுக்கும் அதே நிறம். ‘படிக நிறமும் பவழச் செவ்வாயும்’ என்று சரஸ்வதி அந்தாதியில் கம்பர் பாடுகிறார்.

இந்தக் கம்பனுக்கு சரஸ்வதி கொடுத்த செல்வம் இருக்கிறதே,

அப்பப்பா! ராமாயணம் இயற்றுவதில் கம்பனுக்கும் ஒட்டக் கூத்தனுக்கும் குலோத்துங்க மன்னன் போட்டி வைத்துவிட்டான். ஒட்டக்கூத்தன் கிடுகிடுவென்று சுந்தரகாண்டம் வரை வந்து விட்டார். கம்பனின் எழுத்தாணி இன்றும் நகரவில்லை. அவையில் மன்னன் கம்பனிடம் விசாரித்தான். தான் யுத்த காண்டம் வந்து விட்டதாகக் கம்பன் சொன்னான். வேறு வழி? மன்னனிடம் யார் இடிபடுவது? யுத்த காண்டத்திலிருந்து ஒரு பாடல் பாடுமாறு உத்தரவு வந்துவிட்டது. கலைமகளின் ஆசியோடு 'குமுதனிட்ட குலவரை' என்று தொடங்கும் பாடலை கம்பன் எடுத்துவிட்டான். அவை திகைத்தது. அந்தப் பாடலில் 'துமி' என்ற சொல்லை கம்பன் பயன்படுத்தினான். திவலை, துளி என்று பொருள். அப்படி ஒரு சொல் வழக்கத்திலேயே இல்லை என்று ஒட்டக்கூத்தர் கட்சி கட்டினார். தெருவில் போய் தேடினார்கள், அந்த வார்த்தையை யாராவது பயன்படுத்துகிறார்களா என்று. அப்போது கலைமகள் ஒரு இடைக்குலப் பெண்ணாக வந்து தயிர் கடைந்தாள். தயிரின் 'துமி' மேலே படாது தள்ளிப்போகும்படி பிள்ளைகளை அதட்டினாள். சொல்லாட்சி உறுதி செய்யப்பட்டது. கலைமகளும் மறைந்தாள்.

கம்பனுக்கு மட்டுமா? போத்தண்ணா ஒரு தெலுங்குக் கவிஞர். வறுமையில் வாடினார். அரசனைப் பற்றி ஒரு பாடல் பாடினால் வறுமை தீர்ந்துவிடும். ஆனால், மனிதர்களைப் பாட போத்தண்ணாவின் மனம் இடம் தரவில்லை. அரசனே ஒரு முறை அவர் இல்லம் தேடி வந்தான். வந்த அரசனுக்கு எதைக் கொடுப்பது? போத்தண்ணா தவித்தார். கலைகளின் அரசியான கலைவாணி ஏழை போத்தண்ணாவின் வீட்டில் சமையலறையில் எழுந்து அருளினாள். தானே விருந்து சமைத்தாள். ஏழைப் புலவனின் வீட்டில் இப்படி ஒரு சாப்பாட்டை எதிர்பார்க்காத அரசன் அசந்து போனான். தன் அரண்மனைப் புலவராக வரும்படி போத்தண்ணாவுக்கு அழைப்பு விடுத்தான். அப்போது அடுக்களை யிலிருந்து விம்மல் சத்தம் கேட்டதாம். போத்தண்ணா போய்ப் பார்த்தார். கலைமகள்தான் விசும்பிக்கொண்டிருந்தாள். "கவிஞரே, நீங்கள் அரசருடன் சென்று என்னை விற்கப்போகிறீர்களா?" என்று கேட்டு அழுதாளாம். "இதைவிட மோசமான வறுமை வந்தாலும் விற்கமாட்டேன்" என்று போத்தண்ணா உறுதி அளித்ததும் கையில் பிடித்த கரண்டியோடு நின்ற கலைமகள் மறைந்தாளாம்.

அறிவையும் அறிவு தரும் பணியையும் விற்கக்கூடாது என்று சொல்லவே கலைமகள் மேலே சொன்ன திருவிளையாடல்களை நடத்தியதாக கதைகள் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், என்ன ஆச்சரியம் பாருங்கள்! இன்றைக்கு நம் நாட்டில் கல்வியைவிட பெரிய பிஸினஸ் இருக்க முடியாது. ‘தாய்மொழியான தமிழில் படித்தால் வேலைக்கு ஆகாது’ என்ற கருத்தாக்கம் வலுப்பட்டதால் அரசுப் பள்ளிகளைத் துறந்து தனியார் பள்ளிகளுக்குப் போகும் பெற்றோர்கள், கல்வியைக் கடைக்சரக்காக மதிக்கும் ஒரு சமுதாயத்தின் வியாபார நிர்ப்பந்தங்களில் சிக்கித் தவிக்கும் மாணவர்கள். அறிவதற்காக அல்ல கல்வி; மார்க் வாங்கி வேலைக்குப் போவதற்காக என்று மூளைச் சலவை செய்யப் பட்ட ஒரு சமூகத்தில், கௌரவர் சபையில் நின்ற பாஞ்சாலி போல இன்று நிற்கிறாள் கலைமகள்.

கலைமகளின் வாகனம் அன்னப் பறவை. இது கல்வி யாளர்களுக்கு இருக்க வேண்டிய நற்பண்புகளை உணர்த்தும் ஒரு குறியீடு. தண்ணீரை நீக்கிப் பாலை மட்டுமே பிரித்தெடுக்கும் அன்னம்போல, தீயவற்றை நீக்கி, நன்மைகளை மட்டுமே தர வேண்டியவர்கள் கல்வியாளர்கள் மற்றும் கலைஞர்கள். அன்னப் பறவை தன் ஆயுளில் ஒரே ஒரு முறை மட்டுமே காதல் வசப்படும் என்ற கருத்தும் உண்டு. அதனாலேயே அந்த இனம் அழிந்தும் விட்டது. ‘மோகத்தை கொன்றுவிடு - அல்லால் எந்தன் மூச்சை நிறுத்திவிடு, சிந்தை தெளிவாக்கு - அல்லால் இதை செத்த உடலாக்கு’ என்று பாரதி கதறியதுபோல ஞானவான்களும் மோகத்தால் மூழ்காதவர்களாக, தம் படைப்புகளால் கீழான எண்ணங்களைப் பரப்பாதவர்களாக இருக்க வேண்டும். அன்னப் பறவை, விமானங்களைப்போல தரையில் சற்று ஓடி, மிகுந்த முயற்சியுடன் மேலே பறக்கும் இயல்புடையது. கல்வியாளர்களும் கலைவாணர்களும் அடித்தளத்திலிருந்து எழுந்து அயராத பயிற்சியினால் உயர வேண்டுமே தவிர சிபாரிசினால் பட்டங்களை வாங்கக்கூடாது.



அன்னப் பறவை

கலைமகள் தத்துவம் கல்வியாளர்களுக்குச் சொல்லும் பாடங்கள் ஏராளம். கல்வியை தனியார் கையில் தானம் கொடுத்துவிட்ட அரசாங்கங்களும் ‘பொழுது போக்கு’ என்ற சாக்கில் மலிவான ஆபாசக் குப்பைகளை கலை என்று விற்கும் வியாபாரிகளும் நிரம்பிய சமூகத்தில், அன்னப்பறவைகள் மட்டுமா அருகிவிட்டன? கலைமகளின் நல்லாசி பெற்ற கல்வியாளர்களும் கவிஞர்களும் கலைஞர்களும்தான்!

# 12

## உள்ளத்தில் நல்ல உள்ளம்...

அண்மையில், ‘கர்ணன்’ படம் தொழில்நுட்பப் புதுமைகளோடு ஒலி-ஒளி துல்லியப்படுத்தப்பட்டு மீண்டும் திரையிடப்பட்டிருப்பது ஒரு சந்தோஷமான விஷயம். என் மகளின் பள்ளியில் அந்தத் திரைப்படத்துக்கு குழந்தைகளை அழைத்துப் போனார்கள். பழம்பெரும் புராணக் கதைகளை பிள்ளைகள் அறிந்துகொள்ளவும் நல்ல சினிமாக்களை ரசிக்கும் வழக்கம் குழந்தைகளிடம் மலரவும் அவர்கள் பள்ளி எடுத்த நல்ல முயற்சி அது. படத்துக்குப் போகும் நாள் நெருங்க, நெருங்க, எனக்கு டென்ஷன் அதிகமானது.

தப்பித் தவறி டி.வி-யில் பழைய படம் வந்தால், வீட்டுக்குள் பாம்போ தேளோ வந்தது மாதிரி பதறி அடித்து ஓடி, ரிமோட்டைத் தேடி, சேனலை மாற்றுகிறவள் என் மகள். இவள் தியேட்டருக்குப் போய் பழைய திரைப்படம் பார்த்து எப்படித் திரும்புவாளோ, என்னவெல்லாம் திட்டுவாளோ, பழைய படம் பார்த்த பாவம் கழுவ எத்தனை புதுத் திரைப்படங்களுக்கு கூட்டிப் போகச் சொல்லி ஆர்ப்பாட்டம் செய்வாளோ என்றெல்லாம் என்னுள்ளே குமிழியிட்டது பயம். போகாமலிருக்கவும் முடியாது. ஏனென்றால், கட்டாயமாக வந்தே ஆக வேண்டும் என்று பள்ளி வற்புறுத்தியது.

கடைசியில் அந்த நாளும் வந்தது. கையில் கட்டிய லன்ச் மற்றும் இடையில் கொறிக்க நொறுக்குத் தீனி, தண்ணீர் பாட்டில் சகிதம் போனவள், படம் பார்த்துவிட்டுத் திரும்பினாள். என் பெரிய மகள் அவளை வெறுப் பேற்றுவதற்காக 'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது...' என்று பாடி, வரவேற்க, சின்ன மேடம் திரும்பி வந்தார்கள். "என்னடா! படம் எப்படி?" என்று தயக்கத்தோடு கேட்டேன், பூகம்பத்தை எதிர்பார்த்து. முகமெல்லாம் துயரத்தில் விகசிக்க, சின்னக் கண்களில் நீர் கோர்க்க, "கர்ணன் ரொம்பப் பாவம் இல்ல..." என்றாள்.

இத்தனை தலைமுறைகள் தாண்டி, ஒரு திரைப்படம் இன்னும் பார்க்கிறவர்களைக் கண்கலங்க வைக்க முடியும் என்றால், படத்தின் பிரமாண்டம், நடிகர் திலகத்தின் நடிப்பு, கண்ணதாசன்-எம்.எஸ்.வி-யின் பாடல்களும்தான் காரணம். நல்ல கலைப் படைப்புகள் சாகா வரம் பெற்றவை என்பதைக் கண்கூடாக நான் அனுபவித்த நாள் அது.

'கர்ணன்' படப்பாடல்களை கவியரசு கண்ணதாசன் இரண்டே நாட்களில் எழுதி முடித்தாராம். அத்தனையும் முத்து என்றாலும் எனக்கும் இன்னும் எத்தனையோ பேருக்கும் மிகப் பிடித்த பாடல் 'உள்ளத்தில் நல்ல உள்ளம்'தான். சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் ஒலிக்கும் அந்தப் பாடல் தமிழ்த் திரையுலகின் அதி தீவிர அவலச் சுவைப் பாடல்களில் தலையானது.

பெற்ற தாயால், கவச குண்டலங்களை தானம் கொடு என்று கேட்டுப் பெற்ற தேவேந்திரனால், குரு பரசுராமரால், உன் தர்ம பலன்களை எல்லாம் தானமாகக் கொடு என்று வாங்கிச் சென்ற பரமாத்மா கண்ணனால் என்று அத்தனை பேராலும் துரோகம் இழைக்கப்பட்ட ஒரு மனிதனின் உயிர் தடுமாறும் நேரத்தில் ஒலிக்கும் அந்தப் பாடல் காலத்தில் உறைந்து நிற்கிறது; எப்போது கேட்டாலும் கண்களில் நீரை வரவழைக்கிறது. யார் யாரோ செய்த துரோகங்கள், தோல்விகள், பொய்த்த நம்பிக்கைகள், தகுதி இருந்தும் தவறிய வாய்ப்புகள் எல்லோர் வாழ்விலும் உண்டு. எப்படியோ இந்தப் பாடல் அவையெல்லாவற்றையும் நினைவு படுத்திவிடுகிறது. கர்ணன் கதையில் எனக்குப் பிடித்த கட்டங்கள் இரண்டு.

கர்ணனின் கொடைத்தன்மையைச் சொன்ன ஒரு கதை. சாப்பிட்டுக்கொண்டிருந்த கர்ணனிடம் யாசகத்துக்குப் போனார்

ஒரு அந்தணர். பக்கத்தில் இருந்த தங்கக் காசுகளை இடது கையில் எடுத்து அவரிடம் கொடுத்தானாம் கர்ணன். "இது அவமரியாதையில்லையோ? இடது கையில் யாசகம் தரலாமா?" என்கிறார், அந்தணர். பணிவோடு கர்ணன் சொல்கிறான்: "கொடுக்க வேண்டும் என்று தோன்றியவுடன் கொடுத்துவிட வேண்டும். சாப்பிட்டு கை கழுவிப் பின் வலது கையால் கொடுக்கலாம் என்பதற்குள் சில சமயம் மனம் மாறிவிடும். அதனால்தான் உடனே இடக்கையில் கொடுத்தேன்." சத்திய வாக்கு இது.

ஏழைக் குழந்தைகளின் படிப்பு என்று டொனேஷன் கொடுக்க நினைத்தால் நினைத்த அதே வினாடி பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். 'வீட்டுக்குப் போயிட்டு, செக்கைப் போட்டு, மனைவி கிட்டயும் கலந்து பேசிட்டு...' என்று தள்ளிப்போட்டால் முதலில் ஆயிரம் ரூபாய் என்று நினைத்த மனசு, 'நானே எல்லாத்தையும் கொடுத்து முடியுமா? இருநூறு போதும்' என்று மாறிவிடும். சில வீடுகளில் அனாதை ஆசிரமத்துக்குக் கொடுத்து அனுப்ப பழைய துணிகளை சேகரித்து மூட்டை கட்டி வைப்பார்கள். சேகரித்த உடனே கொடுக்கவில்லை என்றால் மூட்டைத் துணி மறுபரிசீலனை செய்யப்பட்டுவிடும். 'இது நல்லாத்தானே இருக்கு. ஒரு தையல் பிரிச்சு விட்டுட்டா நல்லா கல்லு மாதிரி உழைக்கும்' என்ற இத்யாதி சமாதானங்களோடு மூட்டையில் பாதி திரும்பவும் அலமாரிக்குப் போய்விடும்.

கர்ணனின் கதையில் எனக்கு மிக ஆச்சரியமான படிமானங் களைக் கொடுத்த இன்னொரு சம்பவம். கர்ணனும், பேரரசன் துரியோதனின் மனைவி பானுமதியும் சொக்கட்டான் ஆடிய கட்டம். கர்ணனே ஜெயித்துவருகிறான். பானுமதி தோற்றுக் கொண்டிருக்கிறாள். அந்நேரம் துரியோதனன் வர, அதைக் கவனித்த பானுமதி எழுந்திருக்கிறாள். நண்பன் வருவதைக் கவனிக்காத கர்ணன், தோற்றுத்தான் பானுமதி ஓடுகிறாள் என்று நினைத்து, "எங்கே ஓடுகிறாய்?" என்று விளையாட்டு மும்முரத்தில் அவள் புடவையைப் பிடித்து இழுத்துவிடுகிறான். அச்சமயத்தில் பானுமதியின் இடுப்பில் இருந்த முத்துமாலை அறுந்து முத்துகள் எங்கும் சிதறின. துரியோதனனைப் பார்த்துவிட்ட கர்ணன், தான் செய்த மகத்தான தவற்றினை உணர்ந்து நிலை குலைந்து நின்றான். பானுமதியும் பதறினாள். எதுவுமே நடக்காதது போல் துரியோதனன், "சிதறிய முத்துக்களை எடுக்கவா? கோக்கவா?"

என்று கேட்டான்.

சுயநலப் பேய், பொறாமைக்காரன், ஊசிமுனை நிலம்கூட தன் சகோதரர்களுக்குக் கிடையாது என்ற அக்கிரமக்காரன், திரௌபதியை சபைக்கு அழைத்து வந்த வக்கிர சிந்தனையாளன்- இவைதான் துரியோதனனைப் பற்றிய நம் மதிப்பீடுகள். இவை அனைத்தும் உண்மையே. இத்தனைக்கும் இடையில்தான் மனைவியையும் நண்பனையும் தன் நம்பிக்கையால் கௌரவப் படுத்திய மிக உயர்ந்த ஒரு ஆன்மாவையும் நாம் தரிசிக்க முடிகிறது. ‘சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவள்’ என்று பண்டைய ரோமாபுரியில் ஒரு சொல் வழக்கு உண்டாம். தன்மேல் நம்பிக்கை கொண்ட எல்லா ஆண்களும் சீசர்கள் என்றால், அவர்களின் மனைவிகள் எல்லோரும் சந்தேகத்துக்கு அப்பாற் பட்டவர்கள்தானே!

மனித மனங்களின் ஆழங்களில் படிந்திருக்கும் கீழ்மை எப்போது அவர்களை ஆட்கொள்கிறது, இயல்பாக அந்த மனங்களில் நிரவியிருக்கும் மேன்மை எப்போது வெளிப்படுகிறது என்ற சுவாரஸ்யமான சவால்தான் பிரபஞ்சத்தை நடத்திச் செல்கிறது. இந்தப் பெருநிலத்தில் கால் பதித்து நிற்கும் நம் மனங்களுக்குள் கீழ்மையை வீழ்த்தி, மேன்மையை வெளிப்படுத்த நடக்கும் யுத்தம் எந்த குருக்ஷேத்திர யுத்தத்தையும்விட மகத்தானதுதானே?

படம் முடிந்த நாளின் இரவில் கர்ணனைப் பற்றி திரும்பவும் எங்கள் வீட்டில் பேச்சு வந்தது. “கர்ணனை ஜெயிக்கவே முடியாது. அவன் அம்மா மட்டும் அர்ஜுனன் மீது நாகாஸ்திரத்தை ஒரு முறை மட்டும்தான் விட வேண்டும் என்ற வரத்தை வாங்காமல் இருந்திருந்தால், கர்ணன்தான் ஜெயித்திருப்பான். அந்த ஒரு முறை நாகாஸ்திரம் வீசப்பட்டபோதும் கிருஷ்ணன் அர்ஜுனனைக் காப்பாற்றிவிட்டார். அதோடு கர்ணனின் கைகளும் கட்டப்பட்டது” என்றேன் நான்.

“இவ்வளவு நாள் விட்டுப்போன அம்மா வந்து ஒரு வரத்தைக் கேட்டால் கர்ணன் ஏன் ஏமாந்து போய் அதை ப்ராமிஸ் பண்ணணும்? கர்ணன் சரியான ஃபூல்” என்று எகிறிப் பேசினான் விவாதத்தில் கலந்துகொண்ட எங்கள் பக்கத்து வீட்டுப் பையன்.

“அம்மா எதைக் கேட்டாலும் கொடுக்கணும்” என்றாள் என் மகள். எனக்கு அவளைத் தூக்கிக்கொள்ள வேண்டும் போல்

இருந்தது. அந்த வயசா அவளுக்கு? வெறுமே அணைத்துக் கொண்டேன். சில சமயம் பிள்ளைகள், பெற்றவர்கள் மேல் வைக்கும் பாசம், பெற்றவர்களின் அன்பைவிட களங்கமற்ற மகத்துவம் பெற்றது.

கர்ணன் கதை உணர்த்தும் விசித்திரமான உண்மையும் இதுதான்.

# 13

## அதிகாரமா, அன்பா, சிறந்த நிர்வாகத்துக்கு எது தேவை?

சில இடங்களில் நிர்வாகம் என்பது ஆமை மாதிரி. படு ஸ்லோ. இன்னும் சில இடங்களில் எருமை. அசையவே அசையாது. முடிவு எடுப்பதை எவ்வளவு தள்ளிப்போட முடியுமோ அவ்வளவு தள்ளலாம் என்ற அலட்சியம். ‘மலைப் பாம்பின் கதை தெரியுமா?’ என்று ஒரு கட்டுரையில் பாரதியார் கேட்கிறார். மலைப் பாம்பின் வாலில் நெருப்புப் பிடிக்குமாம். ஆனால், அதுவோ சுகமாகத் தூங்கிக்கொண்டிருக்குமாம். அவ்வளவு கர்வம், அவ்வளவு அலட்சியம், அவ்வளவு சோம்பேறித்தனம் என்கிறார். சில இடங்களில், குறிப்பாக அரசு அலுவலகங்களில் இந்த மலைப்பாம்புக் கதை மிகப் பொருத்தம். இதைப் பற்றி ஒரு பிரசித்திபெற்ற நகைச்சுவை உண்டு.

ஓர் அரசு அலுவலகத்தில் பேப்பர்கள், கோப்புகள் மிகுந்து விட்டன. உட்கார இடமில்லை. போக வழியில்லை. எங்கும் பேப்பர், பேப்பர்... இவற்றில் தேவையில்லாதவற்றை அப்புறப்படுத்தி, எரித்துவிட அனுமதி கேட்டு மேலிடத்துக்குக் கடிதம் போட்டனர். ஏழு மாதமும் பத்து நினைவூட்டல் கடிதங்களும் சென்ற பிறகு மேலிடத்திலிருந்து பதில் வந்தது:

‘எல்லாவற்றையும் எரித்து விடலாம். ஆனால், அதற்கு முன் ஒவ்வொரு தாளுக்கும் இரண்டு ஜெராக்ஸ் காபி எடுத்துவிட்டு பிறகு எரிக்கவும்!’

நிர்வாகம் என்பதற்கு இலக்கணம் வகுத்த மேலைநாட்டு அறிஞர் ஹைமன், ‘தனி மனிதர்களின் முயற்சியை ஒன்று திரட்டி பொதுவான இலக்கை எய்த முயலும் முயற்சி’ (Directing the efforts of individuals towards a common objective) என்கிறார். தனி மனிதர்களின் முயற்சியை ஒன்று திரட்டுவதற்குள் நாக்கு வெளியே தள்ளுகிறதே! ‘என் வேலை அதிகம் - அவனுக்குக் குறைவு’ என்று அங்கலாய்ப்புகள், ‘நான் மட்டும் ஏன் உழைக்க வேண்டும்?’ என்ற புலம்பல்கள், போட்டி, பொறாமை... வேலைக்கு வருவதற்கு சம்பளம் என்றும் வேலை செய்வதற்கு ஓவர் டைம் என்றும் தீவிரமான முடிவுகள் வைத்திருக்கும் சில பணியாளர்கள், இதையெல்லாம் மீறி சிலர் மாங்கு மாங்கென்று வேலை செய்தால் ‘வேலை செய்பவனுக்கு மேலும் வேலை கொடு; வேலை செய்யாதவனுக்கு பதவி உயர்வு கொடு’ என்று கொள்கை வைத்திருக்கும் நிர்வாகங்கள் - இது முடிவேயில்லாத பட்டியல்.

பலர் பணியாற்றும் அலுவலகங்கள் மட்டுமல்ல; சிலரே இருக்கும் வீடுகளிலும்கூட நிர்வாகச் சிக்கல்கள் உண்டு. ஆட்டோக்காரன் வந்து வாசலில் ஹாரன் பலமுறை அடித்து, “இந்த வீட்டுல இதே பேஜாரு...” என்று எரிந்து விழுந்த பின்தான் எட்டு வயது மகள் அலறுவாள்... “ஐயய்யோ, இன்னிக்கு ஸ்போர்ட்ஸ் இருக்கு. வொயிட் யூனிஃபார்ம்தான் போடணும். நான் வழக்கமான யூனிஃபார்ம் போட்டுட்டேன்...” உடனே மூன்றாம் உலகப்போர் மூளுவதற்கான சூழ்நிலைகள் உருவாகி, “இதையெல்லாம் நீ பாக்க மாட்டியா” என்று கர்ஜிக்கும் தகப்பனும், “ஏன்? எல்லாம் என் தலையிலதான் எழுதியிருக்கா? இவளுக்கு தடிமாடு வயசாச்சு. இவளே பார்த்துக்கக்கூடாதா? இல்ல நீங்கதான் பாக்கக்கூடாதா? அதுவும் இல்ல... ஒரு நாளைக்கு 14 சீரியல் விடாம பாத்து எல்லா கதையையும் ஞாபகம் வைச்சுக்கற உங்க அம்மா ஞாபகப்படுத்தக் கூடாதா?” என்ற நீண்ட பதில் உரைக்கும் தாயும் “இந்தா, இதில் என்னை இழுக்காத. நான் ஏதோ கிருஷ்ணா ராமான்னு இருக்கேன். ஊருக்கு இளைச்சவள் பிள்ளையார் கோயில் ஆண்டியா? நானே பாதி நேரம் கரண்ட் கட் ஆகறதுல ஒரு சீரியலும் பாக்க முடியாம கிடக்கேன்...” என்று அழ ஆரம்பிக்கும் மாமியாரும்,

இத்தனைக்கும் நடுவில் “ஹை! சண்டை ஆரம்பிச்சாச்சு, இன்னைக்கு ஸ்கூல் லீவ்தான்” என்று கிளுகிளுக்கும் ஐந்து வயது மகனும் இன்னும் வொயிட் யூனிஃபார்ம் கிடைக்காததால் பதறும் மகளும்... இந்த அழகில் தனி மனிதர்களின் முயற்சியை ஒன்று திரட்டுவதாவது, பொது இலக்கை அடைவதாவது...

அந்தக் காலத்தில் இதுமாதிரி சூழ்நிலை இருந்தது இல்லையா? எப்படி சமாளித்தார்கள்? அரசர்களிடம் வேலை செய்கிறவர்கள் வேண்டுமானால், எப்போதும் தலை உருளும் என்ற பயத்தால் அடிபணிந்திருக்கலாம். மற்ற இடங்களில்?

கி.மு. 1017-ம் ஆண்டுவாக்கில் ஒரு மனிதர் மிகச்சிறந்த நிர்வாகத்தை அதிகாரத்தால் அல்ல, அன்பினால் நடத்திக் காட்டியிருக்கிறார். அவர்தான் ராமானுஜர்.

தன் 25-ம் வயதில் ஸ்ரீரங்கத்துக்கு வந்த ராமானுஜர் 90 வயதுவரை அங்கேயே இருந்து பிரமாண்டமான ஸ்ரீரங்கம் கோயிலை மிகத் திறமையாக நிர்வகித்தார். இன்றளவும் பின்பற்றப்படும் பல வழிமுறைகளை, காலம் தவறாது துல்லியத்துடன் செய்யும் ஒழுகலாற்றைக் கொண்டு வந்தார். அன்றைய கோயில்கள் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல - மக்களின் சமூக, கலாசார, ஆன்மிக வாழ்வுக்கூறுகளை முடிவு செய்யும் அறநிலையங்களும்கூட. அதுவும் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு ஏகப்பட்ட சொத்து. ரங்கநாதர் பெரும் பணக்காரர். அவரைப் பற்றிய சொல் வழக்கு ஒன்று உண்டு: ‘வெள்ளி பூணார், வெங்கலம் ஆளார், எண்ணெய் எரியார், எங்க ரங்கேசர்.’

வெள்ளியெல்லாம் அணிய மாட்டாராம், தங்கம்தான்! கோயில் பாத்திரங்கள் வெங்கலம் அல்ல; வெள்ளி மட்டும். விளக்கெரிக்க எண்ணெயா? பேசக்கூடாது. நெய்யில்தான் விளக்கெரியும்.

இத்தனை சொத்தை யாரும் ஸ்வாஹா செய்யாமல் காத்து, எழுபத்திரண்டாயிரம் சீடர்கள், எழுநூறு சந்நியாசிகள், எழுபத் திரண்டு மடாதிபதிகள் இத்தனை பேரையும் கட்டிக்காத்து, வேலை செய்ய வைத்து, போட்டி, பொறாமை இல்லாமல் ராமானுஜர் நிர்வகித்ததைக் கண்டு ஸ்ரீரங்கத்து அரங்கனுக்கே ஆச்சரியம் வந்து விட்டதாம். “இத்தனை பேரையும் நன்றாகச் செயல்பட வைத்து திருப்பணி செய்வது எப்படி?” என்று கேட்டாராம். “உன் பெயரால் செய்வதால்தான்” என்று பதில் சொன்னார், ராமானுஜர். திருக்குறுங்குடியில் நடந்த சம்பவம் இது. சம்பவம் நடந்து ஆயிரம்


ஆண்டுகள் கடந்த பின்னும் நமக்கெல்லாம் ஏதோ செய்தி இருப்பது மாதிரி இல்லை?

நான் செய்கிறேன், என்னால்தான் இதெல்லாம் நடக்கிறது. நான் இல்லாவிட்டால் நாளையே இந்த அலுவலகம் அஸ்தமிக்கும், என் ஒருத்தியால்தான் இந்த வீடே விழாமல் நிற்கிறது என்று எத்தனை ஈகோ நம் எல்லாருக்குள்ளும்! நாம் இல்லாவிட்டாலும் இந்த உலகம் இதேபோல் சுற்றும், ஒருவேளை நம் அலுவலகமும் வீடும் இன்னும்கூட சிறப்பாக நடக்கலாம். யாரும் தவிர்க்க முடியாதவர்கள் இல்லை என்ற சின்னத் தெளிவு வந்தால் பாதிச் சிக்கல்கள் தீர்ந்துவிடும்.

பாரத யுத்தம் முடிந்த பிறகு அர்ஜு னனின் நினைவெல்லாம் அகந்தை பட்டுத் தெறித்தது. எத்தனை மகத்தான போர்! அதன் வெற்றி அவனுடைய வீரத்தால் அல்லவா? அப்போது கண்ணன் அர்ஜுனனை அழைத்தான். “என் உறவினர்களான யாதவர்கள் என்னைப் பார்க்க வந்து இப்போது திரும்பிப் போகிறார்கள். வழியில் திருடர் பயம். நீ போய் அவர்களை பத்திரமாக விட்டு வா” என்றான் கண்ணன். அர்ஜுனன் யாதவர்களோடு போனான்.



ஸ்ரீரங்கத்தில்... ரெங்கநாதர்



ராமானுஜர்

அடர் காட்டில், நினைத்தது போலவே திருடர்கள் வந்தனர். அர்ஜுனனுக்கு சிரிப்பு வந்தது. “பாவம், நான் துணைக்கு வந்திருக்கிறேன் என்று தெரியாமல் வந்துவிட்டார்கள்” என்று நினைத்து, தன் அம்புகளை விடுத்தான். ஒரு அம்புகூட அவன் நினைத்த மாதிரி விழவில்லை. ‘என்ன ஆயிற்று?’ என்று தவித்து நின்றான் அர்ஜுனன். அப்போது செய்தி கேள்விப்பட்ட கண்ணன், எங்கிருந்தோ விரைந்து வந்து போர் செய்து திருடர்களைத் துரத்தினான். “பரந்தாமா, பாரதப் போரையே வென்று கொடுத்த என் கைகளா இவை? எனக்கு என்ன ஆயிற்று?” என்று கதறினான், அர்ஜுனன். “பார்த்தா... உன் திறமை போருக்குத் தேவைப்பட்டது; போர் முடிந்ததும் உன் நேரமும் முடிந்தது. இனி நீ புகழின் உச்சியில் நிற்பவன் அல்ல, இறங்க வேண்டியவன்” என்றான் கண்ணன்.

என் திறன், என் செயல், என் நிர்வாகம், என் உழைப்பு எல்லாம் கடவுளின் திட்டம் என்று நினைத்து தன் தினசரி வேலைகளைச் செய்பவர்களுக்கு நிர்வாகச் சிக்கல்கள் வருவதில்லை. வந்த போதிலும் அதை எளிமையாகத் தாண்டிச் செல்ல அவர்களால் முடிகிறது. திரும்பத் திரும்ப முயலுவதற்கான ஆத்ம சக்தி கை கூடுகிறது. “இது உருப்படாது” என்று விட்டுச் செல்பவர்கள் அல்ல. “இது இப்படித்தான் இருக்கும், இதற்கு நடுவில் என் வேலைகளை முடிந்தவரை செய்வேன், கடவுள் துணையோடு” என்று நினைப்பவர்களே ஜெயிக்கிறார்கள்.

# 14

## சேய்க்கு நோய்; தாய்க்கு மருந்து!

காஞ்சி மகாசுவாமிகள் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம். ஒரு சிறுவனின் சருமத்தில் கருந்திட்டுகள் தோன்றி உடல் முழுதும் பரவிவிட்டது. பார்க்கவே அருவறுப்பூட்டும் தோற்றம். உடன் படித்தவர்களும் அவனை ஒதுக்கிவிட்டனர். உடல் வியாதி பாதியும் மனச் சோகம் மீதியுமாக சோம்பிப்போன பிள்ளையை அவனின் அம்மா சுவாமிகளிடம் அழைத்து வந்தாள். பெரியவர் அந்த சிறுவனிடம் கேட்டார்: “குழந்தே, என்னோட மூணு நாள் இருக்கியா?” சிறுவன் ஒப்புக்கொள்ள அம்மாவும் சுவாமிகளிடம் அவனை விட்டுவிட்டுப் போனாள்.

“நான் என்ன சாப்பிடறனோ அதையேதான் நீயும் சாப்பிட ணும். நமக்குள்ள ஒப்பந்தம். சரியா?” என்று சுவாமிகள் கேட்க பையன் சந்தோஷமாக சம்மதித்தான். அடுத்த மூன்று நாட்கள் பெரியவர் சாப்பிட்ட அதே ஆகாரம்தான் பிரசாதமாக பையனுக்கும் வழங்கப்பட்டது. அது என்ன உணவு? பச்சை வாழைத்தண்டை பொடிப்பொடியாக நறுக்கி எந்தவிதத் தாளிப்பும் சேர்க்காமல் சிறிது தயிர் மட்டுமே கலந்ததுதான் அந்த உணவு. அதை மட்டுமே சாப்பிட்ட அந்த சிறுவனின் நோய் மூன்றே நாளில் நன்கு நிவர்த்தி ஆகியது. சோம்பி வந்த சிறுவன் மலர்ச்சி யோடு

வீட்டுக்குத் திரும்பிச் செல்ல ரெடியானான். "வீட்டுக்குப் போன பின்பும் ஒரு மாசம் உப்பு, புளி, காரம் சேர்க்காமே சாப்பிடு. இந்த வியாதி இனிமே வரவே வராது" என்று ஆசி கூறி சுவாமிகள் அந்த சிறுவனை வழியனுப்பி வைத்தார்.

உண்மையில் பெரியவர் அந்தக் காலத்தில் ஓரளவு காய்கறிகளும் சிறிது அரிசிச் சாதமும் எடுத்துக்கொள்ளும் வழக்கத்தை வைத்துக் கொண்டிருந்தார். ஆனால், பையனுக்கு இந்தப் பத்தியம் அவசியம் என்பதால் அந்த மகான் தன் உணவையும் மாற்றிக்கொண்டார். குழந்தை தன் நாக்கைக் கட்டுப்படுத்தும் போது தாமும் அந்தக் கட்டுப்பாட்டை ஏற்க வேண்டும் என்று கருதி காரியத்திலும் செய்து காட்டினார். சேய்க்கு வந்த நோய்க்குத் தாயும் மருந்து உண்பதுபோல!



கிரிபாலா


இந்த தேசத்தின் வாழையடி வாழையான ஞானப்பரம்பரை, எத்தனை மகத்தான கருணையை இந்த மண்ணில் விதைத்திருக்கின்றது! பரமஹம்ஸ யோகானந்தர் எழுதிய ஒரு யோகியின் சுய சரிதம் என்ற நூலில் 56 ஆண்டுகளுக்கும் மேலாக உணவு உண்ணாமலே வாழ்ந்த கிரிபாலா என்ற பெண் யோகியைப் பற்றிய தகவல் வருகிறது. தாவரங்களைப் போலத் தன் உடல் மூலமே இயற்கையிலிருந்து தனக்குத் தேவையான உணவை தயாரித்துக் கொள்ளும் சக்தி தனக்கு அருளப்பட்டதாக யோகானந்தரிடம் சொன்னாள் அந்தப் பெண். தன் உணவுக்காக பிற உயிர்களோ விலங்குகளோ, தாவரங்களோ கஷ்டப்படக்கூடாது என்ற அவரது கருணைதான் அந்த சக்தியை அவருக்கு அளித்திருக்க வேண்டும்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார், தன்னம்பிக்கை இல்லாதவனே நாத்திகன் என்று முழங்கிய விவேகானந்தர், மரணத்தின் நிழலில் கொடும் நோயால் பாதிக்கப்பட்டு, 'இவருக்கு இப்போது இருக்கும் வலி மிக மிகக் கடுமையானது' என்று மருத்துவர்கள் கூறிய நேரத்திலும் புன்னகையுடன் "இந்த உடல் வாழை இலையைப் போன்றது. இலையில் எத்தனையோ ருசியான உணவுகளைப் பரிமாறுவது போல், வாழ்க்கை, அனுபவங்களைப் பரிமாறுகிறது. ஆனால், சாப்பிட்டு முடித்தபின் யாராவது எச்சில் இலையை எடுத்துப் போவார்களா? எறியத்தானே வேண்டும்?" என்று சொன்ன ரமண மகரிஷி... என்ன அபாரமான பட்டியல் இது!

இவர்கள் எல்லாம் தோன்றிய மண்ணில்தான் இப்போது ஞானம் வழங்கும் சாமியார்களிடம்கூட ஐந்து நட்சத்திர அந்தஸ்து வந்து சேர்ந்திருக்கிறது. அறக்கட்டளைக்கு கோடி கோடியாக சொத்து இருக்கிறது. நேற்றுவரை கேள்விப்படாத அருளாளர்கள் திடீரென்று பிரமாண்ட பிரைவேட் கோயில்களை அமைக்கிறார்கள். யோகா கற்றுத்தர ஒரு கூட்டமே அலைகிறது. இளம்பிள்ளைகள் ஓவர் நைட்டில் சில ஆசிரமங்களால் கவரப்பட்டு படிப்பையும் வேலையையும் உதறி வீட்டுக்குத் திரும்ப மறுக்கும் அளவுக்கு சாமியார்களால் ஈர்க்கப்படுகிறார்கள். கணவனோடு வாழ்ந்து வரும் பெண்கள் கணவனைத் துறந்து ஆசிரமங்களில் ஐக்கியமாகிறார்கள். 'எங்கே திடீர் செல்வம் கொழிக்கிறதோ, அங்கே ஏதோ குற்றம் இருக்கிறது (Where there is fortune, there is crime)' என்ற பிரசித்தி பெற்ற வாசகம் நினைவுக்கு வருகிறது. மாபெரும் கட்டடங்களும் பணம் கொழிக்கும் அறக்கட்டளைகளும் இன்று எல்லா மதங்களிலும் பரவியிருக்கும் ஒரு பெரு நோய்.



வள்ளலார்



ரமண மகரிஷி



விவேகானந்தர்

ஒரு குகையில் ஏகப்பட்ட தங்க நாணயங்களைக் கண்ட ஒரு துறவி, ‘எமன் எமன்’ என்று கதறி ஓடினார். இரு நண்பர்கள் அதைப் பார்த்து குகையில் ஏது எமன் என்று ஆராய்ந்தார்கள். மின்னும் தங்க நாணயங்களைக் கண்ட இருவருக்கும் சந்தோஷம் தாங்கவில்லை. இதைப் போய் எமன் என்கிறாரே, பாவம். விவரம் தெரியாத மனுஷன் என்று சிரித்துவிட்டு இருவரும் இருட்டிய பின் தங்கத்தை ஊருக்குள் எடுத்துப் போய் பங்கு போட முடிவு செய்தனர். இடையில் பசி எடுக்கவே, ஒருவர் போய் உணவு வாங்குவது, இன்னொருவர் காவல் இருப்பது என்று முடிவாகியது. உணவு வாங்கச் சென்றவர் திரும்ப குகைக்குள் நுழைந்தபோது உள்ளே இருந்த நண்பரால் தாக்கப்பட்டு இறந்தார். ‘அப்பாடி, இவன் ஒழிந்தான். இனி எல்லாத் தங்கமும் எனக்குத்தான்’ என்று நினைத்த மற்றவன், நண்பன் வாங்கி வந்த சாப்பாட்டை

சாப்பிட்டான். அடுத்த நிமிடம் அலறித் துடித்து இறந்தான், அவன் சாப்பிட்ட உணவில் விஷம் கலந்திருந்தது!

புதையல் அப்படியே இருந்தது. அதைப் பார்த்து எமன் என்று அலறிய ஞானியின் குரல் மட்டும் அந்த இடத்தில் ஒரே சத்தியமாக ஒளிர்ந்தது. எப்போதோ கேட்ட கதை. இப்போதுகூட சில துறவிகள் காசைக் கண்ணால் பார்ப்பது இல்லையாம். அறக்கட்டளைக்கு நேரே ஃபண்ட் ட்ரான்ஸ்பர் செய்துவிட்டால் போதும், ஞானம் உடனே வீடு தேடி பிரசாதமாக பார்சலில் வந்துவிடும்!

அவர்களைச் சொல்லியும் என்ன பயன்? ஞானத்தையும் நிம்மதியையும் தர வல்ல குருவைத் தேடி அலைவதே ஒரு அனுபவம். கிடைத்தால் அதுவே பெரும் வரம். அந்தப் பொறுமை இல்லாத ஒரு தலைமுறை, ஞானத்தைக்கூட குறுக்கு வழியில் அடைய நினைக்கும்போது சில தவறுகள் நடக்கவே செய்யும். நம் ஆசிரமங்களிலும் கோயில்களிலும் கூட்டத்துக்குப் பஞ்சமில்லை. ஆனால், ஆன்மிகம் வளர்த்திருக்க வேண்டிய கருணைக்குதான் பஞ்சம்; ஆன்மிகவாதிகளின் ஒரே சொத்தாக இருந்திருக்க வேண்டிய எளிமைக்குதான் பஞ்சம்.

சமீபத்தில் படித்த கவிதை:

கோயிலுக்குப் போனேன்

கூட்ட நெரிசல்

தப்பித்து வெளியே வந்து

படியில் அமர்ந்தேன் காற்றாட

“என்னத்துக்குத்தான் நெருக்கறாங்களோ

தெரியலை” என்றேன்

“எனக்கும் தெரியலை ” என்றார்,

அருகில் வந்து அமர்ந்த கடவுள்.

# 15

## வரவை எதிர்பார்த்தவளின் மறைவை எதிர்பார்ப்பவன்...

பாபநாசத்திலிருந்து திருமதி பாலாம்பாள் என்ற பெண்மணி அண்மையில் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். தான் பார்த்த ஒரு சம்பவத்தையும் அதன் பாதிப்பில் அவர் எழுதிய கவிதையும் அதில் பதிவு செய்திருந்தார். பையன் வெளிநாட்டில் இருக்கிறான். அம்மாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லை என்று 15 நாள் லீவில் வந்தான். அம்மாவின் உடம்பு அப்படியே இருந்தது. பையன் உள்ளேயும் வெளியேயும் அலைந்தான். ‘என்னடா இது... ரொம்ப உடம்பு சரியில்லை என்று வரவழைத்தார்கள். பார்த்தால் ஒன்றும் ஆகவில்லையே’ என்று நினைப்பது போல இருந்ததாம் அவனது நடவடிக்கை! பாலாம்பாள் எழுதிய கவிதை இதுதான்:

‘பத்து மாதமாக சுமந்துகொண்டு

குழந்தையின் வரவை

ஆவலோடு எதிர்பார்க்கிறாள் தாய் -

பத்து நாட்களாகக் கிடக்கும்

தாயின் மறைவை

ஆவலோடு எதிர்பார்க்கிறான் மகன்! ’

கொஞ்சம் கடுமையான கவிதைதான். ஆனால், உண்மைக்கு மிக நெருங்கி வருகிற கவிதை. இன்றைய நடுத்தர மற்றும் மேல் தட்டு வீடுகள் தோறும் வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகள் பெருகிவிட்டார்கள். தன்னுடைய நாற்பது வயதுகளில் தன் மகன்கள் அமெரிக்கா போக வேண்டும் என்று மிக ஆவலோடு இருக்கும் பெற்றோர் எழுபதுகளை தொடத் துவங்கும்போது பிள்ளைகள் திரும்ப மாட்டார்களா என்று தவிக்கும் துயரங்கள் பெருகி வருகின்றன. கொஞ்ச நாள் போய் மகனுடன் வசிக்கிறார்கள். தொடர்ந்து அங்கே இருக்க முடியாத நிர்பந்தங்கள்; இங்கே வந்தால் தனிமை என்னும் துன்பக் கேணி. அங்கேயும் ஒட்டாமல் இங்கேயும் பிடிக்காமல் புலம்பும் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஒரு கட்டத்தில் முதியோரின் உடல்நலம் குறைய ஆரம்பிக்கும்போது பிரச்னை பெரிதாகிவிடுகிறது. அமெரிக்காவில் வசிக்கும் மகன் வருவதா? சிங்கப்பூரில் வசிக்கும் மகன் வருவதா? இங்கேயே இருக்கும் மகள் பார்ப்பதா?

பிரளய காலத்தில் எறும்புகள் பந்தாக ஒன்றை ஒன்று பற்றியபடியே கடலில் மிதக்குமாம். அதுபோல முதுமை என்னும் பிரளயத்தில் ஒருவரை ஒருவர் பற்றிக்கொண்டு பயணிக்கும் தம்பதியரில் ஒருவர் முன்னால் விடைபெற்றுக் கொண்டால், மற்றவரின் நிலை மிகக் கஷ்டமாகி விடுகிறது. வசதி படைத்த மகன்கள் இப்போது இதற்காகவே இருக்கும் முதியோர் இல்லங்களை நாடுகின்றனர். என்.ஆர்.ஐ. ஓல்ட் ஏஜ் ஹோம்! அங்கே சேர்த்துப் பணம் அனுப்பினால் போதும். உடம்பு சரியில்லை என்றால்கூட தொந்தரவு செய்ய மாட்டார்கள். இல்லப் பணியாளரே மருத்துவமனையில் சேர்த்து விடுவார். ஒருவேளை ஏதாவது ஆகிவிட்டாலும் இன்டர்நெட்டில் படத்தை காட்டிவிட்டு காரியங்கள் அங்கேயே முடிந்துவிடும்.

மிகப் பெரிய பிரச்னையின் தலைவாயிலில் இன்றைய சமூகம் நிற்கிறது - முதியோரின் தனிமை! அவர்களோடு சேர்ந்து வாழும் வீடுகளிலும் அவர்களுக்கான மரியாதைகள் குறைந்தே வருவது கண்கூடு. ‘வயசானா பேச்சைக் குறைக்கணும்’ என்று வீடுகளிலும் ‘என்னா, பெரிசு, வூட்ல சொல்லினு வந்துட்டியா?’ என்று வீதிகளிலும் முதியோர் நாளும் சிறுமைப் படுத்தப்படுகின்றனர்.

காலம் ஒரு சருகுபோல அவர்களை உலரச் செய்கிறது. ஒரு துளி பிரியத்தையும் கருணையையும் மரியாதையையும் எதிர்பார்த்து இந்தச் சருகுகள் அலைகின்றன.

அமரர் சுஜாதாவின் அருமையான சிறுகதை ஒன்று நினைவில் நிற்கிறது. அண்ணன் ஆறு மாசம், தம்பி ஆறு மாசம் அம்மாவை வைத்துக்கொள்வது என்று முடிவெடுக்கிறார்கள். தம்பி ஆறு மாசம் வைத்துக்கொண்ட பிறகு, அம்மாவுக்கு ரெயில் டிக்கெட் எடுத்து விடுகிறான், அண்ணன் வீட்டுக்கு அனுப்ப. அண்ணன் ஓயாமல் ஃபோன் செய்து, தான் வெளிநாட்டுக்கு டெபுடேஷனில் போகப் போவதாகவும் இப்போதைக்கு அம்மாவை வைத்துக்கொள்ள முடியாது என்றும் சொல்கிறான். தம்பி மனைவியோ பத்ரகாளி ஆகிவிட்டாள். “ஒருநாள்கூட அதிகம் வைத்துக்கொள்ள முடியாது” என்கிறாள். “என்னை ஒரு இடமா வைச்சிருங்கப்பா” என்ற அம்மாவின் கிழட்டுப் புலம்பல் எடுபடவில்லை. இருந்திருந்தால்போல செய்தி வருகிறது - ஏகப்பட்ட வருஷங்களாக கோர்ட்டில் நிலுவையில் இருந்த ஒரு வழக்கு தீர்ப்பாகி அம்மாவின் பூர்வீக சொத்து ஒன்று - பல லட்சம் மதிப்புடையது - அவளுக்குக் கிடைக்கப் போகிறது என்று. தம்பி ரயில்வே ஸ்டேஷனுக்கு அந்தக் கணமே போய் டிக்கெட்டை கான்சல் செய்து வரும் வழியில், அண்ணனுக்கு தந்தி அனுப்புகிறான், அம்மா இங்கேயே இருக்கட்டும் என்று. வீட்டுக்கு வந்தால் அண்ணனிடம் இருந்து தகவல் வந்திருக்கிறது. ‘டெபுடேஷன் கான்சல். நானே வந்து அம்மாவைக் கூப்பிட்டுப் போகிறேன்.’

இந்த தேசத்தில்தான் ஸ்ரவணனின் கதையும் நடந்தது. கண் தெரியாத பெற்றோரை கூடைகளில் வைத்துச் சுமந்த ஸ்ரவணனின் கதையே இந்த தேசப் பிதாவின் வாழ்க்கையில் ஆதர்சமான கதையாக இருந்தது.

மகாராஷ்டிரத்தில் பண்டரீபுரத்தில் வழங்கப்படும் மெய் சிலிர்க்கும் கதை ஒன்று உண்டு. முத்தாபாய் - சனாதேவன் தம்பதிக்கு புண்டரீகன் என்ற மகன் இருந்தான். பாண்டுரங்கனின் பரம பக்தன். ஆகவே, புண்டரீகனைச் சந்திக்க அவனது குடிசைக்கே வந்துவிட்டார் பாண்டுரங்கன். குடிசையின் வெளியே பெரும் சகதி. வாயிலில் நின்று புண்டரீகனை அழைத்தார் பெருமாள். தாய், தந்தைக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த புண்டரீகன், லேசாக வெளியே எட்டிப்பார்த்து, ஒரு கல்லை

குடிசைக்கு வெளியே தூக்கிப்போட்டு, 'கொஞ்சம் இந்தக் கல்லில் கால் வைத்து நில்லுங்கள் சுவாமி. அம்மா, அப்பாவை கவனித்து விட்டு பிறகு வந்து உங்களைச் சந்திக்கிறேன்' என்றானாம். ஒரு காலால் மண்ணையும் இன்னொரு காலால் விண்ணையும் அளந்த பரந்தாமன், அந்தச் சிறு கல்லில் இரு கால்களையும் பாலன்ஸ் செய்து கொண்டு சமர்த்தாக காத்திருந்தாராம். தன் பக்தன் வெளியே வர! புண்டரீகனின் ஆணைக்குக் கட்டுப்பட்ட பாண்டுரங்கனுக்கு 'புண்டரீக வரதன்' என்றே பெயர் வழங்கலாயிற்று. ஆண்டவனே வந்து 'கொஞ்சம் அர்ஜென்ட்' என்று கூப்பிட்டும் அம்மா, அப்பாவின் பணிவிடையைக் கவனித்த கதை நம் புராணத்தில் நிலைபெற்றுவிட்டது.

நம் கலாசாரத்தில் எந்த மதர்ஸ் டே, ஃபாதர்ஸ் டே கொண்டாட்டமும் கிடையாது. ஒரு நாளை ஒதுக்கி, பூச்செண்டு அனுப்புவதல்ல; ஒவ்வொரு நாளும் அவர்களின் ஆசியையும் அன்பையும் பெறுவதே நம் கலாசாரத்தின் விரிவும் பொருளும். இன்றைய முதுமை கேட்பது கொஞ்சம் மரியாதை, நம் வேலைகளுக்கு இடையில் ஒரு விசாரிப்பு. "சாப்பிட்டீங்களா?" என்ற ஒற்றை வார்த்தை. "எங்க காலத்திலே..." என்று அவர்கள் பேச ஆரம்பிக்கும்போது "இதை இதோட ஏழு முறை சொல்லி யாச்சு" என்று சிடுசிடுக்காத பொறுமை, அவர்களின் கோபங்களைக்கூட "ஏதோ பெரியவங்க" என்று விட்டுத்தள்ளும் பெருந்தன்மை. இவ்வளவே!

என் தகப்பன் எனக்கு இதைத்தான் சொல்லிக் கொடுத்தான் - முதிர்ந்த மரத்தின் வேர்களைப் போல் மண்ணில் ஊன்றவும் பெருத்த பறவையின் சிறகுகள்போல் விண்ணில் அலையவும்...' என்று சொல்கிறது ஒரு ஆப்பிரிக்க பழங்குடிப் பாடல். நம் எல்லோரும் நம் பெற்றோரிடம் கற்றது இதைத்தான். நிலத்தில் கால் ஊன்றவும் கனவுகளில் சிறகடிக்கவும் அவர்களே நம்மைப் பயிற்று வித்தார்கள். இன்று அவர்கள் தடுமாறும்போது தோள் கொடுப்பது, அதையும் கொஞ்சம் சிடுசிடுக்காமல் செய்வது கடமை மட்டுமல்ல; அதுவே நமக்கான நாளைய பாதுகாப்பு. ஏனெனில், தன் தகப்பன் தன் தாத்தாவுக்குத் தோள் கொடுப்பதைப் பார்த்த மகனே அதை பிற்காலத்தில் தானும் செய்கிறான். நிலத்தில் நடக்கும்போது பறவையின் சிறகுகளை அதன் கால்கள்தான் சுமக்கின்றன; அந்தப் பறவை வானில் பறக்கும்போது, அதன் கால்களையும் சேர்த்து சிறகே சுமக்கிறது. ஒரு பருவத்தில்,

பிள்ளையை, பெற்றவர் தாங்குவதும், இன்னொரு பருவத்தில் பெற்றவரைப் பிள்ளைகள் தாங்குவதும்தான் இயற்கையின் அழகான விதி. இல்லையா?

# 16

## பதில்களைத் தேடி ஒரு பயணம்

அநேகமாக மனிதனின் பேச்சுப் பயணம், கேள்வி பதிலோடுதான் தொடங்குகிறது. ‘வாட் இஸ் யுவர் நேம்? அல்லது ‘உம் பேர் என்னம்மா?’ என்ற கேள்வியைத்தான் பெரும்பாலான குழந்தைகள் முதன்முதலில் சந்திக்கிறார்கள். பிறகு பரீட்சைகள், நேர்முகத் தேர்வுகள் என்று தொடர்ந்து, வாழ்வு முழுவதும் கேள்விகளும் பதில்களும் ஊடும் பாவுமாக அமைகின்றன.

மனிதகுலத்தின் அறிவு வளர்ச்சியே கேள்விகளால் வந்ததுதான். ‘மரத்திலிருந்து விழுந்த ஆப்பிள் ஏன் மேலேயே போகாமல் கீழே விழுந்தது?’ என்ற ஒற்றைக் கேள்விதான் நியூட்டனை மகத்தான ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கு இட்டுச் சென்றது. ஒவ்வொரு கேள்விக்குமான பதிலைத் தேடும் முயற்சியே அறிவியலையும் சரி, ஆன்மிகத்தையும் சரி, முன்னெடுத்துச் சென்றது. ஒவ்வொரு பதிலில் இருந்தும் ஆயிரம் புதுக் கேள்விகள் புறப்படுகின்றன.

என் மகள் சிறு குழந்தையாக இருந்தபோது, ஒருமுறை அவளை மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்று சோறு ஊட்ட முற்பட்டேன். அங்கே வந்த காகத்துக்கு ஒரு வாய் சோறு போட்டபோது அவளிடமிருந்து வந்தது முதல் கேள்வி: ‘காக்கா

சோறு சாப்பிடுமா?' குழந்தைகள் கேட்கும் கேள்விக்கு நாம் சொல்லும் பதில், தேன்கூட்டின் மீது எறியப்படும் கல்! ஒரு கல் எறிந்ததும் நூறு தேனீக்கள் புறப்படுவது மாதிரி, ஒரு பதில் வந்தவுடன் நூறு கேள்விகள் புறப்படும்.

'ஓ, காக்கா சோறு சாப்பிடுமே,' என்று நான் சொன்னதும் புறப்பட்டது கேள்வித் தேனீக்களின் பட்டாளம்.

கோயில்ல பார்த்த யானை சோறு சாப்பிடுமா? 'நீ சோறு தின்னறியா, வேற ஏதாவது தின்னறியா?'ன்னு நேத்து சினிமாவில் கேட்டாங்களே, அப்ப வேற என்ன தின்னுவாங்க? முயல் சோறு சாப்பிடுமா? அது லபக் லபக்னு சாப்பிடும்போது சோறு கீழே விழாதா? சோற்றைக் கீழே சிந்தக் கூடாதுன்னு முயல் அம்மா திட்டுமா..? அவளுக்கு பத்து வாய் சோறூட்டுவதற்குள், அனிமல் பிளானட்டுக்கும், நேஷனல் ஜியாகிரபிக்கும் 'மிருகங்களும் அரிசிச் சோறும்' என்ற தலைப்பில் ஒரு டாக்குமென்டரி எடுத்துக் கொடுக்கும் அளவுக்கு எனக்கு விவரம் தெரிந்துவிட்டது.

மிகச்சிறு பிள்ளை ஒருவன் ஒரு கேள்விக்கான பதிலை விடாது துரத்திப் போன கதையே நம் உபநிஷதங்களின் தலைவாயில். நசிகேதன், ஒரு குழந்தை மேதை. அவனுடைய தந்தை வாஜசிரவஸ் ஒரு யாகம் செய்தார். யாகம் என்றால் பலவகையான தானங்கள் செய்ய வேண்டும். வாஜசிரவஸ் கொஞ்சம் ஃபிராடு வேலை செய்தார். செல்லாக் காசை பிச்சைக்காரரின் குவளையில் போடுவதுபோல, ரொம்ப கிழட்டுப் பசுமாடுகளை தானமாகக் கொடுத்தார். நசிகேதன் யோசித்தான். 'தானம் என்பதே நம்மிடம் உள்ள மிகச் சிறந்த பொருளைக் கொடுப்பதுதானே? அப்பாவோ பல்போன பசுக்களைக் கொடுக்கிறாரே... அதுசரி, அவரிடம் உள்ள மிகச் சிறந்த பொருள் எது? நான்தான் அவரிடம் உள்ள மிகச் சிறந்த பொருள். என்னை யாருக்கு இவர் தானம் செய்வார்?'

ஓடிப்போய், யாகத்தில் படுபிஸியாக இருந்த அப்பாவின் கைகளைப் பிடித்து இழுத்து, 'என்னை யாருக்கு அப்பா தானம் செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்டு நச்சரித்தான். டென்ஷனில் இருந்த அப்பா எரிச்சலோடு கத்தினார்: 'உன்னை யமனுக்கு தானம் செய்கிறேன்' இவ்வாறு சொன்ன பிறகு அந்த இடமே இடி விழுந்தது போலாகிவிட்டது. யாகம் செய்ய கங்கணம் கட்டியபிறகு, சொன்ன சொல்லை நிறைவேற்றியே ஆக வேண்டும். 'ஐயோ, மகனை யமனுக்குத் தருவதாகச்

சொல்லிவிட்டேனே' என்று மனம் கொதித்தார் அப்பா. ஞானக் குழந்தையான நசிகேதன், 'அப்பா, நான் யமனிடம் செல்கிறேன். எனக்கு என்ன பயம்? இது, எனக்கு முன்னே கோடிப் பேர் போன வழி. எனக்குப் பின் இன்னும் கோடிப்பேர் செல்லப்போகும் வழி' என்று சொல்லி யமலோகத் துக்குச் சென்றான். தானே வந்த அதிதி என்பதால் 3 நாட்கள் நசிகேதனை யாரும் கவனிக்கவில்லை. பின்பு கவனித்த யமன், சிறு குழந்தையிடம் கருணை கொண்டு அவனுக்கு மூன்று வரங்கள் அளித்தான். முதல் வரமாக தந்தைக்கு மனச்சாந்தி ஏற்படவும், இரண்டாவது வரமாக சொர்க்கத்தை அடையும் வழியையும் கேட்டான் நசிகேதன். இரண்டுமே அருளப்பட்டது. மூன்றாவதாக நசிகேதன் கேட்டதுதான் அறிவு உலகின் கதவுகளைத் தட்டும் ஒரு கேள்வி: 'மரணத்துக்குப் பின் உடலிலிருந்து பிரியும் உயிர் என்ன ஆகிறது?'

'நசிகேதா, இந்தக் கேள்வியை விட்டுவிடு. வேறு ஏதாவது கேள். பொருள் வேண்டுமா? மிக நீண்ட ஆயுள் வேண்டுமா? அரசனாக வேண்டுமா? செல்வம் வேண்டுமா? எதுவும் கேள். இந்தக் கேள்விக்கான பதிலை மட்டும் தேடாதே. பதில் தேடுபவர்களைக் காணாமல் போக வைக்கும் கேள்வி இது' என்று யமன் மன்றாடினான்.

நசிகேதன் ஏற்கவில்லை. 'நீ வழங்கும் எதுவும் மறைவதுதானே? மறையாதது உண்மை. அதுவே எனக்கு வேண்டும்' என்றான் நசிகேதன்.

அவனுடைய உறுதியை மெச்சி அவன் கேள்விக்கான பதிலை யமன் வழங்கியதுதான் இந்திய ஞானத் திறவுகோலான 'கடோபனிஷத்' என்னும் உபநிடதம்.

அண்மையில் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கடஸ்ராஜ் என்னும் சிவன் கோயிலில் உள்ள ஒரு குளம் வற்றுகிறது என்று செய்தி வந்திருக்கிறது. இந்தக் குளம்தான் மஹாபாரதத்தில் இடம் பெற்ற பிரசித்தி பெற்ற 'நச்சுப் பொய்கை' என்று நம்பப் படுகிறது. மஹாபாரதத்தில் ஒரு மானைத் துரத்தி ஓய்ந்து போய் தாகம் எடுத்த பாண்டவர்கள் நீர் தேடி இந்த நச்சுப் பொய்கைக்கு வந்தார்கள். 'தான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொன்னால்தான் நீரைப் பருக முடியும்' என்று ஒரு அசரீரி சொல்வதை அலட்சியம் செய்து நீரைக் குடித்து, செத்து விழுந்தார்கள். இறுதியாக வந்த தருமன் கேள்விகளுக்கு பதில்

சொன்னான். மகிழ்ந்த அசரீரி - அது ஒரு யட்சன் - அவன் தம்பிகளை உயிர்ப்பித்தான் என்பது கதை. இந்தக் கேள்விகளும் பதில்களும் மிகவும் சிந்தனைக்குரியவை. வசீகரமானவை. ‘புல்லைவிட வேகமாக எது வளரும்?’ என்ற யட்சனின் கேள்விக்கு ‘கவலை’ என்று தருமன் பதில் சொல்கிறான். ‘எது மனிதனுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய லாபம்?’ - ‘நோயில்லாத உடல்.’ ‘மனிதனால் வெல்லவே முடியாத பகை எது?’ - ‘கோபம்’. ‘யார் சந்தோஷமான மனிதன்?’ - ‘கடன் இல்லாதவன், பிழைப்புக்காக வேறு நாட்டுக்குப் போகாதவன், தன் வீட்டில் சமைத்த உணவை உண்ணும் பேறு பெற்றவன், அவனே சந்தோஷமானவன்!’ ‘எது ஆச்சரியம்?’ - ‘ஒவ்வொரு நாளும் பிறர் இறப்பதைப் பார்த்தும் தான் மட்டும் சாஸ்வதம் என்று மனிதர்கள் நினைப்பது.’ ஒவ்வொரு கேள்விக்கான பதிலும் நம் மனமாகிய நச்சுப்பொய்கையிலிருந்து ஞானம் என்னும் அமுதத்தை சுரக்க வைக்கிறது.

‘கேள்விகளை நீ கேட்கிறாயா அல்லது நான் கேட்கட்டுமா?’ என்று ‘திருவிளையாடல்’ படத்தில் நடிகர் திலகம், தருமியான நாகேஷைக் கேட்பார். ‘நானே கேக்கறேன். எனக்கு கேக்கத்தான் தெரியும்’ என்று நாகேஷ் சொல்வதைக் கேட்டு நாம் யாவரும் சிரித்திருக்கிறோம். உண்மையில் தமக்குப் பதில்கள் தெரியாத கேள்விகளைத் துரத்தி அலைந்ததே மனித நாகரிகத்தின் மிக நீண்ட பயணத்தின் வரலாறு. பதில்களைத் தேடிப் பயணம் போன மனிதர்கள் விட்டுச் சென்ற ரத்தம் தோய்ந்த பாதைகளில் தான் நாம் நடந்துகொண்டிருக்கிறோம்.



கடஸ்ராஜ் கோயில்

# 17

## சத்தியத்திலிருந்து விலகாதவனே உயர் குலத்தோன்

திருவண்ணாமலையில் ஒரு பள்ளி. பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதிக்கொண்டு இருக்கிறார்கள் மாணவர்கள். மாவட்ட கலெக்டர் திடீர் சோதனைக்கு வருகிறார். அவரை சோதனைக்கு வரவழைத்தது ஒரு இ-மெயில். அந்தப் பள்ளியில் பரிட்சை எழுதும் மாணவி ஒருத்தியின் தந்தை கலெக்டருக்கு அனுப்பிய இ-மெயில். பரிட்சை மேற்பார்வைக்கு வேறு ஒரு அரசுப் பள்ளியிலிருந்து வந்திருக்கும் ஆசிரியர்கள் துணையோடு சில குறிப்பிட்ட மாணவர்களுக்கு ‘பிட்’ விநியோகம் நடக்கிறது. நன்றாக படிக்கும் மாணவி வருத்தப்பட்டாள், தன் பெற்றோரிடம். ‘எத்தனை படித்தென்ன? பிட் அடிக்கும் மாணவர்களுக்குத்தானே அதிக மதிப்பெண் கிடைக்கும்?’ அந்த மாணவியின் அப்பா அனுப்பிய மெயில் படித்து உடனே பள்ளிக்கு வந்த கலெக்டர் கண்டது என்ன? இன்விஜிலேட்டர்களாக இருக்கும் ஆசிரியர்களிடம் சில மாணவர் களின் எண் எழுதிய தாள் இருக்கிறது. அந்த எண் கொண்ட மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விடைத்தாள்களின் ஜெராக்ஸ் பிரதிகள் 20 இருக்கின்றன. பரிட்சை நேரத்தில் அவர்களுடைய மொபைல் போனில் கால்கள்

வந்த வண்ணம் உள்ளன...

கலெக்டர் உடனே ஆசிரியர்களை பணிநீக்கம் செய்ய உத்தரவு போடுகிறார்.

சிறு வயதில் நாம் எல்லோரும் வாசித்த காந்தியின் சத்திய சோதனையில் ஒரு சம்பவம். ஆசிரியர் வகுப்பு நடத்திக்கொண்டுஇருக்கும்போது பள்ளிக் கல்வி இன்ஸ்பெக்டர் வருகிறார். மாணவர்களுக்கு டிக்டேஷன் போடுகிறார். இளம் மாணவரான மோகன்தாஸ் காந்தி, ‘கெட்டில்’ என்ற சொல்லை தவறாக எழுதி விடுகிறார். அருகில் நிற்கும் வகுப்பாசிரியர் பக்கத்து மாணவனைப் பார்த்து அந்தச் சொல்லை சரியாக எழுதும்படி காந்திக்கு ஜாடை காட்டுகிறார். மாணவர்கள் காப்பி அடிக்காமல் இருக்கவே ஆசிரியர் பக்கத்தில் நிற்பதாக நினைக்கும் காந்தி, ஆசிரியரின் சமிக்ஞையை புரிந்துகொள்ளவேயில்லை.

திருவண்ணாமலை சம்பவத்தில் ஆசிரியர்கள், பல படி மேலேறி விட்டார்கள். தாங்களே விடையை எழுதி, பிட்டு கொடுத்துவிட்டார்கள்! ஒரு திரைப் படத்தில் நடிகர் ஆர்யா எங்கெங்கே என்னென்ன பிட்டு இருக்கிறது என்பதற்கு தனியாக ஒரு பிட்டு வைத்திருப்பார். மேற்படி ஆசிரியர்களும் அப்படியும் செய்து ஒரு கிளாசரி (எங்கே என்ன இருக்கிறது என்ற குறிப்பு) போட்டிருந்தால் இன்னும் சுலபமாக இருந்திருக்கும்!

ஆசிரியர்கள் வெளிப் பள்ளியிலிருந்து வரவழைக்கப்படுவதே மாணவர்களுக்கு எந்தத் தனி அபிமானமும் காட்டக்கூடாது என்பதற்காகத்தான். ஆனால், யார் எங்கே மேற்பார்வைக்கு வருகிறார்கள் என்று கண்டுபிடிக்க ஒரு விலையிருக்கிறது. வருபவர்களை வழிக்குக் கொண்டுவர ஒரு விலை இருக்கிறது. சரியான விடைகளை எழுதித்தர, அதை பரிட்சை ஹாலிலேயே விநியோகிக்க ஒரு விலை. பாஸ் போட ஒரு விலை. பரிட்சைக்கு வராமல் வேறு ஒரு ஆளை விட்டுப் பரிட்சை எழுதவைக்க ஒரு விலை. அட்மிஷனுக்கு ஒரு விலை... இவ்வளவையும் பார்க்கும் மாணவர்களிடம் “நல்லாப் படிச்சாதான் நாளைக்கு நல்ல ஃபியூச்சர் அமையும்” என்று எந்த முகத்தோடு நம்மால் சொல்ல முடியும்? “அதெல்லாம் பிறகு பார்க்கலாம். நீங்க முதல்ல வரப்போற இன்விஜிலேட்டர் யார்ன்னு விசாரிங்க” என்று பையன் பதில் சொல்லக்கூடும். விலை கொடுத்தால் எதையும் வாங்கலாம் என்று அறிந்த திமிரோடு வளரும் அந்தக் குழந்தைகள்

நாளை மருத்துவர்களாக, அரசு அலுவலர்களாக, தொழில் அதிபர்களாக பணியாற்றும்போது அவர்கள் வாயிலில் நிற்கும் கதியற்ற ஏழைகளிடம் கருணை காட்டுமாறு அவர்களை யாராலாவது கட்டாயப்படுத்த முடியுமா?

சாந்தோக்ய உபநிஷதத்தில் இப்படி நிகழ்ச்சி விவரிக்கப்படுகிறது. ஏழு வயதான சிறுவன் தன் தாயிடம் சென்று, “நான் குருகுலவாசம் செய்ய விரும்புகிறேன். என் குலம் என்ன? என் கோத்திரம் என்ன? என் தந்தை யார்?” என்று கேட்டான். தாயார், “உன் பெயர் சத்திய காமன். என் பெயர் ஜாபாலா. நீ இதை மட்டும் குருவிடம் சொல்.” என்று பதிலளித்தாள். சிறுவன் முரண்டு பிடித்தான்: “நீ சொன்னால்தான் என்னைச் சேர்த்துக்கொள்வார்கள்.” தாய் வருத்தத்துடன், “மகனே என் இளமையில் நான் பலருக்குப் பணிவிடை செய்தேன். அவர்களில் ஒருவர் நீ பிறக்கக் காரணமாக இருந்தார். அவரது பெயரையோ வம்சத்தையோ நான் கேட்டறிய வில்லை.”

சிறுவன் கௌதமர் என்ற முனிவரை அணுகினான். தாய் சொன்னதை அப்படியே சொல்லி தன்னை சேர்த்துக்கொள்ளச் சொன்னான். குரு ஒரு கணமும் தயங்கவில்லை. “மகனே, எது உயர் குலம்? யார் அக்குலத்தைச் சேர்ந்தவர்? எவன் சத்தியத்திலிருந்து விலகாமல் இருக்கிறானோ அவனே உயர் குலத்தைச் சேர்ந்தவன். எந்தத் தயக்கமும் இன்றி உண்மையைச் சொன்ன நீயே உயர்குலத்தவன். இனி நீ என் சீடன்” என்றார். கௌதமரின் பெருந்தன்மை நம்மை பிரமிக்க வைக்கின்றது. ‘சாதி’ என்ற இடத்தை படிவத்தில் நிரப்பாவிட்டால் இன்று ஒரு பள்ளிக்கூடத்தில்கூட சீட் வாங்க முடியாது. ஆனால், அன்று? ஆசிரியர்கள் அத்தனை மேன்மையானவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அந்த நாட்களில் ஏழு வயதில் குருகுலவாசம் செய்ய வரும் சிறுவன் பன்னிரண்டு ஆண்டுகள் குருவுடன் வசிக்கிறான். அவருக்கான ஏவல்களைப் புரிகிறான். ஒவ்வொரு வாழ்க்கை நிகழ்ச்சியிலும் அவர் எப்படிப் பாதிக்கப்படுகிறார், எவ்வாறு நிலை கலங்காமல் நேர்மையுடன் நிற்கிறார் என்ற விவரத்தை உடனிருந்து அனுபவிக்கிறான். அவை அனைத்துமே அவனுக்கு படிப்பினைகள்.

தைத்திரிய உபநிஷதத்தில் ஒரு பகுதி. கல்வி முடிந்து செல்லும்

மாணவனுக்கு குருவின் இறுதி உபதேசம், இப்போது பட்டம் பெறும் மாணவர்களுக்கு கான்வோகேஷன் அன்று அறிஞர் ஒருவர் ஆற்றும் உரைபோல.

“உண்மை பேசு; அறத்தினின்று வழுவாதே

அறம் செய்வதைப் புறக்கணிக்காதே;

அறவழியில் செல்வத்தைத் தேடு

படிப்பதை ஒருநாளும் நிறுத்தாதே

பிறருக்கு எப்போதும் சொல்லிக்கொடு

தாய் உன் முதல் தெய்வம்

தகப்பன் அடுத்த தெய்வம்

ஆசானும் அதிதியும்கூட தெய்வங்கள்.

பிறருக்குக் கொடுப்பதே உன் தர்மம்

ஆனால் கொடுக்கும்போது சிரத்தையுடன் கொடு.

அலட்சியத்துடன் அல்ல. அடக்கத்துடன்

அன்புடன் பணிவுடன் கொடு”

போதனை முடிந்ததும் குரு வேண்டுகிறார்: “நான்கு திசைகளிலிருந்தும் சீடர்கள் என்னை நாடி வர வேண்டும். சாந்தமானவர்களாயும் புலன்களை ஒடுக்கியவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும். வருஷம் மாதங்களால் பூர்த்தி அடைவதைப் போன்று என் வாழ்வு நல்ல சீடர்களால் நிறைவு பெற வேண்டும்.”

இப்படி வழிவழி வந்த உயர்ந்த ஆசிரியர்கள் இப்போதும் எங்கேயாவது இருக்கத்தான் செய்கிறார்கள். என் அப்பா தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். ஒருமுறை மலேசியாவிலிருந்து கல்வி ஆண்டின் இடையில் சென்னைக்கு வந்த ஒரு மாணவனுக்கு வேறு எந்தப் பள்ளியும் இடம் தராதபோது என் அப்பா மனமிரங்கி அட்மிஷன் கொடுத்தார்.

அடுத்தநாள் அப்பா குளிக்கப் போயிருக்கிறார். மாணவனின் தந்தை ஒரு பெருங்கூடை நிறைய மாம்பழத்தோடு வீட்டுக்கு வந்து விட்டார். நானும் என் இரு அக்காக்களும் துள்ளுகிறோம். விருந்தினர் எதிரில் கூடையில் விழாது இருக்க அம்மா எங்களை

பார்வையாலேயே எச்சரிக்கிறார். கட்டிய துண்டோடு வெளியே வந்த அப்பா பழக்கூடையைப் பார்க்கிறார். அவர் நல்ல திருநெல்வேலி கருப்பு. ஆனால், அப்போது அவருக்கு வந்த கோப ஜுவாலையில் அந்தக் கறுப்பு முகம்கூட சிவந்ததோ? “ஒரு பழம் இங்கே வந்தா அட்மிஷன் கேன்சல்” என்று அவர் போட்ட சத்தத்தில் பையனின் அப்பா பழக்கூடையோடு ஓடுகிறார். “இவரும் வாங்கிக் கொடுக்க மாட்டார். யாராவது கொடுத்தாலும் துரத்துவார்” என்று நாங்கள் அன்று முனகினோம்தான். ஆனால், நம் வேலையைச் செய்ய லஞ்சம் பெறுவது எச்சில் இலையில் சாப்பிடுவதற்குச் சமம் என்பதை எங்களுக்கு அன்று அப்பா புரிய வைத்துவிட்டார்.


# 18

## எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை!

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் இறுதிப் போட்டி, கொல்கத்தா நைட் ரைடர்ஸும் சென்னை சூப்பர் கிங்ஸும் மோதிய மின்சார கணங்கள். அரங்கம் சும்மா அதிர்ந்தது. ஸ்டேடியத்தில் இருந்த உற்சாகத்துக்கு எவ்வகையிலும் குறைந்ததில்லை, வீடுகளில் தொலைக்காட்சி முன் குழுமியிருந்த மனிதர்களின் உற்சாகம். கடைசி ஓவர்கள் - தோனியா? காம்பீரா? கேமரா பார்வை யாளர்களைச் சுற்றிச் சுற்றி வந்தது. பலர் தீவிரமாக பிரார்த்தனை செய்த வண்ணம் இருந்தனர். மந்திரங்களை முணுமுணுத்தோர், ஜப மாலை உருட்டினோர்... எத்தனை பால் அபிஷேகங்களோ, எத்தனை சிதறுகாய்களோ... இந்தியாவில் கிரிக்கெட் ஒரு விளையாட்டு மட்டுமல்ல, அது வாழ்க்கை, அது உயிர்த் துடிப்பு, கடவுளர்களின் ஆசி தேவைப்படும் போராட்டம்! கடைசி ஓவர் என்பது இந்திரலோகத்து வானவில்லில் எழுதப்படும் கலையா ஓவியம்.

வீடுகளில் டி.வி. பார்க்கும் நேரங்களில், பெரியவர்கள் உட்கார்ந்த இடத்தில் இருந்து எழக்கூடாது என்பது பொது விதி. “பாட்டி, நீங்க இங்க உட்கார்ந்தபோதுதான் டெண்டுல்கர் சிக்ஸர் அடிச்சாரு. நீங்க எழுந்தா அவுட் ஆயிடுவாரு. இதுதான் ராசி”

என்று பாட்டியை பாத்ரூம் போகக்கூட விடாத பிள்ளைகள் வீடுதோறும் உண்டு. ஐ.பி.எல். உபயத்தால் வீடு கூட்டும் முனியம்மாகூட, "இன்னுமா தோனி ஹெலிகாப்டர் ஷாட் அடிக்கல?" என்று விசாரிக்கும் அளவுக்கு கிரிக்கெட் நம் கலாசாரத்தோடு இணைந்தது.



லண்டன் லார்ட்ஸ் மைதானம்

அண்மையில் கிரிக்கெட்டின் காசியாக, மெக்காவாக, பெத்லஹேமாக மதிக்கப்படும் லண்டன் லார்ட்ஸ் மைதானத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தபோது பரவசமாகவே இருந்தது. இங்குதான் கபில்தேவ் 1983-ல் கோப்பையைப் பெற்றார். இங்குதான் சௌரவ் கங்குலி வெற்றி பெற்றவுடன் சட்டையைக் கழற்றி வீசினார் என்ற நினைவுகளோடு பற்பல இந்தியர்கள் லார்ட்ஸ் மைதானத்தைத் தரிசித்துக் கொண்டார்கள். ரகசியமாகக் கீழே இருந்த மண்ணைப் பொட்டலம் கட்டியவர்களும் உண்டு. வீட்டுக்குப் போய் பிரசாதமாக விநியோகம் செய்வார்களோ என்னவோ!

சிறுவயதில் நாங்கள் சுவரில் கரிக்கோடுகள் வரைந்து ஓயாது கிரிக்கெட் விளையாடிய நாட்கள் நினைவில் ஆடுகின்றன. நாங்கள் வரைந்த கோடுகளைக் காலம் அழித்துவிட்டது. இன்றைய சிறுவர்கள் புதுக்கோடுகளை

வரைந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அன்றைய கிரிக்கெட், கனவான்களின் விளையாட்டு. இன்று பணம் புழங்க ஆரம்பித்ததும் கவர்ச்சி அதிகமாகிவிட்டது. லார்ட்ஸ் மைதானத்தில் பாதுகாவலர் எங்களிடம், “ஏன் சியர் பாய்ஸ் உங்கள் ஐ.பி.எல். போட்டிகளில் இல்லை?” என்று கேலியாகக் கேட்டார். உலகக் கிரிக்கெட்டில் இன்று ஐ.பி.எல்.தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஆனால், சூதாட்டம், குடிபோதையில் தகராறுகள், மேட்ச் ஃபிக்ஸிங் என்று பணம் புரளப் புரள... களங்கங்களும் புது உயரங்களைத் தொடுகின்றன. ஆன்மிகமோ, அரசியலோ, கலையோ, விளையாட்டோ பெரும் பணம் பீடிக்காதவரைதான் அர்ப்பணிப்பு மிளிரும். உயர்ந்த சிந்தனைகளுக்கும், லட்சியங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்குமான பாதை எளிமை மட்டுமே.


“நான் வணங்கும் ராமனும் சீதையும் நகைகள் ஏதும் அணிவதில்லை” என்று சொன்ன காந்தி, விருதுநகரில் வசித்த அம்மா, “வீட்டுக்கு ஒரு கழிப்பறை கட்ட வேண்டும்” என்று வேண்டுகோள் விடுத்தபோது, “எதுக்கு வீண் செலவு? நாளைக்கு எவனாவது முதலமைச்சர் வீட்டை வசதியாக் கட்டிக்கிட்டாருன்னு சொல்லுவான்” என்று மறுத்துவிட்ட காமராஜ், ஒரு வாளித் தண்ணீரில் தானும் குளித்து, தன் வேட்டியையும் துவைத்துக்கொண்ட ராஜாஜி... இவர்கள் எல்லாரும் இன்று மியூசியம் மனிதர்கள்.

நம் திருமணங்களையே பாருங்கள். மந்திரங்களின் உச்சரிப்புக்கு இருந்த மரியாதையெல்லாம் அழகுநிலைய ஒப்பனைக்கு மாறிவிட்டது. பெண், மாப்பிள்ளை, பெண்ணின் அத்தைகள், சித்திகள், அம்மா, பாட்டி, மாப்பிள்ளையின் தங்கைகள் என்று எல்லோரும் அழகு நிலையம் போய்த் திரும்பிய பின்தான் திருமண வரவேற்பு ஆரம்பிக்கிறது. ‘ஏழு மணி’ என்று வரவேற்பு அட்டையில் போட்டிருந்தாலும் இத்தனை பேர் அழகு நிலையம் போய்த் திரும்ப எட்டு எட்டரை ஆகிவிடும். ஆகவே, பாதிப் பேர் பஸ்ஸுக்கு லேட்டாகும் என்று சாப்பிட்டுவிட்டு, மொய்ப் பணத்தைத் தகப்பனிடம் கொடுத்துவிட்டு தேங்காய்ப் பைகளுடன் விலகி விடுகின்றனர் - பெண், மாப்பிள்ளை வருமுன்னரே!

இலை போட்டு எளிமையாக இருந்த விருந்துகள் 100 ஐட்டங்கள் பரிமாறப்படும் பஃபே என்று மாறி பாதிப்பேர் எச்சில்

தட்டைத் தூக்கி அலைந்துகொண்டிருக்கும் அவமானமாகிவிட்டது. திருமணமா? தலைவர் அந்த வழியாக வீட்டுக்குப் போகிறாரா? மஞ்சள் நீராட்டா? வை, ஃபிளக்ஸ் பேனர்களை! கம்பத்துக்குக் கம்பம் சிரிக்கும் படாடோபங்கள். “ஏம்மா, தீபாவளிக்குன்னு புடவை வாங்கிக்கற; கொஞ்சம் சரிகைபோட்டு வாங்கினால் என்ன?” என்று நாங்கள் கேட்கும்போது, “சிம்பிள் லிவிங், ஹை திங்கிங்’ (எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை) என்று பதில் சொல்லும் என் அம்மாவின் வார்த்தைகள், புத்தகத்தில் மூடிவைத்த செண்பகப் பூபோல, நினைக்கும் போதெல்லாம் மணக்கிறது.

எளிமையை ஒரு வாழ்வியல் நெறியாகக் கொண்ட மனசு, ‘எதுவுமே வேண்டாம்’ என்ற நிலைக்கு எளிதில் நகர்கிறது. திருமழிசை ஆழ்வார் பற்றி வைணவர்கள் ஒரு கதை சொல்வார்கள். ஆழ்வார் ஒரு மூலையில் அமர்ந்து எதையோ தைத்துக்கொண்டு இருந்தாராம். அவரைப் பார்த்த பார்வதி அவருக்கு ஏதாவது வரம் தர விரும்பினாள். சிவனும் பார்வதியும் அவர் அருகே சென்று, ‘‘என்ன வரம் வேண்டும்?’’ என்று கேட்டனர். ‘‘என்ன தர முடியும்?’’ என்றார் ஆழ்வார். ‘‘ஐஸ்வர்யம் தருகிறோம்’’ என்றனர் உமையும் சிவனும். ‘‘அதை வைத்து நான் என்ன செய்வது? தேவையில்லை’’ என்றார் ஆழ்வார். ஏதாவது கொடுத்தே தீர வேண்டும் என்று செல்லப் பிடிவாதம் பிடித்தார் சிவன். ‘‘இந்த ஊசியில் கொஞ்சம் நூல் கோர்த்துக் கொடுங்கள். அதுவே போதும்’’ என்றாராம் ஆழ்வார்!



'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்பது பழமொழி மட்டுமல்ல, அதுவே ஒரு மந்திரம். திரும்பத் திரும்பச் சொல்லும்போது பேயாட்டம் போடும் மனது அமைதிப் படுகிறது. 'மொபைல் ஃபோனில் இந்த மாடல் பிடிக்கவில்லை', 'எப்போது பீரோவைத் திறந்தாலும் போதுமான ஆடை இல்லாத மாதிரி தோன்றுகிறது', 'என்னதான் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்காரர் மாதிரி உங்களுக்கு சாமர்த்தியமாக சம்பாதிக்கத் தெரியலை...' தொடரும் இந்தப் புலம்பல்கள் இன்று பலரின் இயல்பு. 'எதுவுமே எனக்குப் போதாது' என்ற இந்த இயல்பின் இன்னொரு கட்டம்தான் எதிலும் ஆடம்பரத்தையும், மிகையையும், கவர்ச்சியையும் நாடும் இச்சை. இதன் பின்னர், அதற்கான பணத்தைத் துரத்துதல்- அதன்பின் பணம் வரும் வழி எப்படி இருந்தாலும் பரவாயில்லை என்ற விபரீத எண்ணம். இது விஷ வட்டம். எளிமைதான் கடவுளிடம் போக மிகச் சுலபமான வழி என்ற மரபுதான் நம் சமயத்தின் நம்பிக்கை. 'ஆன்மாவில் எளிமை உள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது' என்கிறது பைபிள். இந்தச் சிந்தனை இல்லாத ஒரு மதத்தைக்கூட நம்மால் காட்டிவிட முடியாது. எல்லா மதங்களின் வேராக இருப்பதும் எளிமை என்னும் தத்துவம்தான். ஆனால், இன்று கட் அவுட்களின் பிரமாண்டத்திலும் சியர்

கேர்ள்ஸின் ஆரவாரங்களிலும் வேரே ஆட்டம் கண்டிருக்கிறது. மரம் எத்தனை நாள் தாங்குமோ?

# 19

## அண்ணன் என்னடா... தம்பி என்னடா...

கண்ணனைப் பற்றித்தான் நம் மண்ணில் எத்தனை எத்தனை வசீகரக் கதைகள். எனக்கும் என் பெண்ணுக்கும் மிகப் பிடித்தது ஒரு சிறுவனுக்கு கண்ணன் அண்ணனாக வந்த கதை.

சிறுவன் ஹரி, ஏழை அம்மாவோடு காட்டின் ஓரமாக வசித்து வந்தான். தினமும் பள்ளிக்குப் போக காட்டைக் கடக்க வேண்டும். சின்னஞ்சிறுவன் அல்லவா? ஹரிக்கு ஒரே பயம். மற்ற சிறுவர்கள் எல்லாம் பணக்காரர்கள். வண்டி வைத்துக் கொள்வார்கள். ஹரியின் அம்மாவுக்கு வசதி கிடையாது. சிறுவனின் பயத்தைப் போக்க அம்மா சொல்லிக்கொடுத்தாள்: “உனக்கு ஒரு அண்ணன் இருக்கிறான். அவன் பெயர் கோபால். ரொம்பப் பலசாலி. தைரியசாலி. நீ காட்டு வழியே போகும்போது அவன் பெயரைச் சொல்லிக்கொண்டு போ. பயமே தெரியாது.” அம்மா, கண்ணனையே தன் பையனுக்கு அண்ணனாகவும் தனக்கு மூத்த மகனாகவும் வரித்து விட்டாள்.

ஹரி அப்படியே நம்பி, தன் அண்ணனின் பெயரைச் சொல்லிக் கத்தினான். காட்டு வெளியில், மின்னும் கண்களுடன், சின்னஞ்சிறு மயிற்பீலி அசைய, புல்லாங்குழலுடன் நந்தகோபாலன் தன் தம்பிக்குத் துணையாக வந்துவிட்டான்.

ஒவ்வொரு நாளும் காட்டு வழியில் கள்ளர் பயமில்லாமல் சிறுவனோடு துணை வந்தான். ஹரி, வீட்டில் வந்து அண்ணனைப் பார்த்த தகவலைச் சொன்னபோது சிறுவனின் மிதமிஞ்சிய கற்பனையை நினைத்துச் சிரித்தாள் அம்மா.

பள்ளியில் ஒரு நாள் விருந்து. எல்லா சிறுவர்களும் சுவையும் மதிப்பும் மிகுந்த உணவுப் பொருளைக் கொண்டுவர வேண்டும். ஹரியின் ஏழைத் தாய் என்ன செய்வாள்? “நீ உன் அண்ணனையே கேள்” என்று சொல்லிவிட்டாள். ஹரியும் கேட்க, அண்ணன் ஒரு சிறு கிண்ணத்தில் மிகச் சுவையான தயிரைக் கொண்டு வந்து தம்பியிடம் தந்தான். “போயும் போயும் தயிரா கொண்டு வந்தாய்?” என்று மிரட்டிய ஆசிரியை, அந்தத் தயிரை சுவைத்துப் பார்த்து அரண்டு போய்விட்டார். அத்தனை அபூர்வமான சுவை! “இதை யார் கொடுத்தது?” என்று எல்லாரும் ஹரியைத் துளைத்தெடுக்க, தன் அண்ணாவைப் பற்றிச் சொன்னான் ஹரி. கள்ளங்கபடமற்ற சிறுவனின் பக்திக்காக கண்ணனே அண்ணனாக வந்ததை நினைத்து அந்தக் கிராமமே வியந்து நின்றது. குஜராத்தில் துவாரகாநாதனாக கண்ணன் காட்சிதரும் இடத்தில் வழங்கும் கதை இது.

இறைவனைக் காதலனாக நினைக்கும் சன்மார்க்கம், ஆண்டவனாக நினைக்கும் தாச மார்க்கம், தாயாக-தந்தையாக நினைக்கும் சத்புத்திர மார்க்கம், நண்பனாக நினைக்கும் சக மார்க்கம் என்று இறைவனை வழிபடும் பல மார்க்கங்கள் உண்டு. இவை எதையும்விட இறைவனை அண்ணனாக நினைக்கும் அழகு உருக வைக்கிறது. “என் வடபழநி அண்ணா!” என்று வடபழநியில் இருக்கும் முருகனை வசீகரமாக அழைக்கிறார் சிவநேசர். அமரர் தேவனின் ‘ஜஸ்டிஸ் ஜகந்நாதன்’ என்னும் கதையில் கதாநாயகி ஜெயலட்சுமி ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தன் கணவனை விடுவிக்க வள்ளியையும் தேவசேனையையும், “அண்ணிகளே, என்னைக் காப்பாற்றக் கூடாதா?” என்று வேண்டுவதாய் தேவன் எழுதுகிறார். அவர் மிகச் சிறந்த முருக பக்தர்.

அண்ணன் என்னும் உறவு பெரும்பாலும் இரு அதீத எல்லைகளில் நிற்பது. மிகத் தீவிரமான மரியாதை அல்லது கடும் வெறுப்பு என்னும் இரண்டே நிலைகள்தான் இதற்கு உண்டு. உலகின் முதல் பெற்றோரான ஆதாம்-ஏவாளின் இரு மகன்களான காயீன் மற்றும் ஆபேல் இருவரின் கடும் பகையை பைபிள் சொல்கிறது. ஆபேல், காயீனால் கொல்லப்படுகிறான். உலகின்

முதல் கொலை! சகோதரர்களின் பகையால் வந்தது. இந்திய நீதிமன்றங்களில் அண்ணன்-தம்பியருக்கு இடையில் இருக்கும் வழக்குகளைத் தள்ளுபடி செய்தால் பாதி வழக்குகள் குறைந்துவிடும். திருமணம் ஆகும் வரை சகோதரிகளுக்குள் சண்டைகள் மிகும். திருமணம் ஆன பின்பு அக்கா-தங்கை பாசம் அதிகமாகும். ஆனால், திருமணத்துக்குப் பிறகு அண்ணன்-தம்பி உறவுக்கு ஏதோ ஆகிவிடுகிறது. இளம் வயதில் அவர்களுக்குள் இருந்த நெருக்கம், உரிமை, சேர்ந்து ஆடிய கிரிக்கெட்... எல்லாம் என்ன ஆகிறது? விலகி விலகிச் செல்லும் விரிசல் கண்ட உறவுப் பாலத்தை இணைக்கும் கயிற்றை முதலில் வெட்டியது யார்?

தாஸ்தாவஸ்கி உலகின் மிகச் சிறந்த எழுத்தாளராக மதிக்கப் படுகிறவர். ரஷ்யர். அவரது வாழ்வில் ஒரு நம்ப முடியாத நிகழ்ச்சி நடந்தது. 28 வயதில் ராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. அவருடைய முறை வருவதற்கு ஒரு நிமிடம் முன்பு அந்தத் தண்டனை நிறுத்தப்பட்டு, நாலு வருட சிறைத் தண்டனையாக மாற்றப்பட்டது. அந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டு தன் தம்பிக்கு அவர் எழுதிய கடிதம் மிகப் பிரசித்தம்.

‘தண்டனைக்காக எங்களை மைதானத்துக்கு அழைத்துப் போனார்கள். மொத்தம் ஆறு பேர். கொல்வதற்கு வசதியாக மூன்று மூன்று பேர்களாக எங்களை நிறுத்தினார்கள். சிலுவையை முத்தமிட வைத்தார்கள். இன்னும் சரியாக ஒரு நிமிடம் இருந்தது. அந்தக் கடைசி நிமிடத்தில் நான் உன்னை நினைத்தேன். சகோதரனே, உன்னை மட்டுமே நினைத்தேன். அப்போது ஊதுகுழல் ஒலித்தது. மாட்சிமை பொருந்திய மன்னர் எங்கள் மரண தண்டனையை நாலுவருட சிறைத் தண்டனையாகக் குறைத்துவிட்டார்.”

ஒரு 28 வயது வாலிபன் மரணத்தை முத்தமிடும் இறுதிக் கணத்தில் தன் சகோதரனை நினைத்து நேசத்தின் அழகைச் சொல்லும் அந்தக் கடிதம், உலக இலக்கியங்களில் ஒன்றாகி விட்டது.

நாளை பட்டாபிஷேகம் என்று ஊரெல்லாம் கொண்டாட்டமான நேரத்தில் சிற்றன்னை, “பரதனுக்குத்தான் பட்டாபிஷேகம். நீ காட்டுக்குப் போக வேண்டும் என தந்தை சொன்னார்” என்று சொன்ன கைகேயியிடம், “என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ” என்று ராமன்

கேட்டானாம். அண்ணனைத் தம்பியும், தம்பியை அண்ணனும் குத்திக் கொன்ற ரத்தக்கறை படிந்த சரித்திரப் பக்கங்களின் தொடர்ச்சி இன்னமும் நம்மிடையே வளர்ந்தபடியே இருக்கிறது. ஆனால், சக-உதரன் சகோதரன் என்ற உறவின் புனிதம் தலைமுறைகள் தாண்டி நம் கலாசாரத்தின் கோபுரக் கலசமாக மிளிர்ந்தபடியே இருக்கும். ஏனென்றால், நம் தேசத்தின் கலாசாரத் தலைவன் ராமன் போட்டுத் தந்த பாதை இது.

தன்னை வெட்ட ஒரு வெறியில் ஓடிவரும் ஜெகவீரராம பாண்டியன் என்ற தம்பியிடம், அண்ணன் அதிவீரராம பாண்டியன் சொல்லும் பாடல் இது:

செஞ்சுடரோன் மைந்தனையும்

தென்னிலங்கை வேந்தனையும்


பஞ்சவரில் பார்த்தனையும்

பாராதே -

விஞ்சி விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட

பரதனையும் ராமனையும் பார்.

‘அண்ணன் வாலியின் கொலைக்குக் காரணமான சுக்ரீவன், அண்ணன் ராவணனைக் காட்டிக் கொடுத்து இறுதியில் தான் இலங்கை வேந்தன் ஆன விபீஷணன், தன் மகன் அபிமன்யூ இறந்தபோது அண்ணன் தருமன் மீது கோபம் கொண்டு அவனைக் கொல்லப் போன அர்ஜுனன் - இவர்கள் யாரும் உனக்கு உதாரணமல்ல. ராமனும் பரதனுமே சகோதரர்களுக்கான உதாரண புருஷர்கள்’ என்ற பாடலைக் கேட்டு தம்பி ஜெகவீரராம பாண்டியன் தன் முடிவை மாற்றினானாம்.



தாஸ்தாவஸ்கி

சோமாலியாவின் கடும் பட்டினியில் ஒற்றி உலர்ந்த, குழந்தைகளைப் படம் எடுக்கப் போனார் ஒரு பத்திரிகையாளர் ஒளியற்ற கண்களுடன், சவம் போலக் கிடந்த தன் தம்பியைத் தூக்கிக்கொண்டு நடந்த எலும்புக்கூடு போன்ற அண்ணனைப் படம் எடுத்துவிட்டு, கதறி அழுதபடி தன் நாட்டில் இருந்த தன் தம்பியை தொலைபேசியில் அழைத்துச் சொன்னார். “நம் உறவின் உயர்வை இன்றுதான் அறிந்துகொண்டேன்.” மரணத்தின் கதவைத் தட்டும் தம்பியைக் காப்பாற்றப் போராடும் ஆப்பிரிக்கச் சிறுவனைப் போன்ற அன்பான அண்ணன்கள் இன்னமும் இருந்து கொண்டுதானே இருக்கிறார்கள்!

# 20

## பெண் என்ற நீறுபூத்த நெருப்பு

‘குடும்பத்தின் பெருமைக்குப் பெரிதும் காரணம் கணவனா, மனைவியா?’ என்ற தலைப்பை முதன்முதலில் சாலமன் பாப்பையா அவர்கள், மதுரையில் ஒரு பட்டிமன்றத்தில் அறிமுகப்படுத்தினார்.இந்தத் தலைப்பெல்லாம் வெற்றி பெறுமா என்று எல்லாருக்கும் தயக்கம். பேச்சாளர்களும் நடுவரும் நடந்து பட்டிமன்ற மேடைக்கு அருகில் சென்றனர். இரண்டு தெரு தாண்டியும் கூட்டம் கூடியிருப்பதைப் பார்க்க முடிந்தது. ஏதோ வித்தியாச மாக உணருகிறார்கள். என்ன அது? பெரும் அளவில் பெண்கள் கூட்டத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். 1970-களில் அது சாத்தியமே இல்லை; வழக்கமும் இல்லை.

அன்றைய பட்டிமன்றத்துக்குத் தீர்ப்பு வழங்குகையில், குடும்பங்களில் ஆண்களின் அலட்சியத்தையும் பெண்கள் படும் பாடுகளையும் அவர் சொல்லச் சொல்ல, கூடியிருந்த பெண்கள் குமுறி அழுது தீர்த்தனர். “மனைவியே” என்று அவர் தீர்ப்புச் சொல்லி முடித்ததும் கண்ணீருடன் அவரை வாழ்த்தியபடியே நகர்ந்தது பெண்கள் கூட்டம். தமிழகத்தின் தவிர்க்க முடியாத கலை வடிவமாகிவிட்ட பட்டிமன்றங்களின் பாதையை மாற்றிப்போட்ட தனிப்பெரும் நிகழ்வு அது.

அன்று அவர் சொன்ன தீர்ப்பை கடந்த பல்லாண்டுகளாக அவர் மாற்றவில்லை. ‘கணவனா, மனைவியா?’ என்று பட்டிமன்றம் நடந்தால் அவரின் மாறாத் தீர்ப்பு மனைவி பக்கமே. அடி, உதை, அலட்சியம் என்று நம் பெண்கள் வாழ்ந்த துன்பக் கேணியின் இருண்ட பக்கங்களை, பட்டிமன்றம் காட்சிப்படுத்தியதைப் போன்று வேறு எந்தக் கலை வடிவும் காட்சிப்படுத்தியதில்லை. அன்று, தமக்கு விதிக்கப்பட்ட நிர்ப்பந்தங்களைத் துறந்து வீதிக்கு வந்து குழுமிய பெண்கள், ஏதோ ஒன்றை நமக்குச் சொல்கின்றனர். காலம் காலமாக பெண்கள் தம் கட்டுப்பாடுகளையும் அடையாளங்களையும் துறந்து எழும்போது, சரித்திரம் படைக்கப்படுகிறது. சமூக வாழ்வில் மட்டுமல்ல. ஆன்மிக வாழ்விலும் இதுவே நடந்திருக்கிறது.

மீரா, ஆண்டாள், காரைக்கால் அம்மையார் மற்றும் கன்னட இலக்கியத்தின் பெரும் படைப்பாளியாகக் கருதப்படும் அக்கமஹாதேவி எல்லோரும் ஏதேதோ கட்டுப்பாடுகளை உடைத்துக்கொண்டு வந்தவர்கள்தான்.

அக்கமஹாதேவி சிறு வயதிலிருந்தே சென்ன மல்லிகார்ஜுனன் என்ற பெயரில் விளங்கும் சிவனிடம் பக்தி கொண்டுவிட்டார். ஜைன மன்னன் கௌசிகன் நகர் உலா வருகையில் மஹாதேவியின் அழகைப் பார்த்து மயங்கி மையல் கொண்டான். பெற்றோரின் வற்புறுத்தலும் சேர்ந்துகொள்ளவே, “நான் சிவ பூஜை செய்வதைத் தடுக்கக் கூடாது” என்று மன்னனிடம் நிபந்தனை விதித்து அவன் சம்மதித்த பிறகே கல்யாணத்துக்கு ஒப்புக்கொண்டார், மஹாதேவி. திருமணம் ஆன உடனேயே நிபந்தனை தூக்கிப் போடப்பட்டது. தொந்தரவுகள், அவமதிப்பு தொடர்ந்தன. கணவன் மாளிகையை விட்டகன்று ஸ்ரீசைலத்துக்குப் போகப்போவதாகச் சொன்னார் மஹாதேவி. அரண்மனை உடமைகள் எதையும் எடுத்துப் போகக்கூடாது என்று கட்டளையிடப்படுகிறது. அத்தனை நகைகளையும் ஏன் உடையையும்கூடத் துறந்து தன் காட்டருவிக் கூந்தலால் மட்டுமே உடலை மறைத்து, திகம்பரியாக அரண்மனையை விட்டு நீங்கினார், மஹாதேவி. கவிதைகளைப் பொழிந்தார். இவை ‘வசனக் கவிதை’ என்னும் வகையைச் சேர்ந்தவை. கன்னட இலக்கிய உலகில் பெரும் சாதனையாகக் கருதப்படும் இந்த வசனங்களை எழுதிய மஹாதேவியை, மரியாதையோடு

அக்கமஹாதேவி என்று அழைக்கின்றனர். ஒரு வசனம் இப்படிச் சொல்கிறது.

நெருப்பில்லாச் சூட்டில் வெந்தேனம்மா!

வடுவில்லாக் காயத்தில் நொந்தேனம்மா!

சுகமிழந்து தவித்தேனம்மா!

சென்ன மல்லிகார்ஜுன தேவனை விரும்பி

வரக்கூடாத பிறவிகளில் வந்தேனம்மா!

12-ம் நூற்றாண்டுப் பெண்ணான மஹாதேவி ‘கேடுகெட்ட கணவர்களை அடுப்பில் வைப்போம்’ என்று எழுதிய வசனம் அன்றைய சூழலில் எத்தனை மகத்தான சமூக மீறலாக இருந்திருக்கும்! காலம்தோறும் நம் பெண்கள் சமையல் அறைகளின் இருட்டில் சிந்திய கண்ணீரில், எரிந்த அடுப்புகள் எத்தனை அணைந்தனவோ!

மீராவும்கூட அப்படி ஒரு போராளிதான். ராஜபுத்ர வம்சத்தில் வந்த அவளின் தைரியத்துக்குக் கேட்பானேன்! மீராவின் பக்தியை அடியோடு வெறுத்த அவளின் நாத்தனார் உதா, ஒருநாள் மீராவுக்கு விஷத்தைப் பாலில் கலந்து கொடுத்துவிட்டாள். மீராவின் கையில் குவளையைக் கொடுத்ததும் உதாவினால் குற்ற உணர்வைத் தாங்க முடியவில்லை. “வேண்டாம் மீரா, குடிக்காதே, அது விஷம்” என்று கதறினாள். “அதனால் என்ன?” என்று வைராக்கியத்துடன் கேட்டு மீரா பாலை அருந்திவிட்டாள். என்ன ஆச்சரியம்! மீராவுக்கு எதுவுமே நேரவில்லை. ஆனால், அதே நேரத்தில் துவாரகாபுரியில் நூற்றக்கணக்கான பக்தர்கள் பார்த்திருக்க, கண்ணனின் வெண்மை நிற விக்கிரகம் கன்னங்கரேல் என்று மாறி, அவன் சந்நிதியின் கதவுகள் தாமே அடைத்துக் கொண்டன! நடந்த சம்பவங்களினால் கலக்கமடைந்த மீராவின் கணவன் அரசன் ராணா, மீரா சதா நேரமும் இருக்கும் கண்ணன் கோயிலை இடிக்கச் சொன்னான்.

‘ராணா, கோயிலை இடிக்கும் அளவுக்கு உங்கள் மனம் கலக்கமடையக் காரணமான நான் உங்களுக்கு ஏற்ற மனைவியே அல்ல. என் பாதை வேறு’ என்று சொல்லிவிட்டு தடுக்க முடியாத உறுதியோடு தன் தம்புராவை மட்டும் துணையாகக் கொண்டு மீரா புறப்பட்டுவிட்டாள். பாலைவனங்களில் திரிந்து, காடுகளில் அலைந்து, பிருந்தாவனத்தை அடைந்த மீரா, ரூபகோஸ்வாமி

என்ற துறவியின் ஆசிரமத்தை அடைந்தாள். “மகான் பெண்களைப் பார்க்க மாட்டார்” என்று சீடர்கள் அவளைத் துரத்தினர். மீரா சொன்னாள்: “இந்தப் பிருந்தாவனக் கோயிலில் ஆண் யார், பெண் யார்? அந்த விஷ்ணு மட்டும்தானே ஆண்? அவனிடம் பிரேமை கொண்ட அடியார்கள் எல்லாம் பெண்தானே!” உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்த ரூபகோஸ்வாமி கதறியபடியே வெளியே வந்து மீராவின் பாதம் பணிந்தார் என்பது வரலாறு.

காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதி. கணவன் தான் கடையில் வியாபாரத்தை கவனித்துக் கொண்டிருந்தபோது, இரண்டு மாம்பழங்களை அனுப்பினான். பசியோடு வந்த சிவனடியார் ஒருவருக்கு ஒரு மாம்பழத்தை புனிதவதி கொடுத்தாள். மதிய சாப்பாட்டுக்காக கணவன் வந்தபோது இன்னொரு பழத்தைப் பரிமாறினாள்.

“இரண்டு பழம் அனுப்பினேனே, இன்னொன்றையும் கொண்டு வா” என்றான், கணவன். ஒரு பழத்தையாவது மனைவி சாப்பிடட்டுமே என்ற எண்ணமே இல்லாத கணவன்! சிவனடியாருக்கு அளித்துவிட்ட உண்மையைச் சொல்ல தைரியம் இல்லாத மனைவி, சிவனை வேண்டி ஒரு பழத்தைப் பெற்று அதனைக் கணவனிடம் தந்தாள். முந்தைய பழத்தைவிட இது அதிக சுவை. “எங்கிருந்து வந்தது?” என்று மிரட்டினான் கணவன்; மிரண்டாள் மனைவி. உண்மையைச் சொன்ன புனிதவதியை விட்டு விலகினான் கணவன். மனைவியின் சக்தி அவனை பிரமிக்க வைத்திருக்க வேண்டும். மனைவியைப் பார்த்து பிரமிக்கும்படி இருந்தால் அவளை மனைவியாக நடத்த முடியாதே! ஓடியவன் அதே வேகத்தில் இன்னொரு திருமணத்தையும் முடிக்க, புனிதவதி வாழ்வைத் துறந்து காரைக்கால் அம்மையானாள். அழகான மேனி இருந்தால் ஆண்டவனைத் தேடும் பயணம்கூட ஆபத்தில் முடியும் என்று, பேய் உருவம் கேட்டுப் பெற்றாள்.



*மீரா*

‘திமுதிமுவென புயற்காற்று அடித்தாலே, காடெல்லாம் விறகான செய்தி போலே’ என்று பாரதியார் எழுதுகிறார். அவமானம், விரக்தி என்று இல்லறத்தில் புயற்காற்று வீசினால், காடெல்லாம் விறகானாற்போல பெண்ணும் பேயாகத்தான் வேண்டுமோ என்னவோ!

நூற்றாண்டுகளாக வீடுகளை விட்டு வெளியே வராத நம் பெண்கள், காந்திஜியின் தண்டி யாத்திரையில் கைகளில் இடுக்கிய குழந்தைகளோடு இணைந்தபோதுதான் இந்த தேசத்தின் விடுதலை உறுதி செய்யப்பட்டது. அது ஆன்மிக மறுமலர்ச்சியோ, அரசியல் விடுதலையோ, சமூக மாற்றமோ, சலுகைகளும் உரிமைகளும் மறுக்கப்பட்ட, குரலற்ற பெண்கள் கொதித்து எழுந்து இணையும் போதுதான் சரித்திரங்கள் மாறுகின்றன, இல்லையா?

# 21

## சந்தோஷத்தில் சனீஸ்வரன் சங்கடத்தில் சர்வேஸ்வரன்!

சில மாதங்களுக்கு முன் சனிப்பெயர்ச்சி வந்ததே, அப்போது ஒரு நண்பர் திருநள்ளாறு போய் வந்தார்.

“சரியான கூட்டம். லட்சம் பேர் இருக்கும். ஒரு கருப்புத் துணியை கடையிலே வாங்கறதுக்குள்ளே நாக்குத் தள்ளிப் போச்சு. ஒரு கைக்குட்டையைவிடச் சின்னத்துணி, விலை நூறு ரூபாய் தெரியுமா? வாங்கி, குளத்தில் குளிச்சி, சனிபகவானை தரிசனம் பண்ணிட்டு வந்தேன்” என்றார். நூறாவது செஞ்சுரி அடித்த சச்சின்கூட இவ்வளவு பூரித்திருக்க மாட்டார்.

“சரி, திருநள்ளாறு கோயிலில், ஈஸ்வரன் பேர் என்ன?” என்று கேட்டேன்.

“அதுதான் சனீஸ்வரன் பார்த்தேனே, அவருதான்...” என்றார்.

நண்பரை நினைத்து எனக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரிய வில்லை. திருநள்ளாற்றில் கோயில் கொண்டிருக்கும் தர்ப்பாரண்யேஸ்வரர் உடனுறை போகமார்த்த பூண்முலையாள்தான், அங்கே ஈஸ்வரனும் அம்மையும்.

கிரகங்களுக்கும் பிரச்னைகள் வந்தபோது, அவை நாடி வந்து, ஆசி பெற்று உய்ந்த தலங்களில், இன்று அவற்றுக்கு கிடைக்கும் ராஜ மரியாதை, பாவம், ஒரிஜினல் சுவாமிக்கும் அம்மனுக்கும் கிடையாது.



திருவிளையாடல் படத்தில் மண்டபத்தில் வந்து சிவன் பாட்டெழுதிக் கொடுக்க அதை வாங்கிக்கொண்டு பாண்டியன் அவைக்குப் போகும் தருமி வேடத்தில் அமரர் நாகேஷ் பின்னி எடுத்ததை யாரால் மறக்க முடியும்? பாடலோடு அவைக்குப் போன ஏழை தருமிக்கு யார் அரசர் என்பதே தெரியாது. உள்ளே நுழைந்ததும் தென்படும் முதல் ஆளிடம் பவ்யமாகப் பணிந்து 'மன்னா!' என்பார். அவர் பக்கத்தில் கைகாட்ட, அடுத்த ஆளிடம் போய் பணிந்து நின்று 'வேந்தே' என்பார். அவரும் கைகாட்ட, அதற்கு அடுத்த ஆளிடம் போய் 'அரசே!' என்பார். குலுங்கிக் குலுங்கிச் சிரிப்போம், அரண்மனைக்குப் போயும் அரசன் யார் என்றுகூட அடையாளம் தெரியாத அப்பாவி தருமியைப் பார்த்து. ஆனால், நாம் கோயிலுக்குப் போய் நவகிரக வழிபாட்டிலும் குறிப்பாக சனி வழிபாட்டிலும் ஈடுபட்டு கோயிலின் மூலமூர்த்தி யார் என்றே தெரியாமல் வெளியே வருவோம்.

காலவ முனிவர் என்பவருக்குத் தொழுநோய் பீடிக்கும் என்று அவர் ஜாதகத்தில் இருந்ததாம். நவகிரகங்களை அவர் வேண்ட, அவையும் அவருக்கு நோயிலிருந்து விலக்கு அளித்தனவாம்.

பிரம்மா இதை அறிந்து “விதியை மாற்றும் உரிமை கிரகங்களுக்கு இல்லை. இது தவறாகக் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு” - அரசு ஆணையில் பியூன் கையெழுத்துப் போட்டதுபோல் என்று கோபித்து ஒன்பது கிரகங்களுக்கும் தொழுநோயைத் தந்துவிட்டாராம். சூரியனார் கோயிலுக்கு அருகில் திருமங்கலக்குடி என்னும் ஊரில் கோயில்கொண்ட பிராணநாதேஸ்வரர் மற்றும் மங்களாம்பிகையை வேண்டிக்கொண்டதால் கிரகங்கள் நோயிலிருந்து காப்பாற்றப்பட்டனவாம். என்ன ஆச்சர்யம் என்றால், இன்று சூரியனார் கோயிலில் நவகிரக வழிபாட்டுக்குக் கூட்டம் அலைமோதுகிறது; பக்கத்தில், பிராணநாதேஸ்வரர் ஓய்வாகத்தான் இருக்கிறார்!

இந்த விபரீதங்களின் இரண்டு முகங்களை நீங்கள் எங்கும் பார்க்கலாம். ஒன்று, சிலபேர், ‘ஈஸ்வரன் என்று இரண்டு பேர்கள் உண்டு. ஒன்று பரமேஸ்வரன். மற்றொருவர் சனீஸ்வரன்’ என்று இருவரையும் ஒரே இடத்தில் நிறுத்திப் பேசுவது. இப்படிப் பேசுபவர்களில் பாதிப்பேர் கோயில் வாசலில் சனி பரிகாரத்துக்கு கருப்புத் துணி விற்கும் கடை போட்டவர்கள்; பாக்கிப் பேர் பரிகார ஜோசியர்கள். ‘சனீஸ்வரன்’ என்று நாம் சொல்வது ‘சனைச்சரன்’ என்ற வடமொழிச் சொல்லின் மோசமான பிறழ்வுச் சொல் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ‘சர’ என்றால் நகர்தல் அல்லது அசைதல். ‘சனை’ என்றால் ‘மெதுவாக’. மெதுவாக நடப்பவர் என்று சனி கிரகத்துக்குக் கொடுக்கப்பட்ட காரணப் பெயர், அவரை ஈஸ்வர அந்தஸ்துக்கு உயர்த்தியது என்பார்கள்.

சனி கிரகம் மிக மெதுவாக இயங்குவது என்று அன்று நம்பப்பட்டிருக்கலாம். உண்மையில் மிக மெதுவான கிரகம் வீனஸ் என்னும் வெள்ளிதான். தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்ள வீனஸ் அம்மையாருக்கு 243 நாட்கள் ஆகின்றன. அவர் தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்வதற்குள், சூரியனையே ஒருமுறை சுற்றி வந்துவிடுவார்!

சூரியனைச் சுற்ற வீனஸ் எடுத்துக்கொள்வது 226 நாள்தான். அதாவது நீங்கள் வீனஸில் வசித்தால் உங்களின் ஒரு நாள், உங்களின் ஒரு வருடத்தைவிட நெடியது. சனிக்கிரகத்திற்கு கால் சரியில்லை என்ற நம்பிக்கை உண்டு என்பதால் சனைச்சரன் என்றார்கள். அதை சனீஸ்வரன் என்று மாற்றி, திருநள்ளாறு குளத்தில் ஒவ்வொரு சனிப்பெயர்ச்சியின் போதும் ஒரு மில்லியன்

பேருக்கு பன்றி மற்றும் பறவைக் காய்ச்சல் வரும் அளவுக்கு கிருமிகளைப் பரப்பித் திரும்புகிறோம்.

இன்னொரு விபரீதம், குரு என்ற கிரகத்தின் இடத்துக்கு தட்சிணாமூர்த்தியை இறக்கியது. 'குரு' என்றால் 'பெரியது' 'பெரியவர்' என்று பொருள். ஜூபிடர் என்னும் வியாழன் (குரு) அத்தனை கிரகங்களிலும் மிகப்பெரிது. ஆனால், இந்த குரு, கிரகமே தவிர தட்சிணாமூர்த்தி அல்ல. தட்சிணாமூர்த்தி என்னும் ஞானப் பிழம்பு, இந்து மதம் சொல்லும் மிக உயர்ந்த தத்துவங்களின் உயர் நிலைப் படிமம்.

வாழ்வே ஒரு நல்ல ஆசிரியரைத் தேடும் பயணம். அப்படிப்பட்ட ஆசிரியர் கிடைத்தபின் உரத்த குரல் பாடங்கள் தேவையில்லை. போர்க்களத்தின் பேரிரைச்சலில் பார்த்த சாரதியாக நின்ற கண்ணன் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசம் எப்படி அர்ஜுனனின் காதில் விழுந்திருக்கும்? அந்த உபதேசமே மௌனத்தில் மனவெளியில் ஒரு மகத்தான ஆசிரியன், தன் மிகச் சிறந்த மாணவனுக்கு வழங்கியது அல்லவா?

பால் பிரண்டன் (Paul Brunton) என்ற யூதர் ரமணரைப் பார்க்கப் போனபோது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஏகப்பட்ட கேள்விகளோடு போனாராம். ஆனால், சந்திப்பின்போது எந்தக் கேள்வியையும் அவரால் கேட்க முடியவில்லை. 'உலகின் ஸ்பரிசத்துக்கு அப்பால் நான் இருந்தேன்' என்று பின்னாளில் பிரண்டன் அந்த அனுபவத்தைச் சொல்கிறார். நெடுநேர மௌனத்துக்குப் பிறகு, "பதில்கள் கிடைத்ததா?" என்று ரமணர் கேட்க, "ஆம்" என்கிறார் பிரண்டன். பார்வையில் வழங்கப்படும் நேத்ர தீட்சை மாதிரி குருக்ஷேத்திரத்தில் இரைச்சலுக்கு நடுவே மோனத்தில் வழங்கப்பட்ட ஞான தரிசனம் அது! தட்சிணாமூர்த்தியின் மௌனப் பாடம், இதுபோல வழி வழி வந்த மனித மனங்களின் பக்குவத்துக்கானது.

குரு என்னும் கிரகத்தின் பரிகாரத்துக்காக, தட்சிணாமூர்த்திக்குக் கொண்டைக்கடலை மாலை போடுவதை என்னவென்று சொல்வது?

இன்று கல்வி, மருத்துவம், மதம் மூன்றும் லாபம் கொழிக்கும் வணிக ஸ்தாபனங்கள்.

கல்வி என்பது ஒரு சாக்கு மூட்டைக்குள் பொருட்களைத்

திணிக்கும் செயல் அல்ல; அது அறிவு தீபத்தின் திரியைத்தூண்டும் பணி.

மருத்துவம் என்பது கால்வலியோடு வருகிறவனுக்கு தலையில் ஸ்கேன் எடுக்கச் சொல்லும் வியாபாரமல்ல; அது காசில்லாதவனுக்கும் வழங்கப்படும் உயிர்ப் பிச்சை.

மதம் என்பது தோஷ நிவாரணங்களும் எழுப்புதல் கூட்டங்களும் அல்ல; அது எல்லா உயிர்களிலும் தன்னையே கண்டு விம்மும் மானிட மகோன்னதம். மூன்றுமே தடம் மாறிப் போயிருக்கும் இன்றைய காலகட்டத்தில் எந்த மதத்தின் பெயராலும் நடத்தப்படும் வியாபாரங்கள்தான் சூடு பிடித்திருக்கிறதே தவிர, மனிதாபிமானம் என்பது மங்கிக்கொண்டே போகிறது, மாலை நேரத்து வெளிச்சம்போல.

இருள் இருந்தால்தானே ஒளி? ஒளி வராமல் போகுமா? அந்த ஒளி வரும் என்ற ஒற்றை நம்பிக்கையின் சக்தி நம்மையும் நம் மதங்களையும் மீட்டெடுக்கட்டும்.

# 22

## நிறுத்துப் பேசுவோம்; பேசுவதை நிறுத்துவோம்!

நம்மைச் சுற்றித்தான் எத்தனை எத்தனை வார்த்தைகள்!

‘ஒரு சொல் பிறந்தால் அதனுடன் கூடவே அது உணர்த்தும் பொருளும் தோன்றுகிறது. பொருளின் கவனம் வந்தால் அதற்கான சொல்லும் அதனூடே வந்துவிடுகிறது. எப்படி சொல்லும் பொருளும் ஒன்றோடு ஒன்று பொருந்தியிருக்கிறதோ, அப்படிப் பொருந்தியிருக்கிறார்கள் இந்தப் பிரபஞ்சத்தின் தாய்-தந்தையரான சக்தியும் சிவனும்’ என்கிறான் காளிதாசன்.

‘ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாக இருந்தது’ என்கிறது பைபிள்.

சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் அத்தனை பவித்ரமான இடத்தை எல்லா மதங்களும் அளித்துள்ளன.

ஆனால், நாமோ விரய வார்த்தைகளை இறைத்துக் கொள்வதிலேயே சுகம் காண்பவர்கள். பேச்சு எனும் பெருநோய் பிடித்த சமூகம் நம்முடையது. மரண வீடுகளில்கூட மௌனிக்காத

செல்போன்கள்! கோயில்களில் குவிந்திருக்க வேண்டிய அமைதியை கீறிப் பார்க்கும் உரத்த குரல் விசாரிப்புகள் - “என்ன ரொம்ப நாளாக் காணல? மருமகளோட மறுபடியும் சண்டையா?” இல்லங்களில் சதா ஓங்கி ஒலிக்கும் சத்தமான டி.வி. நிகழ்ச்சிகள், “உங்க டி.வி. வால்யூம் கம்மி பண்ணுங்க” என்பதையே உரத்த குரலில் ஓயாமல் சொல்லும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள், பேச்சு மேடை நிகழ்ச்சிகளில் பிஞ்சிலே பழுத்த சிறுவர், சிறுமியரின் ஆவேசங்கள், முப்பொழுதும் கிண்டலடிக்கும் காஸ்ட்லி காமெடியன்களின் தெனாவட்டுப் பேச்சுகள்... எக்மோரில் போய் புகைவண்டியில் ஏறியதுமே பயணம் பற்றிய நேர்முக வர்ணனைகள் தொடங்கிவிடுவதை நீங்கள் கவனித்திருக்கலாம். “இப்பதான் ஏறினேன். S-9ல போட்டிருக்கான் அப்பர் பெர்த். சரி வெச்சிடறேன், வண்டி கிளம்பினதும் அடிக்கறேன்!” (யாரை?)

விமானங்கள் தரை தொடுமுன் செல்போன்களின் வீறிடுதல்கள் தொடங்குவதை நீங்கள் வேறு எந்த நாட்டிலும் பார்க்க முடியாது.

சில நாட்கள் முன்பு அண்ணாசாலையில் விபத்துக்குள்ளாகி, வீட்டில் அடித்துத் திருப்பிப் போட்ட கரப்பான் பூச்சி மாதிரி அரசுப் பேருந்து ஒன்று விழுந்து கிடந்ததே, என்ன காரணமாம்? ‘டிரைவர் அந்தச் சிக்கலான திருப்பத்திலும் செல்லில் பேசியதே’ என்று பலர் சொல்கிறார்கள். அடுத்த முறை கால் டாக்ஸியிலோ வாடட¬க் காரிலோ போனால் கவனியுங்கள். இரண்டாவது கியர் போடுவதற்குள் அவருக்கு மூன்று அழைப்புகள் வந்துவிடும். “டியூட்டில இருக்கேன். அப்புறம் கூப்பிடு” என்றபடியே கிட்டத்தட்ட இருபது நிமிஷம் பேசுவார். இருசக்கர வாகனம் ஓட்டுபவர்கள், வண்டி ஓட்டும்போது வரும் அழைப்பை உடனே எடுக்காவிட்டால் இந்தியப் பொருளாதாரம் தடாரென்று சீர்குலைந்துவிடும் அல்லவா? அப்புறம் மன்மோகன் சிங்கும், மான்டேக்சிங் அலுவாலியாவும் என்ன கதிக்கு ஆளாவார்கள்? நம் திருவிழாக்களில் ஏன் இத்தனை சத்தமாகப் பாடல்கள்? மஞ்சள் நீராட்டு விழாவுக்கு ஏன் தெருவெல்லாம் மைக் போடுகிறார்கள்? ஆடியும் மார்கழியும் வந்தால் அம்மன் சாமிக்கும் ஐயப்பனுக்கும் ENT டாக்டர் அப்பாயிண்மென்ட் தேவை என்று தோன்றுகிறதே..!

‘சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்’ என்பதையே இழந்துவிட்ட சமூகமா நாம்? தமிழின் உன்னதமான அறிவு ஜீவியாக நான் மதிக்கும் ஒளவையார், ஒருமுறை ஒரு மன்னனை வாழ்த்தப் போனார். ‘வரப்புயர’ என்று மட்டும் கூறி, பேசாமல்

இருந்து விட்டார். அதன் தாத்பரியத்தைப் பின்பு அவரே விளக்கினார்.

வரப்புயர நீர் உயரும்

நீர் உயர நெல் உயரும்

நெல் உயரக் குடி உயரும்

குடி உயரக் கோல் உயரும்

கோல் உயரக் கோன் உயர்வான்.

வரப்பு உயர்ந்தால் அதன் பின்நீட்சியாக ஒரு மன்னனும் உயர்வான் என்று ஒரு வாழ்த்தை இத்தனை ரத்தினச் சுருக்கமாகச் சொன்ன பாரம்பரியம் தமிழர்களுக்கு உண்டு என்று யாராவது இன்று நம்புவார்களா?

இன்றைய கம்யூனிகேஷன் விற்பன்னர்கள் எப்படிப் பேசினால் வெற்றியடையலாம் என்பதை விளக்கும்போது, “மேலதிகாரிகள், பெரிய மனிதர்கள் இவர்களைப் பார்த்துப் பேசும்போது எது தலையாய செய்தியோ, அதை முதன்மைப்படுத்த வேண்டும்” என்கிறார்கள். “சிறிய வார்த்தைகளால் அமைந்த சிறு வாக்கியங்கள். வாக்கியங்கள் நடுவே அவர்கள் கேள்வி கேட்க சந்தர்ப்பம் கொடுக்கும் சிறு இடைவெளிகள் (Pause). இதுவே பேசும் முறை. அடுத்த செகண்ட் உலகம் அழியப்போகிறது என்பது போல் வெடித்துச் சிதறும் வார்த்தைப் பிரவாகம், வெற்றிக்கான வழியே அல்ல” என்கிறார்கள். இன்றைய கம்யூனிகேஷன் வல்லுனர்கள் சொல்வதை அன்றே கம்பனின் அனுமன் செய்து காட்டினான்.

சீதை இருக்கிறாளா? இல்லையா? என்ற கேள்விக்கான பதிலில் ஊசலாடுகிறது ராமனின் உயிர். அனுமன் இலங்கையிலிருந்து வந்தான். ராமனைப் பார்த்து, “கண்டனன்” என்கிறான். ‘பார்த்து விட்டேன்’ என்ற பொருள் தரும் அந்த ஒற்றைச் சொல்லில் ராமனின் விடைபெற்றுக்கொண்டு இருந்த உயிர் திரும்பவும் ஒளி பெற்றது.

அப்படி இல்லாமல் ராமனைப் பார்த்ததும் - “தசரத சக்ரவர்த்தியின் குமாரனே! எதிர்கால அயோத்தி வேந்தனே! எங்கள் தங்க மன்னர் சுக்ரீவன் தேர்ந்தெடுத்த நண்பரே! தங்கள் ஆணைப்படியும், எம் மன்னனின் சித்தப்படியும் நான் சீதையைத்

தேட தென் கடலுக்கு வந்து சேர்ந்தேன். மிகப் பெரிய சமுத்திரம் என் முன்னே நின்றது. அப்போது என்ன நடந்தது என்றால்...” என்று அனுமன் பேச்சைத் தொடர்ந்திருந்தால், சஸ்பென்ஸில் ராமனின் BP ஏகத்துக்கு எகிறியிருக்கும்.

‘நீங்கள் பேசும்போது உங்களின் சிந்தனை பாதி மரணமடைந்து விடுகிறது. ஏனெனில், சிந்தனை என்பது விண்ணில் பறக்கும் பறவை. அதை வார்த்தைகள் என்ற கூண்டில் அடைக்கும்போது அதன் சிறகுகள் முடங்கி விடுகின்றன’ என்றார் கலீல் ஜிப்ரான். ‘சொன்ன வார்த்தைகள் உனக்கு எஜமான்; சொல்லாத வார்த்தைக்கு நீ எஜமான்’ என்ற பாரம்பரிய சீனப் பழமொழி வரம்பில்லாத பெரும் வலிமை கொண்ட வாசகம். கேட்பவரின் மனம் நீவும் அமைதியான வார்த்தைகள், குறைந்த சத்தம், பத்து வார்த்தைகள் சொல்ல வந்த இடத்திலும் இரண்டே வார்த்தைகளில் விஷயத்தை விளக்கும் புத்திசாலித்தனம், வார்த்தைகளைக் கட்டுப்படுத்தும்போது மனம் பெறுகிற சக்தி, அந்த சக்தி நமக்குக் கொடுக்கும் கம்பீரம் - இவைதான் இன்றைய அவசியத் தேவை.

சொற்களின் மகத்துவம் உண்மையில் அச்சமூட்டும் அளவுக்குப் பிரமாண்டமானது. வாழ்வின் பிரமாண்டத்தை அறிந்தவர்கள் யாரும் அதிகமாகப் பேசாதவர்கள்தான்.

# 23

## கடிதம் என்னும் அனாதை

செல்போனும் இ-மெயிலும்தான் நமக்கு எத்தனை உதவியாக இருக்கின்றன! நினைத்த நேரத்தில் யாருக்கும் எந்தத் தகவலையும் சொல்லிவிட முடிகிறது! ‘தாமதமாகும்; காத்திருக்க வேண்டாம், வரமுடியவில்லை; அவசர வேலை, உன் நம்பருக்குப் போன் செய்தேன்; அடிக்கவே இல்லை, கிளம்பி வந்துகொண்டே இருக்கிறேன். இன்னும் 5 நிமிடம்தான்...’ எல்லாப் பொய்களும் செல்போனில் சாத்தியமாகி விடுகின்றன. இன்றைய தேதியில் காந்தியே நேரில் திரும்ப வந்தாலும்கூட, “என்ன சார், என்ன மாடல் போன் வைச்சிருக்கீங்க? ஆன்ட்ராய்ட், ஸ்மார்ட்போனா அல்லது ஆர்டினரியா..?” என்று சிலர் விசாரிக்கக்கூடும். நம்மை அடிமையாக்கிக் கொண்ட இந்த வசதிகளால் நாம் இழந்தது அதிகமா, பெற்றது அதிகமா? தெரியவில்லை. ஆனால், இவற்றால் நிரந்தரமாகத் தொலைந்துபோய்விட்ட ஒன்று - கடிதம் எழுதும் பழக்கம்.

தபால்காரர், ஊரில் மிக முக்கிய ஒரு நபராக இருந்த பொற்காலங்கள் உண்டு. குறிப்பாகக் காதலர்களுக்கு. அம்மா தந்த தின்பண்டத்தைத் தின்றால் தீர்ந்துவிடும் என்று பிரிக்காமலே வைத்திருக்கும் குழந்தைபோல, காதலியிடமிருந்து வந்த கடிதத்தை

படிக்க ஆரம்பித்தால் முடிந்துவிடும் என்று, கவரை வாசனை பார்த்தே காலத்தைக் கடத்திய காதலர்கள் பலர். வரவேண்டிய கடிதம் வரவேண்டிய நாளில் வரவில்லையே என்று தபால்நிலையத்துக்கே போய் “எனக்கு எதாவது இருக்கா?” என்று விசாரித்து, “எங்கே, தலையிலேயா?” என்று பதில் பெறாத காதலர்கள் இருக்க முடியுமா என்ன?

ஊரிலிருந்து வரும் கடிதங்கள் பிரத்யேக வாசனை கொண்டவை. சென்னை மாதிரியான பெரும் நகரங்களில் தனியே வந்து வசிக்கும் இளைஞர்களுக்கு அம்மாவின் ‘சொல்படி’ தங்கையோ அல்லது பக்கத்து வீட்டுப் பெண்ணோ எழுதி அனுப்பும் தபால் கார்டுகள், ஊரோடு அவர்களைப் பிணைக்கும் தொப்புள் கொடிகள்.

என் பெரியம்மா டெல்லியில் வசித்தபோது தவறாது வரும் தபால் கார்டுகள். போஸ்ட் கார்டில் அவர் நுணுக்கி நுணுக்கி எழுதும் விஷயங்களை A4 தாளில் பிரதி எடுத்தால், நாலு தாளாவது வேண்டி இருக்கும். ‘பக்கத்து வீட்டுப் பசுமாடு கன்று போட்டதா, தோட்டத்து செம்பருத்தி பூத்ததா, வீட்டில் வேலை செய்யும் கண்ணம்மாவின் மகளுக்கு உடல்நிலை சீரானதா…’ என்று விசாரிப்புகளை வரிசைப்படுத்திவிட்டு, ‘வரும் ஆனி மூலம் அன்று பாரதிக்குப் பிறந்த நாள், அவளுக்கு என் ஆசிகள்’ என்று முடித்திருக்கும் வாக்கியத்தில் இடப்பட்டிருப்பது மையில் எழுதிய முற்றுப்புள்ளியா என்ன? அது மனம் கனிந்த அன்பின் பரிசுத்த மான ஒரு சொட்டு அல்லவா? அந்த நாள் மனிதர்கள் மறைந்ததுபோல கடிதம் எழுதும் பழக்கமும் மறைந்துவிட்டது.

ஆனால், காலத்தால் மறக்க முடியாத ஆவணங்களாகப் பல கடிதங்கள் நிலை பெற்று இருக்கின்றன. மொகலாய மாமன்னன் ஷாஜகான் தனது மகன் ஔரங்கசீப்புக்கு எழுதிய கடிதம் அப்படி ஒரு வரலாற்றுப் பெட்டகம்.

தன் முதல் மகன் தாராஷிகோதான், தன்னைத் தொடர்ந்து பேரரசனாக வேண்டும் என்பது ஷாஜஹானின் ஆசை. அண்ணனை விட தானே தகுதி வாய்ந்தவன் என்று நினைத்த தம்பி ஔரங்கசீப் தன் எல்லா சகோதரர்களையும் கொன்றதோடு, தகப்பன் வசித்த ஆக்ரா கோட்டைக்கு தண்ணீரே போகாதபடி யமுனை ஆற்றையே திருப்பி விட்டான். கோட்டைக்குள் இருந்த கிணறுகள் வற்றிவிட்ட கடும்கோடை. தண்ணீர் இன்றித் தவித்த

ஷாஜஹான் தன் மகனுக்குக் கடிதம் எழுதினான். ‘இறந்துவிட்ட தம் முன்னோர்களுக்குக்கூட இந்துக்கள் நீர்க்கடன் செய்வதை இந்த தேசத்தில் நீ பார்க்கிறாய். ஆனால், உயிருடன் உள்ள உன் தகப்பனுக்குத் தண்ணீர் தராமல் நீ இருப்பது எத்தனை கொடுமை?’ என்று அமைந்த கடித வாசகங்கள் மிக உருக்கமானவை.

‘சேரும் முகவரி சரியில்லை

அனுப்பிய முகவரி அதிலில்லை - ஒரு

கடிதம் அனாதையாகி விட்டது ’

- என்று மேத்தா ஒரு கவிதை எழுதினார். ஷாஜகானின் கடிதத்தில் சேரும் முகவரியும் செலுத்திய முகவரியும் உண்டு. ஆயினும் கடிதம் அனாதையாகிவிட்டது. ஒளரங்கசீப் இளகவில்லை. தண்ணீரும் கொடுக்கவில்லை. மூன்றே நாட்களில் தகப்பன் மகனிடம் சரணடைந்தான்; சிறை வைக்கப்பட்டான். எஞ்சிய தன் நாட்களை, தான் கட்டிய தாஜ்மஹாலைப் பார்த்துக் கொண்டே வாழ்ந்து கழித்தான்.

‘இறந்தவர்களுக்குக்கூட நீர்க்கடன் செய்வது’ என்று ஷாஜகான் தன் பிரசித்தி பெற்ற கடிதத்தில் குறிப்பிட்ட விஷயத்தின் தாக்கத்தையும் தாத்பரியத்தையும் பத்ரிநாத்தில் உள்ள ‘பிரம்ம கபாலம்’ என்னும் இடத்தில் அறியலாம். பத்ரிநாத் கோயிலுக்கு அருகாமையில் இருக்கும் பிரம்ம கபாலம், அலக்நந்தா நதி தாலாட்டும் ஒரு அழகுப் பிரதேசம். அங்கே இருக்கும் பண்டாக்கள் எனும் புரோகிதர்கள் சொல்வது இதுதான்: இந்த பிரம்ம கபாலம், மோட்சஸ்தலம். பிரம்மாவே இங்கு உறைவதாக ஐதிகம். முன்னோர்களைக் கடைசியாக கரையேற்றும் புண்ணிய ஸ்தலம். உயிர் நீத்த உங்கள் உறவினர்கள், நண்பர்கள் உங்களிடம் அன்பு பூண்டவர்கள், ஏன் விரோதிகள் எல்லாரையும் நினைத்து இங்கே நீர்க்கடன் செய்யலாம். மரணம் வரைதான் பகை. மரணத்துக்கு அப்பால் வெறும் அன்புதான். ‘மரணந்தானி வைரானி’ என்று அவர்கள் கூறி முடிக்கும்போது மேனி சிலிர்த்துவிடும். ‘நம் நெஞ்சை எரித்தவர்கள், விரோதிகள் அத்தனை பேருக்கும் இறுதிக் கடன் செய்து விடுங்கள்’ என்னும் சொற்களின் பிரமாண்டம், அதில் கிளர்த்தெழும் மானுட மேன்மை அந்த இடத்து மலைகளின் உயரத்தையும், அலக்நந்தாவின் ஆழத்தை விடவும் மகத்தானது.

திருக்குடந்தையில், அதுதான் நம்ம கும்பகோணத்தில், நாராயணசுவாமி என்ற பக்தர் இருந்தார். தன் செல்வத்தையும் நேரத்தையுமெல்லாம் கும்பகோணம் சாரங்கபாணி கோயிலில் குடியிருக்கும் ஆராவமுதப் பெருமாளுக்கே அர்ப்பணித்தார். அவருக்குப் பிள்ளைகள் இல்லாததால் யாராவது உறவினர் மகனை தத்தெடுக்கச் சொல்லி எல்லாரும் வற்புறுத்தினர். இறுதிக் கடன்களை யார் செய்வது என்று துளைத்தனர். "ஆராவமுதனே என் இறுதிச் சடங்குகளைச் செய்வான்" என்று சொல்லிவிட்டார் நாராயணசுவாமி. அவரது மரணத்தின்போது எங்கிருந்தோ வந்த ஒரு இளைஞன், அனைத்துக் கடன்களையும் முடித்துவிட்டு மறைந்து விட்டான். இன்றும்கூட அந்தக் கோயிலில், அந்தக் குறிப்பிட்ட நாளில், ஒவ்வொரு வருடமும், திதி செய்வதற்கான ஏற்பாடு களை பெருமாளின் சந்நிதியிலே அமைத்துவிட்டு கோயில் கதவை மூடிவிடுகின்றனர்.

தன்னை நம்பிய ஒரு உயிருக்கான இறுதிக்கடன் செய்ய இறங்கி வந்த நாராயணன், ஒரு கழுகின் இறுதிச் சடங்கையே ராமனாக அவதரித்துச் செய்தவன்தானே! இறந்த பறவையையும் தன் மடியில் தாங்கி நீர்க்கடன் செய்த ராமனின் கருணை சொட்டும் முகத்தை திருப்புட்குழியில் இன்றும் காணலாம்.



பிரம்ம கபாலம்

தொன்மையான கலாசாரங்கள் எதிலும் இறந்தவருக்கு மரியாதை செய்யும் வழக்கம் உண்டு. சீனர்கள் எந்தக் கோயிலிலும் மூன்று ஊதுவத்திகளை ஏற்றித்தான் பிரார்த்தனை செய்வார்கள். இறந்துபோன முன்னோர்களின் அமைதிக்காக ஒரு ஊதுவத்தி. இன்று வாழும் தலைமுறையின் நல்வாழ்வுக்காக ஒரு ஊதுவத்தி. இனி பிறக்கப் போகும் குழந்தைகளுக்காக மூன்றாவது...

‘பகலில் விழி திறவாமல், இரவை மட்டுமே பார்த்துப் பழகிய ஆந்தைக்கு எப்படி ஒளியின் உன்னதம் புரியாதோ, அப்படி வாழ்வையே சரியாகப் பார்த்திராதவர்களுக்கு மரணத்தின் உன்னதம் எப்படிப் புரியும்?’ என்றான், கலீல் ஜிப்ரான். மரணத்தின் உன்னதத்தை உணர்ந்த கலாசாரங்கள்தான் சென்றுவிட்டவர்களை வாழ்த்தி, போற்றி, பணியும் பண்பாட்டில் பூரணமாக பொலிந்து நிற்கின்றன.

# 24

## நீதியைத் தேடும் மௌனச் சிலை

கொடுக்கக்கூடாத ஜாமீனை ஒருவருக்குக் கொடுக்க சுமார் 100 கோடி வரை விலை பேசப்பட்டதாம். யாருக்கு விலை? சில நீதிபதிகளுக்கு! ஒருவர் ஏற்கெனவே சிறையில். மற்றவர்கள் மேல் விசாரணை.

செய்தி வந்த அன்றைக்கு நான் சென்னை உயர்நீதி மன்றத்துக்குப் போக வேண்டியிருந்தது. வங்கி அதிகாரி என்றால் உபத்திரவமில்லாது, ஏசி அறையில் உட்கார்ந்து பணம் எண்ணும் வேலை என்று பலர் நினைக்கக் கூடும். சில சமயங்களில் வெட்டாத கிணற்றுக்குக் கொடுத்த கடனை வசூலிக்க கால் தேய நடந்த படலங்களும் 'மனைவியின் அக்கௌண்டில் இருந்து நான் பணம் எடுப்பதைத் தடுக்கும் மானேஜர் யார்?' என்று மல்லுக்கட்டும் கணவர்களும் 'ரிடயர் ஆவதற்கு முன்தினம் 1976-ல் ஒரு லோன் விண்ணப்பத்தில் நீங்கள்தான் கையெழுத்துப் போட்டீர்கள்; மேற்படி பார்ட்டி வங்கியை ஏமாற்றியதில் உங்களுக்கு ஏன் பங்கு இருக்கக்கூடாது?' என்று வரும் விசாரணை களும் இதோ என்னைப்போல - யாரோ ஒரு வாடிக்கையாளரின் பேரில் லஞ்ச ஒழிப்பு விசாரணை வர, வழக்கில் சாட்சியாக வங்கி அதிகாரி அழைக்கப்படும்

துயரங்களும் நிறைந்த துன்பியல் நாடகமே வங்கி அதிகாரிகளின் வாழ்வு.

நான் சாட்சி சொல்ல வேண்டிய வழக்கு ஒத்திப் போடப்பட்டதால், உயர்நீதி மன்ற வளாகத்தில் காத்திருந்தேன். கருப்புடை தேவதைகளாய் பெண் வழக்கறிஞர்கள், எப்போதும் சூடுபிடித்திருக்கும் மசால்வடை வியாபாரம், எழுதி எழுதி மாயும் வக்கீல் குமாஸ்தாக்கள், எதற்காகவோ நடு வீதியில் அழும் ஒரு பெண், அவள் காலடியில் வெறித்த பார்வையுடன் நின்று கை சூப்பும் ஒரு பிஞ்சு, பான்பராக் கறைகள், உயர்நீதி மன்றத்தின் ஆங்கிலோ-ஸாக்ஸன் முறையில் கட்டப்பட்ட கோபுரங்கள்... இவ்வளவுக்கும் நடுவில்தான் நான் தற்செயலாக அங்கு நிறுவப்பட்டிருக்கும் மனுநீதிச்சோழனின் சிலையைப் பார்த்தேன். ‘பார்த்தேன்’ என்றா சொன்னேன்? ‘தரிசித்தேன்’ என்றுதான் சொல்லியிருக்க வேண்டும். நெடிதுயர்ந்த சிலை. மன்னனின் கையில் பிடித்த செங்கோலும் பரந்து நீண்டிருக்கும் அவரின் தாடியும் காலடியில் தேர்ச் சக்கரத்தில் நசுங்கிக் கிடக்கும் பசுங்கன்றும், இளவரசன் மற்றும் ஆராய்ச்சி மணியை அடிக்கும் பசுவின் உருவங்களும்... அற்புதமான சிலைதான். சிலைக்குக் கீழே ‘சம நீதி கண்ட சோழன்’ (மனு என்பது விலக்கப்பட்ட வார்த்தை) என்று பொறித்திருக்கிறார்கள். தமிழ்ச் சமுதாயத்தில் தனிப்பெரும் நீதி அரசன் தன் பெயரைக்கூட இழந்து மௌனத்தில் நிற்கும் நிலை.

எனக்குத் திடீரென்று காலையில் படித்த செய்தி நினைவுக்கு வந்தது. நூறு கோடி! யாராலும் குலைக்க முடியாத உறுதியோடு, கற்கோட்டை போல நிற்கும் மதிப்பிற்குரிய நீதிபதிகள் இன்றைக்கும் இருந்து இந்த தேசத்தின் குரலற்றவர்களின் கடைசிப் புகலிடமாக இந்திய நீதிமன்றங்கங்களைக் காத்து வருகிறார்கள். இடையில் இது போல சில செய்திகளைக் கேட்கும்போதுதான் மனுநீதிச் சோழன் போட்டுக் கொடுத்த நீதி எனும் ராஜபாட்டை நம் நினைவில் நிழலாடுகிறது.

நீதி கேட்க அந்த கண்ணகியை “நீ யார்?” என்று பாண்டியன் கேட்க, “பசுமாட்டின் கண்ணில் துளிர்த்த நீரைத் துடைக்கத் தன் புதல்வனைத் தேரில் ஏற்றிக் கொன்றானே மனுநீதி, அவனுடைய ஊர்க்காரி நான்” என்கிறாள்.

மனுநீதியின் கதையில் மிக மிக சுவாரசியமான பகுதி - பசுமாடு

ஆராய்ச்சி மணியை அடிப்பது. (இப்போதைய நம் ஊர் பசுமாடு என்றால் மணியின் கயிற்றையாவது சாப்பிடுவோமே என்று அடித்திருக்கும்) இதுவரை அந்த நாட்டில் யாருமே அதைச் செய்ததில்லை. காரணம்? ஏதாவது குறை இருப்பவர்கள் மட்டுமே மணியை அடிக்க வேண்டும். யாருக்கும் எந்தக் குறையும் இல்லாத ஆட்சி மனுநீதியின் ஆட்சி. மணியின் சத்தம் கேட்டு மன்னன் பதறினான். "எதனால் இந்தப் பசு மணியை அடிக்கிறது?" அமைச்சரைக் கேட்டான். அரசரின் கேள்விக்கு அமைச்சர் சொன்ன பதிலை பெரிய புராணத்தில் சேக்கிழார் எழுதுகிறார். இந்தியாவின் மிகச்சிறந்த டிஃபென்ஸ் லாயர் ஒருவரை சாலை விபத்து வழக்கில், ஓட்டுனர் சார்பில் ஆஜராகச் சொன்னால் எப்படி வாதிடுவார்? அந்த மாதிரி மிக அருமையான முறையில், "உன் மகன் ஓட்டிய தேரில் பசுங்கன்று வந்து விழுந்து இறந்தது. ஆனால், அவன் குற்றவாளி அல்ல" என்று அமைச்சர் சொல்கிறார்.



'வளவ! நின் புதல்வன் ஆங்கோர் மணி நெடுந்தேர்மேல் ஏறி
அளவில் தேர்த்தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்ததாகத்
தளர் உறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை ' என்றார்.

உன் மகன் மணி ஒலிக்கும் தேரில் போனான். - அவன் ஹார்ன்

அடிச்சாம்ப்பா கன்னுக்குட்டி கேட்கல... அந்தத் தேரோ நெடுந்தேர். மேலிருந்து பார்த்தால் கன்றுக்குட்டி தெரியாது - 'அரசுப் பேருந்து டிரைவர்கள் நாய்க்குட்டியை நசுக்கினால், டிரைவரா காரணம்? பேருந்தின் உயரமல்லவா காரணம்?' ஏகப்பட்ட படைகள் அவனோடு கூடப்போனது. கன்றுக்குட்டி நடுவில் வராமல் அவர்கள் அல்லவா தடுத்திருக்க வேண்டும்? அவன் போனது ராஜபாட்டை - இது பிரைவேட் ரோட். கன்றுக்குட்டி வந்தது ட்ரெஸ்பாஸிங்.

அந்தக் கன்றுக்குட்டி இளையது - இளைய கன்றைக் காப்பாற்ற வேண்டியது தாயின் கடன் அல்லவா? தாய் அஜாக்கிரதையாக இருந்துவிட்டு, தானே முறையிட முடியாது. காப்பீடு சம்பந்தப்பட்ட வழக்குகளில் 'VOLENTI NON-FIT INJURIA' என்று சொல்லி காப்பீட்டை மறுத்தால், அஜாக்கிரதையால் விபத்து நடந்தால் காப்பீடு கிடையாது என்று பொருள்.

கன்று தானே தேர்க்காலின் நடுவே புகுந்தது - இளவரசன் ஏற்ற வில்லையப்பா. இது திட்டமிட்ட கொலை இல்லை. கன்று புகுந்ததால் ஏற்பட்ட விபத்து. இது நெக்லிஜண்ட் ட்ரைவிங் அல்ல. இவ்வளவு அடுக்கான வாதங்களை நான்கே வரிகளில் அமைச்சர் கூறிவிட்டார்.

மன்னன் பதில் சொன்னார்: "இளவரசன் மீது தவறின்றி இருக்கலாம். ஆனால், தன் ஆட்சிக்கு உட்பட்ட அனைத்து உயிர்களுக்கும் தன்னாலோ, தன் உறவினர்களாலோ, பகைவராலோ, கள்வராலோ, விலங்குகளாலோ, எந்த ஆபத்தும் இன்றிக் காப்பது ஒரு அரசனின் கடமை அல்லவா? நான் அந்தக் கடமையிலிருந்து தவறி விட்டேன்" என்றார்.

"கன்றைக் கொன்ற பாவத்துக்கு பரிகாரங்கள் உண்டு. பாவத்தைப் போக்கலாம்" என்றார், அமைச்சர்.

"பாவம் கழுவப் பரிகாரம் உண்டு; பசுவின் கண்ணீரைக் கழுவ ஏது பரிகாரம்?" - இது மன்னர்.

"சட்டமும் நீதியும் ஆறறிவு உடைய மனிதர்களுக்குத்தான்."

"இந்தப் பசுவுக்கு ஆறாம் அறிவு இருந்ததால்தானே மணியை அடித்து நீதி கேட்கிறது?"

அமைச்சர் மௌனமாகி விடுகிறார். "பசுவின் கண்ணீரைப் போக்கத் தவறிய எனக்கு தண்டனை, நானும் அதே போல் மகனை

இழந்து, கண்ணீர் விட வேண்டும்" என்று மனுநீதி தன் மைந்தனை தேர்க்காலில் இட்டுக் கொல்கிறான்.

நீதி வழங்கப்பட்டது மட்டுமல்ல, தண்டனையும் உடனுக்குடன். வன்புணர்வு மற்றும் தீவிரவாத கொலை வழக்குகளில் கைதானவர் களுக்கு நாளும் பிரியாணி போட்டு, அவர்கள் இயற்கை மரணம் அடையும் வரை வழக்கை இழுத்தடிப்பது மாதிரியல்ல.

தண்டனை நிறைவேறியவுடன் சிவபெருமான் தோன்றி கன்றுக்கும் இளவரசனுக்கும் மீண்டும் உயிர் அளிக்கிறார் என கதை முடிகிறது.

எல்லா அமைப்புகளிலும் பொய்யும் லஞ்சமும் சுரணையற்ற தனமும் புகுந்த பின்னால் நம் தேசத்தின் நீதிமன்றங்களில் தங்களுக்காக கடைசியாக வாழ்வு கிடைக்கும்; இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு மாற்று கிடைக்கும் என்று நம்பி கோர்ட் வளாகத்தில் கூடியிருக்கும் மக்களைப் பார்த்தேன். நீதி ஒரு தேர் போல அங்கே மெல்ல அசைந்து கொண்டிருப்பதையும் உணர்ந்தேன். மனுநீதி (என்கிற சமநீதி) சோழன் மாறாத புன்னகையுடன் சிலையாக உறைந்து நிற்கிறார். காலமும் அசையாது நிற்கிறது. இதோ, என் வழக்கு விசாரணைக்கு வந்து விட்டதாக வக்கீல் கூப்பிடுகிறார்...

# 25

## கொடுக்கிறவன், இடைத்தரகன், பெறுபவன்...

இல்லாதவர்களுக்கும் இயலாதவர்களுக்கும் திருமணம் செய்து வைப்பது ஒரு தருமம். தற்போது அரசாங்கமே அப்படிச் சில திருமணங்களை நடத்தியது. திருமணம் செய்துகொண்ட ஜோடிகளுக்குச் சில பரிசுகளும் பணமும் உண்டு. சில ஜோடிகள் பிள்ளைகளைப் பின்னால் மறைத்தபடி திருமணம் செய்துகொண்டார்களாம். அதாவது, ஏற்கெனவே திருமணம் ஆனவர்கள் பரிசுக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு வந்திருக்கிறார்கள். திருமணத்துக்கு ஜோடி பிடிக்க வேண்டிய ஆட்களுக்கும் ஏதாவது கமிஷன் இருக்கலாம். தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற இலவச ஆடு கொடுக்கப்பட்டால், வீட்டுக்குக்கூட ஆட்டை கூட்டிப் போகாமல் அந்த இடத்திலேயே கசாப்புக் கடைக்கு விற்று, நடுவே இருக்கும் ஏஜெண்டுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து விட்டால், பாக்கி பணத்தோடு வீடு போய்ச் சேர்ந்து விடலாம், என்ன கொடுமை சார் இது!

அரசாங்கம் கொடுக்கும் இலவசங்களைப் பெறுவோர் மாத்திரமல்ல, எந்த உதவியையோ, கொடையையோ பெற்றுக் கொள்பவர்களுக்கு என்று சில தருமங்களும் கடமைகளும் உண்டு. இன்று வாங்கிக் கொள்பவர்கள் அந்த தருமங்களிலிருந்தும்

கடமைகளிலிருந்தும் ரொம்ப விலகி விட்டார்களோ என்று பயப்பட வேண்டியிருக்கிறது.

வீடுகளில் மற்றும் நிறுவனங்களில் வேலை செய்கிற பணியாளர் களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி இல்லை என்று குறை சொல்லாதவர்கள் யாரேனும் உண்டா?

என் வீட்டில் ஒரு இருபது வயதுப் பெண்ணை வேலைக்குச் சேர்த்தேன். யதேச்சையாக அவளது பத்தாம் வகுப்பு மார்க் ஷீட்டைப் பார்த்தேன். சமூக அறிவியலில் 84 மதிப்பெண் எடுத்திருந்தாள். மேலே படிக்க ஆசையா என்று கேட்டு, அப்போது இந்திராகாந்தி திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேச்சாளர் அரங்க ராமலிங்கத்தின் துணையோடு அந்தப் பெண் நேரே பி.ஏ. படிக்க பணம் கட்டி, புத்தகங்கள் வாங்கிக் கொடுத்து, கூடவே அலைந்து எல்லா உதவிகளையும் செய்தேன். திடீரென்று ஒருநாள், வேறு ஒரு வீட்டில் அதிக சம்பளம் தருகிறார்கள் என்று சொல்லி என் வீட்டிலிருந்து நின்றுவிட்டாள். தொடர்ந்து படிக்காமல் போய்விடப் போகிறாளே என்ற கவலையில் விசாரிக்கப் போனால் "இன்னா, அது படிக்கணும்னா நீ பணம் கட்டின? உன் வூட்லயே எப்பப் பாரு வேலை செய்யணும்னுதானே இதெல்லாம் செஞ்ச; ரொம்ப உதவி செய்துட்டா மாதிரி பேசற..." என்று அந்தப் பெண்ணின் தாய் என்னிடம் சொல்லிவிட்டாள்.

'கூலி மிகக் கேட்பார்

கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார்

சேவகரால் பட்ட சிரமம் மிக உண்டு கண்டீர்

சேவகர் இல்லாவிடிலோ செய்கை நடக்கவில்லை '

- என்ற பாரதியின் வரிகள்தான் நினைவுக்கு வந்தன. சரி, அவருக்கே இப்படியென்றால், நம் நிலை ஒன்றும் மோசமில்லை என்று ஆறுதல் அடைந்தேன். வாங்கிக் கொள்கிறவர்களுக்கான நன்றி உணர்ச்சி என்பது குறைந்து, 'இருக்கு, செய்யறாங்க; இன்னும் செய்யட்டுமே...' என்ற எண்ணம் மலிந்து விட்டதோ? கொடுக்கிறவன், வாங்கிக் கொள்பவன் என்று இருவர் மட்டுமே இருந்த நிலை மாறிப்போய், கொடுக்கிறவன், வாங்குகிறவன், இடைத்தரகன் என்று வந்துவிட்டதால், கொடுக்கிறவர்களுக்கு வாங்குகிறவர்கள் மீதான பரிவும் வாங்கிக் கொள்கிறவர்களுக்கு கொடுப்பவர்கள் மேல் சுரக்க வேண்டிய நன்றியும் இன்று

காணாது போய்விட்டனவா?

குருவாயூர் கோயிலில் கிருஷ்ணன் சந்நிதியில் இருந்த இரண்டு வாழைப்பழங்களை ஒரு ஏழைச் சிறுவன் திருடிவிட்டான். திருடிய இரு பழங்களில் ஒன்றை கிருஷ்ணனின் சந்நிதியிலேயே எறிந்துவிட்டு ஓடிவிட்டான். ஓடியவன் ஒற்றைப் பழத்தோடு பிடிபட்டான். திருடிய குற்றத்துக்காக அவனுக்குத் தரப்பட்ட தண்டனை, குருவாயூரப்பன் சந்நிதியை 100 முறை வலம் வரவேண்டும். அவன் நூறு முறை சுற்றுகிறானா என்று கண்காணிக்க ஒரு பெரியவர் அங்கேயே நின்றார். பையன் முதல் சுற்று வந்தான். இரண்டாம் சுற்று, மயில் பீலி அசைய, கால்களில் கொலுசு 'ஜல் ஜல்' என்று சிணுங்க, குழந்தைக் கண்ணன் தன் கைப் புல்லாங்குழலோடு வந்தான்! பெரியவருக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தார். மூன்றாம் சுற்று பையன், நான்காம் சுற்று கண்ணன், ஐந்தாம் சுற்று பையன், ஆறாம் சுற்று கண்ணன்...

இப்படியே நூறு சுற்றுகள் முடிந்ததும் பெரியவர் கண்ணனின் கால்களைப் பிடித்துக் கொண்டார். "கண்ணா, திருடிய பிள்ளைக்குக் கொடுத்த தண்டனையில் பாதியை நீ ஏற்றுக் கொண்டாயே, ஏன்? உன் பிஞ்சுக் கால்கள் நோக நோக நடந்தாயே, ஏன்?" என்று கதறினார். "திருடியதில் பாதியை சிறுவன் எனக்களித்துவிட்டான். எனவே, பாதித் தண்டனை எனக்கானதுதானே!" என்று கண்ணன் பதில் சொன்னான். எந்தச் சட்டப்படியும் கண்ணனுக்குத் தண்டனையில் பங்கில்லை. ஆனால், சட்டத்தைவிடப் பெரிதான தருமப்படி தனக்கு தண்டனை உண்டு; பெற்றுக் கொள்பவனுக்கு ஒரு தருமம் உண்டு என்று கண்ணன் சொல்லாமல் சொல்லி விட்டான்.

கொடுப்பவர்களின் அலட்சியமும் வாங்கிக்கொள்பவர்களின் அவமரியாதையும் சேரும்போது அந்த இடத்தில், கொடுத்தலும் வாங்கலும் களங்கப்படுகின்றன. இதற்குச் சரியான உதாரணம், நவராத்திரி மாதிரியான சந்தர்ப்பங்களில் நிகழும். வீட்டுக்கு வருகிறவர்களுக்கு ஏதாவது வைத்துக் கொடுக்க வேண்டும் என்று கொடுக்கப்படும் ரவிக்கை பிட்டு, வாங்குபவர் யாராலும் பிரித்துகூடப் பார்க்கப்படாது! அது அப்படியே வேறு ஒரு பெண்ணுக்கு வைத்துக் கொடுக்கப்படும். 'உலகம் உருண்டை' என்று நிரூபிப்பதைப்போல, பல கைகள் மாறி இறுதியில் முதலில்

கொடுத்த பெண்மணிக்கே அந்த ரவிக்கைத் துண்டு வந்து சேரலாம்!

கூட்டங்களில் பெரிய மனிதர்களுக்குப் போடப்படும் சால்வைகளுக்கும் பெரும்பாலும் இதே கதிதான். போர்த்தப்பட்ட சால்வையை பெரிய மனிதர் விலக்கி உதவியாளரிடம் கொடுக்க, அவர் அடுத்த உதவியாளரிடம் நீட்ட, அது பல கை மாறி சால்வை போர்த்தக் காத்திருக்கும் வரிசையில் இருக்கும் ஒருவரிடம் சேர்ந்து, போட்ட சால்வையே திரும்பத் திரும்ப போர்த்தப்படும் அசட்டுத்தனம் நம் மேடைகளில் சர்வ சாதாரணம்.

கொடுப்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையிலான இடைத்தரகர்கள் வசதியில் கொழுத்துவிட்ட காலம் இது. சுனாமி வந்தபோது, உதவ விரும்பிய பல நல்ல உள்ளங்கள் வெளிநாடுகளில் இருந்து மூட்டை மூட்டையாக பணம் அனுப்பின. இறுதியில், சேர வேண்டிய மீனவ சகோதரர்களில் எத்தனை பேருக்குப் போனதோ தெரியாது. நடுவே இருந்த சில என்.ஜி.ஓக்களும் சேவை அமைப்புகளும் வாங்கிய டாடா சுமோக்களும் கட்டிக்கொண்ட மாடி வீடுகளும் அநேகம். சுனாமி வருவதற்குச் சாத்தியமே இல்லாத மதுரையில்கூட மாடி வீடுகள் கட்டப்பட்டன என்றால் பாருங்களேன்.

பெரிய புராணத்தில் இப்படி ஒருவர் வாங்குபவருக்கும் கொடுப்பவருக்கும் இடையே வருகிறார். அவர் பெயர் குண்டையூர்க் கிழார். திருவாரூரில் இருந்த சுந்தரருக்கு இந்தக் கிழார்தான் அரிசி, பருப்பு என்று எல்லாம் அளித்து வந்தார். வறட்சியும் பஞ்சமும் வந்து இவரது கதையே கந்தலாகிவிட்டது. சுந்தரருக்கு எப்படித் தருவது என்று கவலைப்பட்டு கடவுளை வேண்டினார். சுந்தரருக்குத் தருவதற்காக இவரது ஊரில் ஒரு நெல் மலையையே குவித்து விட்டார் சிவபெருமான்.

‘எவ்வுலகின் நெல் மலைதான் இது!’ என்று அதிசயப்பட்ட குண்டையூர்க் கிழார், இவ்வளவையும் கொண்டுபோய் திருவாரூரில் சேர்க்க என்னிடம் ஆளில்லையே என்று வருந்தினாராம். சுந்தரர் பதிகம் பாட, சிவனின் பூதகணங்கள் நெல் மலையை திருவாரூருக்கு டிரான்ஸ்போர்ட் செய்துவிட்டன. வறட்சியில் இருந்து வாடிய குண்டையூர்க் கிழாருக்கு தன் வீட்டுக்காக 2 மூட்டை நெல் எடுக்கத் தோன்றவில்லை, பாருங்கள். இறைவன் சுந்தரருக்குக் கொடுத்ததை அப்படியே

போய்ச் சேர்த்துவிட வேண்டுமே என்ற பதற்றத்தில் இருந்த மனிதருக்கு தன் வீட்டார் பசியில் வாடுவது கண்ணுக்குத் தெரியவில்லை…

கொடுக்கும் இடத்தில் இருந்தாலும் வாங்கும் இடத்தில் இருந்தாலும் இடைத்தரகராக இருந்தாலும் ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு கடமை உண்டு, ஒரு தருமம் உண்டு என்று நம்பிய பூமி, நம் தேசம். அந்தத் தருமங்களைக் கடைபிடிக்கும் சிலர் இன்னமும் இருக்கக்கூடும். அவர்களால்தான் இங்கு இமயமலையும் கங்கையும் இன்றும் அப்படியே இருக்கின்றன.

# 26

## குடும்ப பலமே, தேசிய பலம்!

அண்மையில் என் அப்பாவை ஒரு செக்-அப்புக்காக மருத்துவமனைக்கு அழைத்துப் போனேன். ஏழு மணிக்குப் போய் சர்க்கரை நோய் தொடர்பான எல்லா டெஸ்டும் செய்து முடித்து டாக்டரை யும் டயட்டீஷியனையும் சந்தித்து, வெளியே வருகையில் மணி இரண்டு. மருத்துவமனையில் நல்ல கவனிப்பும் வசதிகளும் இருந்ததால் ஒன்றும் பிரச்னையில்லை.

காத்திருந்த நேரத்தில் சுற்றிலும் பார்த்தேன். மருத்துவமனைச் சூழல் எப்போதும் ஒரு சிறுகதைக்கோ, கட்டுரைக்கோ, கவிதைக்கோ களம் கொடுக்கும் ஆற்றல் உள்ளது. இந்தச் சூழல் கடந்த பத்து வருடங்களில்தான் எப்படி தலைகீழாக மாறிவிட்டிருக்கிறது! முன்பெல்லாம் வயதானவர்கள் மருத்துவமனைக்கு வந்தால் மகன்களோ, இளவயது உறவுக்காரர்களோ, கூட வருவார்கள். இப்போது பெரும்பாலும் வயதான ஆண்களுக்குத் துணையாக வருவது அவர்களது மனைவியர் மட்டுமே. நோயாளியை சமாளித்து, பெரிய பெரிய ஃபைல்களில் ரிபோர்ட்டுகளைத் தொகுத்து, பராமரித்து, பணம் கட்டி, நடுநடுவே போய் காஃபி வாங்கி வந்து கொடுத்து, கடைசியில் வெளியே வந்து ஆட்டோ பிடிப்பது வரை

மனைவியின் பொறுப்பு - அவர்களுக்கே வயது 65 - 70 ஆனாலும்! மனைவி நோயாளி என்றால் கணவர் கூட வருகிறார். வயதான பெற்றோரை மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு வரக்கூட பல வீடுகளில் பிள்ளைகளுக்கு நேரம் இல்லை அல்லது பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர்.

கணவனும் மனைவியுமாக ஒருவரை ஒருவர் பற்றிக்கொண்டு, முதுமையைக் கடக்க முயற்சி செய்யும் வாழ்வில், இளமையில் பரிமாறிக்கொள்ளாத அன்பு ஆட்சி செய்கிறது. “எங்களுக்குக் கல்யாணம் ஆகி நாற்பது வருஷம் முடிந்துவிட்டது மேடம்” என்றார், பக்கத்து நாற்காலியில் இருந்த பெரியவர். இரண்டு பிள்ளைகளாம். இருவரும் வெளிநாட்டில். “இப்போ இவளுக்கு நானும் எனக்கு இவளும்தான் குழந்தை. எங்கள் இளமையில் வேலை, சம்பாத்தியம், வீடு, பிள்ளைகள்னு ஓடிக்கிட்டே இருந்தோம். அப்போ எனக்கு நிறைய கோபம் வரும். சாப்பிடறபோது தட்டை எடுத்து வீசி எறியாத நாளே கிடையாது. இவளோ பதிலே பேச மாட்டா. ஆனால் இப்போ, ஒருநாள் இவ பத்து நிமிஷம் வெளியே போனாக்கூட ரொம்ப பயமா இருக்கு. விட்டுப் பிரியவே முடியலே” என்றார். அவர் மனைவி அழகாகச் சிரித்தார்.

பாரதிதாசனின் ‘முதியோர் காதல்’ கவிதை என் நினைவுக்கு வந்தது. ஒரு தாத்தா, தன் மனைவியை வர்ணிக்கிறார்:

புது மலர் அல்லள் - காய்ந்த புற்கட்டே அவள் உடம்பு

சதிராடும் நடையாள் அல்லள் - தள்ளாடி விழும் மூதாட்டி

மதியல்ல முகம் அவளுக்கு - வரள் நிலம், குழிகள் கண்கள்

எது எனக்கு இன்பம் நல்கும்?

இருக்கின்றாள் என்பதொன்றோ?

இந்த வயதான தம்பதிகளின் காதலும் நேசமும் பார்க்கப் பார்க்க இனிமையாக இருந்தது.

அடுத்த நாள், என் உறவினர் ஒருவரின் பெண் திருமணமாகி ஆறே மாதத்தில் விவாகரத்து கேட்டு அடம் பிடிக்கிறாள் என்று, ஒரு பிரபல வழக்கறிஞரிடம் அவர்களை அழைத்துச் சென்றேன். மஞ்சள் கயிற்றின் நிறம் இன்னும் வெளுக்கவில்லை... “உங்க பொண்ணு கல்யாண ரிசப்ஷன் சாப்பாட்டுல பாசந்தி பிரமாதம்”

என்று இப்போதும் யதேச்சையாகப் பார்க்கும் உறவுக்காரர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குள் விவாகரத்து! என்ன பிரச்னையாம்?

“என்னன்னே தெரியலை. அவனைப் பிடிக்கவேயில்லைன்னு சொல்றா” என்கிறார், உறவினர். விஷயத்தை வக்கீலிடம் சொன்னோம்.

“பொண்ணு, பிள்ளை ரெண்டுபேரும் சாப்ட்வேரா?” என்று கேட்டார். “கல்யாணம் ஆகி ஒரு வருஷம்கூட முடிஞ்சிருக்காதே” என்றும் சொன்னார்.

“ம்யூசுவல் கன்சென்டா?”

“இப்ப சேர்ந்தா இருக்காங்க?”

“நகை, பணம் எல்லாம் யார் கஸ்டடியிலே இருக்கு?”

“அக்கவுன்ட் எல்லாம் தனித்தனியா? ஜாயின்டா?”

- வக்கீல் சர்வ அலட்சியமாக விஷயங்களை அடுக்கினார். எவ்வளவு சகஜமாகக் கேட்கிறார் அவர்! இந்தியாவில் விவாகரத்து கேஸ் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்தால் வக்கீல்களுக்கு ஒவ்வொரு முறையும் அதிர்ச்சி எப்படி வரும்? குடும்ப நல கோர்ட்டுகள், ஞாயிறுகூட இயங்க வேண்டும் என்று உத்தரவு போடும் அளவுக்கு விவாகரத்து வழக்குகள் பெருகிவிட்டன அல்லவா?

இதற்குக் காரணம் மாறிவரும் பெண்களும் மாறாத ஆண்களும் என்று எனக்குத் தோன்றியது. கோபம் கொண்டு, சாப்பிடும் தட்டை சுவரில் எற்றும் கணவனையும் கடிந்து பேசாத நேற்றைய மனைவிகள், மாறிப் போனார்கள்; “என் பணம், என் அக்கவுன்ட், என் இஷ்டம்” என்கிறார்கள்.

“காதலி மாடர்ன் பெண்ணாக ஜீன்ஸில் தன்னோடு சுற்ற வேண்டும். அவளே மனைவியான பின், விடியுமுன்பே எழுந்து, புடவை கட்டி, பூ வைத்து மல்லிகை இட்லிகளையும் மணக்கும் சாம்பாரையும் இலையில் அன்பாகப் பரிமாற வேண்டும்” என்று நினைக்கும் ஆண்கள் மாறாமல் இருக்கிறார்கள். விவாகரத்து வழக்குகள் பெருகாமல் என்ன செய்யும்?

ஒரு திருமணம் முடிந்ததாக எப்போது அடையாளம் காணப்படுகிறது? இந்துத் திருமணங்களைப் பொறுத்தவரை

ஸப்தபதி என்னும் ஏழு அடிகள் எடுத்து வைத்தபிறகுதான். தாலி கட்டுதல் அல்ல, ஸப்தபதியே ஒரு திருமணத்தின் நிரூபணம்.

மணப்பெண்ணின் வலது கையை தன் வலது கையால் பற்றிக்கொண்டு நன்றாக குனிந்து அவளின் வலது காலைத் தன் இடது கையால் பிடித்துக்கொண்டு, சற்றுத் தூக்கி ஒவ்வொரு அடியாக ஏழு அடிகள் முன்னோக்கி நகர்த்தும் சடங்கு இது. அப்போது மணமகன் சொல்லும் மந்திரத்தின் பொருள் என்ன? ஏழு அடிகள் எதற்காக எடுத்து வைக்கிறார்கள்?

1. தெய்வங்கள் எங்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

2. திடமான உடலும் கீர்த்தியும் எங்களுக்கு அமைய வேண்டும்.

3. எங்கள் முன்னோர்கள் எங்களுக்கு அளித்த பணியை நாங்கள் செவ்வனே செய்ய வேண்டும்.

4. எங்களுக்கு நீண்ட ஆயுள் அருளப்பட வேண்டும்.

5. வீடு, வாகனம், கால்நடைகள் போன்ற செல்வங்கள் கிடைக்க வேண்டும்.

6. சரியான பருவ காலத்தில் நல்ல மழையும் நல்ல விளைச்சலும் அமைந்து சுற்றுப்புறம் செழிக்க வேண்டும்.

7. தெய்வத்துக்கும் மூத்தோருக்கும் உறவினருக்குமான பணிகளைச் செய்ய இறைவன் அருள வேண்டும்.

இது முடிந்த பிறகு மணமகன் மணமகளைப் பார்த்துச் சொல்லும் ஒப்பந்த மந்திரம் உள்ளது: “ஏழு அடிகளைத் தாண்டிய நீ, எனக்குத் தோழி. இனி நாம் நண்பர்கள். இந்த நட்பு விலகாது. நானும் விலக மாட்டேன். நீயும் விலகாதே. இருவரும் ஒன்றாகச் செய்ய வேண்டிய கடமைகளை ஒரே விதமாக நிறைவேற்றுவோம். வாழ்க்கையில் எல்லாவற்றிலும் ஒன்றுபட்ட கருத்துள்ளவர்களாக இருப்போம்.”

கல்யாண இரைச்சலில் காணாமல் போகும் ஒப்பந்த உறுதிகள்! “இனி நாம் நண்பர்கள்” என்று நெருப்பை வைத்து செய்த சத்தியங்கள் எங்கே பறந்து போகின்றன?

குடி, அடி, உதை, துரோகம், வரதட்சணைக் கொடுமை இவற்றால் நிகழும் விவாகரத்துகள் மிகக் குறைவாம், வக்கீல்

சொல்கிறார். எந்த எந்தக் காரணங்களாலோ விரிசல் காணும் உறவுகளை இணைக்க வேண்டிய இரு தரப்புப் பெற்றோரும் ஊதி ஊதிப் பெரிதாக்கும் வெறுப்பு என்னும் நெருப்பு! பாதிக்கப்படும் பெண்களுக்காக இருக்கும் சட்டங்களையும் மகளிர் காவல் நிலையங்களையும் தனக்குப் பிடிக்காத மாமனார், மாமியார், நாத்தனாரை தண்டிக்க உபயோகிக்கும் பெண்கள், இன்னும் பெண்ணைத் தன் அடிமையாக நினைக்கும் ஆண்கள்... இப்படி எத்தனை காரணங்கள்?

இந்த உறவை எப்படியும் நிலைக்க வைக்க வேண்டும் என்னும் உறுதி, வாயிலிருந்து வார்த்தைகள் விழுந்துவிட்டால் திரும்ப அள்ள முடியாது என்னும் விவேகம், எந்தப் பிரச்னை வந்தாலும் “மம்மீ...” என்று தன் அம்மாவிடம் ஓடாது தானே சமாளிக்கும் வைராக்கியம், கொஞ்சம் விட்டுக் கொடுப்பது கேவலமல்ல என்னும் எளிமை... இவை இருந்தால் போதும்.

“உங்கள் நாடு எப்படி இன்னும் ஒன்றுபட்டு இருக்கிறது?” என்று வெளிநாட்டார் சிலர் நம்மைப் பார்த்து மூக்கில் விரல் வைக்கிறார்கள். ‘மதச் சண்டைகள், தீவிரவாதம், அரசியல் சுரண்டல், ஊழல், லஞ்சம், வறுமை, வன்முறை... அப்பப்பா...” என்பவர்களுக்கு நம் பதில்: “எங்கள் சமூகம் இன்னும் எத்தனையோ மாற வேண்டும். ஆனால், எம் குடும்பங்களின் பலத்தில்தான் எங்கள் தேசம் நிற்கிறது” என்கிறோம் நாம்.

அந்தப் பெருமை குலையாமல் பாதுகாக்க இன்னும் கொஞ்சம் சகிப்புத்தன்மை... ப்ளீஸ்...

# 27

## மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி!

கிருஷ்ண தேவராயரும் அவரின் அமைச்சர் அப்பாஜியும் குதிரைகளில் ஏறி நகர்வலம் வந்துகொண்டு இருந்தனர். தெருவோர வீடு ஒன்றில் சமையல் நடந்துகொண்டு இருந்தது. மன்னரின் மனசுக்குள் ஏதோ அருசி தட்டியது. சாம்பார் கொதித்து வரும் வாசனையில் ஏதோ வித்தியாசமாக உணர்ந்தார். “என்ன விஷயம்?” என்று அப்பாஜியைக் கேட்க நினைத்து வாயைத் திறப்பதற்குள், “மன்னரே! கொதிக்கும் சாம்பாரில் உப்புக் குறைவாக உள்ளது. அதனால்தான் வாசனை வித்தியாசமாக இருக்கிறது” என்றாராம் அப்பாஜி! கிருஷ்ணதேவ ராயரின் அதிர்ஷ்டத்தை நினைத்தால் பொறாமையாக இருக்கிறது. எஜமான் மனதில் நினைப்பதற்குள் அதை யூகித்து, பதிலையும் சரியாகச் சொல்லும் பணியாளர்கள் அமைந்தால் எஜமானருக்கு என்ன குறை இருக்க முடியும்?

“உங்கள் முடி வயதான பின்னும் ஏன் நரைக்கவில்லை?” என்று பிசிராந்தையார் என்னும் புலவரிடம் கேட்டார்களாம். “நான் இண்டிகா ஹேர் டை மட்டுமே பயன்படுத்துகிறேன். பத்து நிமிஷத்தில் முடி கருப்பாயிடும்” என்று சொல்ல முடியாத காலத்தில் வாழ்ந்த பிசிராந்தையார் தன் முடி வெள்ளையாக

மாறாததன் காரணங்களைப் பட்டியல் இடுகிறார். நல்ல மனைவி, சொல் பேச்சுக் கேட்கும் பிள்ளைகள்... இத்யாதி லிஸ்டில், "என் மனசைப் புரிந்துகொண்டு செயல்படும் பணியாளர்கள்" என்பதையும் இணைத்துள்ளார். கொடுத்து வைத்த மனிதர். நாமோ... "நாளைக்கு கெஸ்ட்டு வராங்க. லீவ் போட்டுராதே. மறக்காதே" என்று நாலு முறை நினைவூட்டல் செய்த பின்னும் விருந்தினர்கள் வந்து இருந்துவிட்டுப் போன மூணு நாளும் மிகச் சரியாக, கடிகார முள்ளின் துல்லியத்துடன் லீவு எடுக்கும் பணியாளர்களைக் கொண்ட மாபாதகர்கள். அந்த மூன்று நாளும் பாத்திரம் தேய்த்து, விருந்தினர்களைக் கவனித்து உடல் சலித்தபின், "உடம்பு சரியில்லம்மா" என்று நான்காம் நாளில் வந்து நிற்கும் ஆளை நிறுத்தும் தைரியம் இல்லாதவர்கள்.



கிருஷ்ண தேவராயர்

கூலி மிகக் கேட்பார்

கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார்

வேலை மிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்

ஏனடா நீ நேற்றைக்கு வரவில்லை என்றால்

பானையிலே தேள் இருந்து பல்லால் கடித்ததென்பார்

பெண்டாட்டி மேல் பூதம் வந்ததென்பார்

பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாள் என்பார்

ஓயாமல் பொய் உரைப்பார், ஒன்றுரைக்க வேறு செய்வார்...

என்றான் இந்தக் கஷ்டத்தை அனுபவித்த பாரதி. வீட்டின் பணியாளர்களை மட்டுமா சொல்வது? இன்றைய தேதியில் விவசாய தேசமான இந்தியாவுக்குப் பிடித்த மிகப் பெரும் சாபக்கேடு விவசாய வேலைகளுக்கு எந்தக் கிராமத்திலும் ஆட்கள் கிடைப்பதில்லை என்பதுதான். அலுவலகங்களில், கடைகளில்... யாரையும் கேளுங்கள்... நம்பிக்கையா, நல்லா வேலை செய்ய ஆட்களே கிடையாது சார் - என்கிறார்கள். எங்கும் எங்கெங்கும் வடகிழக்கு மாநிலங்களில் இருந்து வந்த இளைஞர்கள்தான் வேலை பார்க்கிறார்கள்.

சம்பளம் கொடுக்கும் இடங்களிலேயே இப்படிக் கதை என்றால் சேவை அல்லது தொண்டு நடக்கும் இடங்களில் எப்படித்தான் வேலை நடக்கிறதோ..? காஞ்சி மகா ஸ்வாமிகளின் ஆணைப்படி கும்பகோணம் மகாமகத்துக்கு வந்து கூடும் பக்தர்களுக்கு சாப்பாடு போடும் வேலையைச் செய்த அன்னதான சிவனின் கதையைப் படித்து நெகிழ்ந்து உருகிப்போனேன். 1921, அதன்பின் 1933 ஆகிய இரு ஆண்டுகளிலும் நடந்த மகாமகங்களில் ஆயிரக் கணக்கான பேருக்கு இவர் ஒருவரே தனியாக அன்னதான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்!



இலைக் கட்டுகள் நூறு நூறு மாட்டு வண்டிகளில் வருமாம். பத்து வண்டி நிறைய நெல்லிக் காய் வந்ததாம் ஊறுகாய் போட. எந்த உணவையும் வாயில் போட்டு ருசி பார்ப்ப தில்லை. அது பக்தர்களுக்குப் பரிமாற வேண்டிய பிரசாதம். வாயில் போட்டு சுவை பார்த்தால் எச்சில் உணவாகி விடும். எந்த உணவும் கொதிக்கும் வாசனையில் இருந்தே சுவை சொல்லி விடுவாராம். “சின்ன அண்டா நிறைய கொத்த மல்லியை அரைச்சுக்கொண்டு வந்து ரசத்தில் போடு” என்பாராம். சின்ன அண்டா கொத்தமல்லியை அரைத் துப் போடும் அளவு என்றால், எத்தனை பெரிய அண்டா நிறைய ரசம் வைத்திருக்கக்கூடும் என்று பார்த்துக்கொள்ளுங்கள்! இரண்டு மாட்டு வண்டி நிறைய துடைப் பங்கள் மட்டும் வந்ததாம்- பக்தர்கள் சாப்பிட்டபின் அந்த இடத்தைச் சுத்தம் செய்ய.

நாம் நாலு பேருக்குச் சமையல் செய்து முடித்தாலே சமையல் அறை எருமை மாடு கன்று போட்ட இடம் போல் ஆகிவிடுகிறதே! அன்னதான சிவன் சுத்தப் பிரியராம் - ஆயிரம் பேர் பந்தியும் சமையலும் நடந்தபடியே இருந்தாலும், ஒரு இடத்தில் அழுக்கோ, பிசுக்கோ, குப்பையோ இருக்காதாம். சாதம் வடித்து மாளாதாம். எனவே, முதலில் பத்து மூட்டை அரிசியை சாதமாக வடித்து விடுவார்களாம். அதைப் பெரிய பாய்களில் கொதிக்கக் கொதிக்க கொட்டி வைப்பார்களாம். மேலே மிக மெல்லிய துணியைப் போட்டு மூடி, அதன் மேல் ஒரு பத்து மூட்டை சமைக்காத அரிசியைக் கொட்டுவார்களாம். பிறகு சாக்குப் பைகளைப் போட்டு மூடுவார்களாம். அரை மணி நேரத்தில் சாக்கு மூட்டைகளைப் பிரித்தால், அரிசி, கீழே உள்ள சாதத்தின் சூட்டில் மலர மலர வெந்திருக்குமாம்! மகாமகத்துக்குப் பல மாதங்கள் முன்பாகவே பெரிய பீப்பாய்களில் பாலைச் சேகரித்து தயிராக மாற்றுவார்களாம். பீப்பாயின் வாயை மெழுகால் அடைத்து, குளங்களிலோ, கிணறுகளிலோ தூக்கிப் போட்டு விடுவார்களாம். ஃபிரிட்ஜ் இல்லாத காலங்களாயிருந்தும் கிணறு, குட்டைகளில் நீர் ஓடிய காலமல்லவா? மாதங்கள் கழித்து மகாமகம் நாளில் வெளியே எடுத்தால் தயிர் புளிக்காமல் ஜம்மென்று இருக்குமாம்.

இத்தனை பொருட்களைச் சேர்த்து, இத்தனை பேருக்கு முகம் சுளிக்காமல் சாப்பாடு போட்டு, இத்தனை சுத்தமாகவும் செய்கிறீர்களே, எப்படி என்றால், “பரமாச்சாரியாரின் பணி

என்கிற நினைப்பில் நாங்கள் வேலை செய்யும்போது எல்லாமே சரியாக நடந்துவிடும்!" என்பாராம் அன்னதான சிவன்!

உண்மைதான்! 'யதா ரஜா, ததா பிரஜா...' என்று சொல்வார்களே. 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்பது போல், நல்ல எஜமானர்கள் அமைந்து, அவர்கள் உள்ளத்திலும் செய்கையிலும் தூய்மையும் அன்பும் மிளிரும்போது பணியாட்களும் அவ்விதமே அமையக்கூடும்.

ஏவி.எம். செட்டியார் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். பணியாளர்களுக்கு அவர் கொடுக்கும் ஒவ்வொரு இன்ஸ்ட்ரக்ஷனும் எந்தக் குழப்பமும் வர வாய்ப்பே இல்லாத அளவுக்குத் தெளிவாக இருக்குமாம். "காரை எடுத்திட்டு பெட்ரோல் போட்டுட்டு ஸ்டுடியோவுக்கு வா" என்று ஒருநாளும் டிரைவருக்கு உத்தரவு போட மாட்டாராம். "ஒயிட் கலர் அம்பாசிடரை எடுத்திட்டு, பத்து லிட்டர் பெட்ரோல் போட்டுட்டு, ஏவி.எம். ஸ்டுடியோ முதல் வாசல்ல வந்து பத்து மணிக்கு நில்லு" என்றுதான் உத்தரவு இருக்குமாம். "நான் எந்தக் காரைச் சொன்னால் நீ எத எடுத்துட்டு வந்து எங்க நிக்கற..?" என்ற புலம்பல்கள் வரவே வாய்ப்பிருக்காதாம். இது ஒரு மிக முக்கியமான மேனேஜ்மென்ட் டெக்னிக்.

நேருவிடம் பற்பல ஆண்டுகள் அவரின் நம்பிக்கைக்கு உகந்த செயலராக இருந்த எம்.ஓ.மத்தாய், நேரு இறந்தபின் எழுதிய 'நேருகால நினைவுகள்' புத்தகம் இந்தியா முழுவதும் எதிர்ப்பலைகளை எழுப்பியது. நேருவைப் பற்றிய ஏகப்பட்ட அவதூறுகளைச் சொன்னதோடு, நேரு செய்த பல சாதனைகளைத் தானும் சேர்ந்து செய்ததாக மத்தாய் எழுதியிருந்தாராம். புத்தகத்தைப் பற்றி விமர்சனம் செய்த குஷ்வந்த் சிங் சொன்னார்: "ஒரு பெரிய யானை கஷ்டப்பட்டு ஒரு பெரிய பாலத்தில் ஏறி அதைக் கடந்தது. அதன் முதுகில் ஒரு எறும்பு சவாரி செய்தது. பாலம் கடந்ததும் எறும்பு சொன்னது, 'நானும் யானையும் கஷ்டப்பட்டு பாலத்தைக் கடந்தோம்' என்று. இந்தப் புத்தகமும் அப்படித்தான்...". மத்தாயின் மனோநிலை சில பணியாளர்களிடம் காணப்படுவதுதான்.

ராமனின் பட்டாபிஷேகத்தைத் தடுக்க விரும்பிய கூனி, கைகேயியை எழுப்பி செய்தியைச் சொன்னாளாம். உள்ளம் மகிழ்ந்து தன் வேலைக்காரியான கூனிக்கு ஒரு முத்து மாலையைப்

பரிசளிக்கிறாள் கைகேயி. அவ்வளவு தெளிந்த உள்ளத்தோடு இருந்த கைகேயியை கூனி எப்படி மாற்றிவிடுகிறாள்? ராமன் சிறு வயதில் அவள் மீது எறிந்த கல்லா காரணம்? அதிகார மையம் அதுவரையில் கைகேயியிடம் இருந்தது. ஏனென்றால் தயரதன், கைகேயி ஆட்டி வைக்கும் பொம்மை. இப்போது ஆட்சி மாறினால் அதிகார மையம் மாறி தன்னுடைய முக்கியத்துவம் குறையும் என்று கூனி நினைத்திருக்கக்கூடிய உளவியல் காரணமும் இருக்கலாம். இதுவும் ஒரு பணியாளர் மனோபாவமே.

நம் எல்லாருக்கும் நம் பணியாளர்களிடம் வருத்தங்கள் உண்டு. ஆனால், நாம் யாருடைய பணியாளோ, அந்த ஆண்டவனின் மனம் சுருங்காத வகையில் நாம் வேலை செய்கிறோமா என்ற வினாவுக்கு விடையை விசாரிக்கப்போனால் நம் பணியாட்கள் நம்மைவிடப் பரவாயில்லை என்ற முடிவுக்கே வர நேருகிறது. இல்லையா?

# 28

## கண்ணதாசன் தரும் தெய்வ தரிசனங்கள்!

தன்னை ‘காவியத்தாயின் இளைய மகன்’ என்று கண்ணதாசன் குறிப்பிட்டார். கம்பனையோ பாரதியையோ அல்லது இருவரையுமோ காவியத்தாயின் மூத்த மகன்களாக அவர் கொண்டிருக்கலாம். இந்த இளைய மகனுக்கு அந்த காவியத்தாய் வாரி வாரி வழங்கிய கவிதைச் செல்வம் காலத்தில் அவரை உறைந்து நிற்க வைத்துவிட்டது. எத்தனையோ பேர்களை நினைத்து காலகாலமாகிவிட்டது. கண்ணதாசனின் விஷயத்திலோ காலம், காலமாகிவிட்டது.

கண்ணதாசன் எனக்கு ரொம்ப ஸ்பெஷல். ஓரிரு தலை முறைகளையே கட்டிப்போட்ட, அமைதி தந்த, ஆறுதலளித்த, ஆவேசம் கொள்ள வைத்த, காதலிக்கச் செய்த, காதலின் பிரிவில் துடிக்க வைத்த மகத்தான கவிதை வரிகளின் அரசன் அவர்.

பல படைப்பாளிகளும், கலைஞர்களும், கவிஞர்களும் அணிந்து கொள்ளும் கவசங்கள் எதுவும் இல்லாதவர். அதனாலேயே நமக்கு மிக அருகில் எப்போதும் இருக்கிறவர்.

காரைக்குடியில் கம்பன் விழா நடக்கிறது. தமிழ்நாட்டில் கம்பனை மறுகண்டுபிடிப்பு செய்தவர்களில் முக்கியமானவரான

சா.கணேசன், கம்பன் கழகத்தின் தலைவர். நேர விஷயங்களில் அவர் மகா கண்டிப்பானவர். எந்த ராஜன் எந்தப் பட்டிணம் போனாலும் பத்து மணி என்றால் பத்து மணிக்கு ‘கம்பன் வாழ்க... கம்பன் புகழ் வாழ்க...’ என்று நிகழ்ச்சியைத் தொடங்கிவிடுவார்.

அந்தக் குறிப்பிட்ட ஆண்டில் கண்ணதாசன் கவியரங்கத் தலைவராக அழைக்கப்பட்டார். கண்ணதாசன் எந்த நிகழ்ச்சிக்கு நேரத்துக்குச் சென்றிருக்கிறார்? வழக்கம்போல லேட். சா.கணேசன் காத்திருக்கவில்லை. வேறு ஒருவரை வைத்து கவியரங்கத்தைத் தொடங்கிவிட்டார். தாமதமாக வந்த கண்ணதாசனை முதல் வரிசையில் பார்வையாளராக அமர வைத்துவிட்டார். அடுத்த வருடமும் கண்ணதாசன் அழைக்கப்பட்டார் கவியரங்கத் தலைமைக்கு. இந்த முறை சரியான நேரத்துக்கு வந்துவிட்டார் கண்ணதாசன். கவியரங்கத்தின் முதல் வரியே இப்படி வந்தது...

கடிகாரம் பார்த்துத்தான்

காரியங்கள் ஆற்றுவதென

பிடிவாதம் பிடிக்கும்

பேரவையின் தலைவர்களே!

கடிகாரம் என் பகைவன்-கடுகி வந்தேன்

கணேசர் பயத்தால்...

“சில பேருக்கு இந்து மதம் பிடிக்கும்; சில பேருக்கு இஸ்லாம் மதம் பிடிக்கும். எனக்குப் பிடித்த மதம் தாமதம்” என்று சொன்ன வரும் கண்ணதாசனே!

இந்தப் பூச்சுகளற்ற தன்மைதான் கண்ணதாசனை நமக்கு மிக நெருக்கமாக ஆக்குகிறது. அவருடைய சில கவிதைகள் நமக்குத் தரும் தரிசனங்கள் மகத்தானவை. அதிலும் குறிப்பாக அவர் தரும் தெய்வ தரிசனங்கள் பிரம்மாண்டமான சொரூபங்களே!

‘சத்திய முத்திரை கட்டளை இட்டது பாலகன் யேசுவின் வேதம்’ என்று கிறிஸ்துமஸ் பண்டிகையைக் களமாக வைத்து ஒரு பாடல் எழுதுகிறார். அதில் ‘வாசல் கதவை மூடுவதில்லை தேவன் அரசாங்கம்’ என்று ஒரு அபாரமான வரியை அமைக்கிறார். ‘தட்டுங்கள், திறக்கப்படும்’ என்றால் ‘யார் மூடி வைத்தது?’ என்ற கேள்வி எழக்கூடும். ஆனால், தேவனின் அரசாங்கத்தில் கதவுகள்

மூடப்படுவதில்லை என்ற தரிசனத்தை நமக்குத் தரும் அமுத வரிகள் கண்ணதாசனால் மட்டுமே சாத்தியமாகும்.

ஆயிரம் கரங்கள் நீட்டி

அணைக்கின்ற தாயே போற்றி!

அருள் பொங்கும் முகத்தைக் காட்டி

இருள் நீக்கும் தந்தாய் போற்றி!

தாயினும் பரிந்து சால

சகலரை அணைப்பாய் போற்றி!

தழைக்கும் ஓர் உயிர்கட் கெல்லாம்

துணைக்கரம் கொடுப்பாய் போற்றி!

தூயவர் இதயம் போலத்

துலங்கிடும் ஒளியே போற்றி!

தூரத்தே நெருப்பை வைத்து

சாரத்தைத் தருவாய் போற்றி!

கர்ணன் படத்தில் வரும் இந்த சூரிய பகவான் துதி, ஆயிரமாயிரம் வருடங்களாகத் தொடரும் சூரிய வழிபாடுகளை நவீன கவிதை என்னும் புத்தொளியில் முழுக்காட்டி ஒரு ஜாஜ்வல்யமான பேரொளியை, சூரியன் பற்றிய ஒரு மின்னும் சித்திரத்தை நமக்குத் தருகிறது.

சூரிய வழிபாடு என்பது மனித குலத்தின் மிக ஆரம்பங்களில் இருந்தே அமைந்திருக்கிறது. ரிக் வேதத்தில் ‘மாஸௌரம்’ என்றும், சாம வேதத்தில் ‘சுக்ரியம்’ என்றும் சூரிய வழிபாட்டு மந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்திய நாகரிகத்தைப் போலவே பழமையான கிரேக்க, எகிப்திய, பாரசீக நாகரிகங்களிலும் சூரிய வழிபாடு இருந்திருக்கிறது. ‘அப்போலோ’ என்ற பெயரே சூரிய தெய்வத்தைக் குறிப்பதுதான்.


ப்ரெஞ்ச் தேசத்தின் மாமன்னனான பதினான்காம் லூயி தன்னை சூரியக் கடவுளின் நேர் வாரிசு என்றே கொண்டான். ரோம நாட்டுப் புராணங்களில் ஹைபீரியன் என்ற பெயரில் சூரியனை வழிபட்டிருக்கிறார்கள்.

“ஒளியூட்டக்கூடிய பொருள்களில் நான் சூரியனின் ஒளியாக இருக்கிறேன்” என்று பகவத் கீதையில் கண்ணன் சொல்கிறான்.

சூரியன், காஸ்யப முனிவருக்கும் அதிதிக்கும் பிறந்தவன். அதனால் அவன் ஆதித்யன். ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வருபவன். அவனே கண்கள் காணும் தெய்வம். அதனால்தான் ‘சூர்ய: பிரத்யக்ஷ தேவதா’ என்று நம் வேதங்கள் வர்ணிக்கின்றன. அவனுக்கு ‘கர்ம சாட்சி’ என்றும் பெயர் உண்டு. மனிதர்கள் செய்யும் நன்மை தீமை எல்லாவற்றுக்கும் அவனே சாட்சி.

‘செய்கதிர் தேவனை வணங்குகிறோம். அவன் எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக’ என்கிறார் பாரதியார்.

ஆனால், இத்தகைய வழிபாட்டு முறைகள் எதிலும் இல்லாத ஒரு புதுமையை கண்ணதாசனின் ‘ஆயிரம் கரங்கள்’ பாடல் தந்து விடுகிறது. சூரியனை தெய்வமாகவும், சாட்சியாகவும், குருவாகவும், தகப்பனாகவும் மட்டுமே பார்க்கும் அத்தனை பார்வைகளுக்கு மத்தியில் அவனைத் தாயாக உருவகம் செய்வது கவிஞர் மட்டுமே! ஆயிரம் கரங்கள் நீட்டி அணைக்கின்ற தாய்தான் சூரியன் என்பது புதுமையிலும் புதுமை.



கண்ணதாசன்

தாயினும் பரிவு காட்டக் கூடியவன் சூரியன். ஏன்? ஏனென்றால் அவன் தூரத்தே நெருப்பை வைத்து அதன் சாரத்தை மட்டுமே தருபவன். ‘தன் கோடி கோடி குழந்தைகள் வெப்பத்தால்

கருகிவிடக் கூடாது; ஆனால் ,அந்த வெப்பம் தரும் கதகதப்பையும், ஒளியையும் அந்த உயிர்கள் உண்டு வாழ வேண்டும்' என்று நினைப்பவன் சூரியன்.

புல்லை நகையுறுத்தி, பூவை வியப்பாக்கி, நீரிலே மலர்ச்சி தந்து, விண்ணை வெளியாக்கி விந்தை செய்துவிடுகிறது சூரியனின் விந்தைக் கதிர்! அடுப்பின் அனலில் வேகும் அம்மா, குழந்தைகளை அடுப்புக்குப் பக்கத்தில் வரவிட மாட்டாள். தானே வெந்து அக்னி உருவாக்கும் சுவையான உணவுகளை மட்டும் கொண்டுபோய் தள்ளி இருக்கும் குழந்தைகளுக்குக் கொடுப்பாள். அம்மா போல சூரியனும் தூரத்தே நெருப்பை வைத்து அதன் சாரத்தை மட்டும் நமக்குத் தருபவன். அதனால்தான் அவன் தாயினும் சாலப் பரிவு செய்பவன். சூரியனுக்குப் பொற்தேரும் ஏழு குதிரைகளும் இருக்கலாம். ஆனால், கண்ணதாசனின் கவிதையோ அந்தச் சூரியனை மாணிக்கத் தேரில் ஏற்றி, மகத்தான நூறு நூறு குதிரைகளைப் பூட்டிப் பறக்க வைத்துவிடுகிறதே!

போரில் வெற்றி பெறுவதற்காக ஆதித்ய ஹிருதயம் என்னும் மந்திரத்தை அகஸ்தியர் ராமனுக்கு உபதேசிக்கிறார். அந்த ஆதித்ய ஹிருதயம் சூரியனை ஸஹஸ்ரார்ச்சி என்கிறது. ஆயிரம் கைகள் கொண்டவன் என்று பொருள். கண்ணதாசன் காட்டும் சூரியன் ஒரு பெண். ஒரு கைகளில் அடுப்பையும், இன்னொரு கையில் குழந்தையையும் சமாளிக்கும் அம்மாக்கள்போல, ஆயிரம் கதிர்களால் உலகைச் சமாளிக்கும் தாய்தான் சூரியன்!

மற்றும் சூரியன் யாவருக்கும் மித்திரன் (நண்பன்) கூட. பார்ஸிகளின் வேதமான ஜெந்த் அவெஸ்தாவில் சூரியன் மித்திரன் என்றே கூறப்படுகிறான். அவனே காலத்தின் விதை. பகல், இரவு, ருது, வருஷம் என்ற எல்லா காலப் பிரமாணங்களுக்கும் சூரியனே அடிப்படை. அதனால் அவனே பிரும்மம். அவனே சிவனின் கண்ணாக உருவகம் செய்யப்படுகிறான். மேலும் அவனே நாராயணனன் வடிவம் என்பதால் சூரியநாராயணன் என்றும் வழங்கப்படுகிறான்.

இந்த அத்தனை தகவல்களையும் 'ஞாயிறே நலமே வாழ்க நாயகன் வடிவே போற்றி' என்ற ஒற்றை வரி உணர்த்தி விடுகிறது.

'கர்ணன்' படத்தின் இந்தப் பாடலை கண்ணதாசன் எழுதும் முன்பாக சில வேத பண்டிதர்களை அழைத்து அவர்கள் வாயிலாக ஆதித்ய ஹிருதயத்தை பாடம் சொல்லிக் கேட்டாராம். அந்த

ஒலியை உள்வாங்கியே இந்த மகத்தான பாடல் எழுந்ததாம்.

ஒரு கவிஞனின் ஆன்மாவில் இறைவனின் சக்தி நிறையும்போது அவனது கவிதை புதுப்புது வெளிச்சங்களையும் தரிசனங்களையும் காட்டும் வல்லமை கொண்டுவிடுகிறது. கண்ணதாசனின் கவிதைக்கும் அந்த வல்லமை உண்டு. ஏனென்றால், கண்ணதாசன் எளிமையில் தோய்ந்த ஒரு கவிஞர். அப்படிப்பட்ட எளிய மனங்கள் மட்டுமே மகத்தான தெய்வ தரிசனங்களை அறியவும், அறிவிக்கவும் முடியும்.

# 29

## கனவு என்னும் சுவாரஸ்யம்

கனவில் வந்த சிவபெருமான் ‘அடுத்த ஆதீனம் இவர்தான்’ என்று சொன்னதாக ஒரு பிரபல மடத்தின் மூத்த ஆதீனம் விடுத்த ஸ்டேட்மென்டைக் கேட்டதும், நம்மில் பலர் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனோம். ‘என்னடா, இவர்களுக்கெல்லாம் கனவில் சிவபெருமான், குறித்த நேரத்தில் சீரியலில் வருவது போல், தவறாது வருகிறாரே... நமக்கெல்லாம் சிவன் - அவர்கூட வேண்டாம், அவர் மகன் பிள்ளையார் - அவரும் வேண்டாம், அவர் ஏறிப் போகும் எலிகூட வருவதில்லையே! என்று சிலர் அங்கலாய்த்ததாகக் கேள்வி.

என் கனவுகள் படுமோசம். சில நாட்களுக்கு முன்பு மதுரை கம்பன் விழாவில் பேசுவதற்காக பாண்டியன் எக்ஸ்பிரஸில் சென்னையிலிருந்து மதுரை போனேன். புகைவண்டித் தூக்கம் என்பது சில கொடுத்து வைத்த மகானுபவர்களுக்கு மட்டும்தான். வண்டி எழும்பூரைத் தாண்டும் முன் நித்திராதேவி அவர்களை அன்போடு தழுவிக்கொள்வாள். என்னோடு மட்டும் சண்டைக்கு நிற்பாள். இறுதியில் லேசாகக் கண் அயர்ந்தேன். அப்போது வந்த கனவு என்ன? ஒரு முடியாத தோசையைத் தின்றுகொண்டே போக வேண்டிய ரயிலைத் தவறவிட்டு அதன் பின்னே வீரா வேசத்தோடு


நான் ஓடிக் கீழே விழும் கனவு. கூடவே ‘படக், படக்’ என்று டிஜிட்டல் சவுண்ட் டிராக்கில் பின்னணி இசையாக ரயில் வண்டியின் தாள லயம் வேறு! கஷ்டம்டா சாமி.

சிவபெருமான் கனவில் வந்த சம்பவங்களில் நமக்கு ஆன்மச் சிலிர்ப்பை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் சரித்திரத்தில் உண்டு. ஔரங்கசீப் இந்தியாவை ஆண்ட காலத்தில் காசியின் பிரசித்தி பெற்ற விஸ்வநாதர் ஆலயம் ஐந்து முறை இடிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தின் தென்காசியை ஆண்ட பராக்கிரம பாண்டியனின் கனவில் சிவபெருமான் தோன்றி, “வடக்கில் கோயில் இல்லாவிட்டாலும் தென்காசியில் எனக்குக் கோயில் எழுப்பு” என்று கட்டளையிட, அப்படி பராக்கிரம பாண்டியன் எழுப்பியதுதான் தென்காசியின் பிரமாண்டமான விசுவநாதர் கோயில். அந்தக் கோயிலில் மன்னர் செதுக்கிச் சென்றிருக்கும் ஒரு வாசகம், “ஆயிரம் ஆண்டுகள் கழித்து இந்தக் கோயிலின் கல் ஒன்று கீழே விழுந்து அதைக் கட்டும் திருப்பணியை எந்த அன்பர் செய்யப் போகிறாரோ, அவரின் கால்களில் விழுந்து இப்போதே நான் பணிகிறேன்.”

ஐரோப்பிய அரசர்கள் தங்கள் பெரும் மாளிகைகளை தங்கத்தில் இழைத்து கட்டிக்கொண்ட காலகட்டத்தில் நம் தேசத்தின் மன்னர்கள் கோயில்களைப் பெரும் செலவில் கட்டினார்கள். தாங்கள் வசிக்கும் மாளிகைகளைக்கூட அந்த அளவில் அவர்கள் எழுப்பவில்லை. அதனால்தான் கோயில்கள், காலக் கரையான் அரிக்காது இன்றும் வாழ்கின்றன. கோயில்களும் மடங்களும், ஆதீனங்களும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் பெரும் பங்கு வகித்தன. எத்தனையோ புனிதர்களின் உழைப்பு ஆகுதியாய் சொரியப்பட்டு எரிந்த வேள்வித் தீயாக உயர்ந்த அவற்றின் புனிதத்தை இன்றைய நிகழ்வுகள் கலைத்துவிட முடியுமா என்ன?

மனித வாழ்வின் அளவில்லாத சுவாரஸ்யங்களில் கனவும் ஒன்று. ‘நல்ல தூக்கம், அப்போ ஒரு கனவு’ என்று அடுத்த முறை யாரும் சொன்னால் நம்பாதீர்கள். கனவுகள் வருவது ஆழ் தூக்கத்துக்கு முன் நிலையில்தானாம். லேசாக தூக்கம் கண்ணைச் சுழற்றும் நேரம், தூக்கத்தை REM (Rapid Eye Movement) நிலை என்கிறார்கள். மூடிய விழித் திரையினுள் கருவிழி அசையும் நிலை. இந்த நிலையில்தான் கனவுகள் வருகின்றன. அடுத்த கட்டமான Non REM என்ற நிலைக்குப் போனால் கருவிழியும்

அசைவதில்லை, கனவும் வருவதில்லை. அப்போது அலாரம் அடித்தால் ஆத்திரத்தில் ஓங்கி அதன் தலையில் தட்டிவிட்டு உடனே தூக்கத்துக்குத் திரும்புகிறோம். ‘கனவுகள் ஆழ்மனதின் ஆசைகள்’ என்று ஃபிராய்ட் போன்ற உளவியல் நிபுணர்கள்கூறுகிறார்களாம். என்ன கொடுமை சார்! பாதி தோசையைத் தின்றுகொண்டே ரயிலின் பின்னே ஓட என்றைக்கு என் ஆழ்மனம் ஆசைப்பட்டிருக்கும்? இன்னொரு விஷயம்... நாம் இதுவரை கண்டேயிராத ஒரு காட்சி நம் கனவில் வரவே முடியாதாம். கண்ட பொருட்கள் வேறு கோணங்களில், வேறு இடங்களில் இருப்பது போல் கனவுகள் வரலாமே அன்றி, இதுவரை காணாதது கனவில் வரவே வராதாம். பிறவியிலேயே பார்வை அற்றவர்களுக்கு கனவுகள் குரல்கள் தானாம். காட்சிகள் அன்று.



புனிதத் தலம் காசி

இலக்கியங்களிலும் இந்திய சினிமாக்களிலும் கனவு ஒரு முக்கியமான உத்தி. கதாநாயகன் கோடம்பாக்க ஸ்டூடியோவில் மூட்டை தூக்கிவிட்டு கதாநாயகியைப் பார்த்தவுடன் இருவரும் அடுத்த காட்சியில் கனவு கண்டு ஆம்ஸ்டர்டாம் வென்லோவின் டியூலிப் மலர்த் தோட்டத்துக்குப் போய்விடலாம். ஷேக்ஸ்பியரின் பிரசித்தி பெற்ற நாடகமான ஜூலியஸ் சீசரில், சீசரின் மனைவி,

“நேற்று தீய கனவு கண்டேன். சபைக்குப் போக வேண்டாம்” என்று எச்சரித்தும் சீசர் அதைச் சட்டை செய்யாது போகிறான். அன்றுதான் அவன் கொல்லப்படுகிறான். அதுசரி... மனைவிகளின் எச்சரிக்கைகளை கணவர்கள் கவனிக்காது இருப்பது சீசரின் காலத்திலிருந்தே சகஜம்போல! நம் இலக்கியங்களில் வரும் மிக அழகான கனவுக்காட்சி ஆண்டாள் கண்ட கனவைச் சொல்லும் ‘வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து’ என்று தொடங்கும் பிரசித்தி பெற்ற பத்துப் பாடல்கள்.

ஆயிரம் யானைகள், தோரணங்கள், பாளை, கமுகு, இந்திரன் உள்ளிட்ட தேவர்கள், நான்கு திசை தீர்த்தங்கள், மத்தளம், சங்கம், முத்துப் பந்தல், தீவலம், அம்மி மிதித்தல், பொரி தட்டல், குங்குமம், வீதிவலம் என்று அமர்க்களமான கல்யாணம்.

“இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்

நம்மையுடையவன் நாராயணன் நம்பி

செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி

அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழி நான்...”

இதைப் போலவே ராமாயணத்தில் இடம்பெறும் திரிசடையின் கனவும் சிறப்பானதுதான். விபீஷணனின் மகள் அவள். அசோகவனத்தில் அரக்கியர் சிறையில் இருந்த ஜானகிக்கு உயிரும் உறுதியும், நம்பிக்கையும் கொடுத்த ஒரே தோழி. அரக்கியர் சீதையைப் பயமுறுத்தும்போது திரிசடை தன் கனவைச் சொன்னாள். ராவணன், இந்திரஜித், கும்பகர்ணன் எல்லோரும் தேர் ஏறி வேகமாகத் தென்திசை போவதாகவும், அரக்கியர்களின் தாலி கீழே விழுவதாகவும் ஆயிரம் தீபம் ஏந்திய பெண் ஒருத்தி விபீஷணனின் மாளிகையில் நுழைவதாகவும் தான் கண்ட கனவு ஒரு நல் நிமித்தம் என்கிறாள் திரிசடை. “அவ்வளவுதான் கனவு. அப்போதுதான் நீ என்னை எழுப்பிவிட்டாய்...” என்றும் சொல்கிறாள்.

“இன்னமும் துயில்க...” என்று சீதை இரு கை கூப்பினாளாம். “தூக்கத்தைத் தொடர்ந்து இந்த நல்ல கனவையும் தொடர்க” என்கிறாள் சீதை. தூக்கத்தைத் தொடரலாம். கனவைத் தொடர முடியுமா? ஆனால், கடும் இருளில் இருந்தவளுக்கு வெளிச்சத்தின் ஒற்றைக் கீற்று ஓரத்தில் தெரிந்து ஏற்படுத்தும் பரவசம்போல திரிசடையின் கனவு சீதையின் ஒரே நன்நம்பிக்கை முனையானது.

அதனால்தான் ‘தூக்கத்தைத் தொடர் - ஒருவேளை கனவும் தொடரலாம்’ என்று அவள் சொல்வதாகக் கம்பன் படைத்தான்.

கங்கைக் கரையில் ஒரு அன்பு மிகுந்த பெண்மணி தூங்கியபோது அவளுக்குள் ஒரு ஒளி பாய்வதாகக் கனவு கண்டாள். அவளுக்கு இறைவன் அருளால் ஒரு குழந்தை பிறக்கும் என்று கனவுக்கான பலன் சொல்லப்பட்டது. அந்தத் தாயின் மகன்தான் ராமகிருஷ்ண பரமஹம்சர். பைபிளின் பழைய ஏற்பாட்டில் வரும் ஜேக்கப்பின் கனவும் வசீகரமானதே. வானத்திலிருந்து சொர்க்கத்துக்கு எழுந்த மாய ஏணியை - தேவதூதர்கள் விண்ணுக்குப் போகும் பாதையை- ஜேக்கப் கனவில் கண்ட காட்சியாக பைபிள் வர்ணிக்கிறது. ‘நல்ல கனவுகள் தேவனின் கட்டளைகள்’ என்பதும் பல சமயங்களின் நம்பிக்கை.

“தூக்கத்தில் வருவதல்ல கனவு. எது நம்மைத் தூங்க விடாது செய்கிறதோ அதுவே கனவு” என்றார் அப்துல் கலாம். மனிதன் செய்திருக்கிற நெடும் பயணத்தில் அவன் அடைந்த வெற்றிகள் எல்லாம் யாரோ ஒருவன் கண்ட கனவே!

# 30

## தாய்மொழி அறியாமல் பிறமொழி கைகூடுமோ?

அவர் ஒரு நவீன எழுத்தாளர். கவிதை உலகிலும் பெரிதும் மதிக்கப்படும் பிதாமகர். சிறு வயதில் ஹிந்தி மொழிப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்றவர். சில வருடங்களுக்கு முன் வட இந்தியாவில் ஒரு பயணத்தை மேற்கொண்டார். பயணம் என்றால் ஒரு பெரும் நகரத்திலிருந்து கிளம்பி, விமானத்தில் பறந்து இன்னொரு பெரும் நகரத்துக்குப் போய், விமான நிலைய வாயிலில் வாடகைக் கார் பிடித்து, ஏதோ ஒரு கான்கிரீட் கட்டடத்தில் போய்ப் புகுந்துகொள்ளும் பயணம் அல்ல. ஊர் ஊராக, ரயில், பஸ், கார் எனக் கிடைத்த வாகனத்தில் ஏறிச் சென்று, போட்ட இடங்களில் சாப்பிட்டு, ஏரிகளிலும் நதிகளிலும், குடமேந்திப் போகும் யாரோ ஒரு பெண் சாய்க்கும் நீர்த்தாரையில் தண்ணீர் குடித்து பறவைகள் பறப்பது போலச் செய்யப்படும் நிஜமான பயணம். கோயில்களை நோக்கிய பயணம்.

கூட நண்பர்கள், உறவினர்கள் வந்திருந்தனர். குஜராத்தில் ஏதோ முகம் தெரியாத ஊரில் ஒரு அம்மாள் இவர்களுக்குச் சோறு போட்டு, இவர் வயதானவர் என்பதால் தனிப் பிரியத்துடன்

குஜராத்தின் ஸ்பெஷல் மோரான 'ச்சால்' கொடுத்து உபசரித்தாள். எழுத்தாளர் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தார். கண்ணில் இருந்து தாரை தாரையாய் நீர் கொட்டியது. 'க்யா? க்யா?' என்று அம்மாள் பதறினார். கூட வந்தவர்களும் கேட்டார்கள். "இந்த அன்புக்கும் கருணைக்கும் நன்றி என்ற ஒரு சொல்லை ஹிந்தியில் சொல்லத் தெரியவில்லையே எனக்கு... வாழ்நாளெல்லாம் இப்படியே கழிந்து விட்டதே..." என்று எழுத்தாளர் வருத்தப்பட்டாராம்.

மொழிப் போராட்டம் நம் மாநிலத்தின் வீர வரலாறு. திணிக்கப்பட்ட எதையும் மறுப்போம் என்று திமிறிய மன உணர்ச்சியின் பதிவு. சிறை சென்ற எத்தனையோ தியாகிகளின் ஆத்ம சமர்ப்பணம். போராட்டம் முடிந்து சிறையிலிருந்து வெளிவந்த பலரும் அப்போது பிறந்த தம் குழந்தைகளுக்கு தேன்மொழி, மலர்விழி, செந்தமிழ் அரசு, மாறவர்மன் என்றெல்லாம் அழகுத் தமிழில் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்து, நெகிழ்ந்த சரித்திரத் தருணம்.

ஆனால், வாழ்க்கைதான் எத்தனை விசித்திரமானது! தம் குழந்தைகளுக்கு தனித்தமிழ்ப் பெயர்களைச் சூட்டிய இவர்களின் பேரன், பேத்திகளின் பெயர்கள் தமிழில் அமையாதது விசித்திரமானதுதான்! அதைவிட விசித்திரம், அந்தக் குழந்தைகளில் பலர் தமிழ் படிக்கவும், எழுதவும் அறியாதவர்களாக இருப்பது!

நாம் நடத்திய போராட்டம் நம் தாய்மொழியைக் காப்பாற்ற. ஆனால், இன்று நாம் இரண்டு தலைமுறைகளாக ஹிந்தியையும் படிக்கவில்லை. தமிழை வாசிக்கவும் பிள்ளைகளுக்குச் சொல்லித் தரவில்லை. நாம் பிற மொழிகளைப் படிக்காததால் அந்த மொழிகளுக்கு ஒன்றும் இழப்பில்லை. நமக்குத்தான் இழப்பு. அதுசரி, நம் பிள்ளைகளுக்குத் தமிழ் தெரியாது என்று சொல்வதிலேயே பெருமைப்படும் சமூகமாக நாம் உயர்ந்து விட்டபின் வேறு பாஷைகள் தெரியாததைப் பற்றி வருத்தப்பட முடியுமா என்ன?

'மொழிப் பாடங்கள் வாழ்க்கைக்கு உதவாது. ஆங்கிலம் ஒன்று தெரிந்தாலே போதுமானது' என்ற நம் அசட்டு நம்பிக்கை இன்று 'பூமராங்'போல நம்மையே திருப்பித் தாக்குகிறது. பொறியியல் கல்லூரிகளில் இருந்து வெளிவரும் மாணவர்களில் பாதிப் பேருக்கு மேல், கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் பேருக்கு வேலை

கிடைக்கவில்லை என்கிறது ஒரு புள்ளிவிவரம். காரணத்தை விசாரித்தால், இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்து வெளிவரும் பொறியியல் பட்டதாரிகளைவிட தமிழ்நாட்டின் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கில அறிவு மிகக் குறைவு என்கிறார்கள். சரியாகப் பேசவும் வரவில்லை - ஆங்கிலத்தில் சொல்வதைப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை. இவர்கள் எழுதினால் ஆங்கிலத் தாய் (தமிழ்த்தாய் இருக்கும்போது ஆங்கிலத்தாய் இருக்கக் கூடாதா என்ன?) கதறி அழுவாள் என்கிறார்கள். சரி, பொறியியல் கல்லூரிகளில் கூடவே ஆங்கிலம் கற்பிக்கிறார்களா என்று விசாரித்தேன். அதையும் செய்து பார்த்தார்களாம். அப்படிக் கற்பிக்கும் ஒரு பேராசிரியையிடம் பேசியபோது, “இவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பது மிகக் கடினம்-ஏன் தெரியுமா? இவர்களுக்குத் தமிழே சரியாகத் தெரியவில்லை. ஒரு பக்கம் பிழையில்லாமல் தமிழ் எழுதத் தெரியாத ஒரு மாணவன் அல்லது மாணவிக்கு ஆங்கிலம் பயிற்றுவிக்கவே முடியாது” என்றார்.

உண்மைதான்! தாய்மொழியில் தடையின்றிப் பேச எழுதத் தெரியாதவர்களுக்கு, மிக அடிப்படையான மொழி இலக்கணம் கல்லாதவர்களுக்கு, தாய் மொழியில் வார்த்தை வளம் இல்லாதவர்களுக்கு இன்னொரு மொழி எப்படித் தெரியும்?

எந்த மொழியையும் எதிரியாக நினைக்காமல் எத்தனை மொழிகளைக் கற்க முடியுமோ அத்தனையையும் கற்கின்ற குழந்தைகளுக்கு இயல்பான தொடர்புகொள்ளும் திறன் (Communication Skill) அதிகரிக்கிறது. இத்தகையவர்களே இன்றைய உலகில் வெற்றி பெறுகிறார்கள். ஒரு வகுப்பில் எந்தப் பிள்ளை நல்ல பிள்ளை என்றால் ‘பேசாமல் இருக்கிற பிள்ளை’ என்ற காலங்கள் மலையேறிவிட்டன. பேசும் பிள்ளைகள் மட்டுமே ஜெயிக்கிற காலம் இது.

குமரகுருபரர் காசியை அடைந்த நிகழ்வு இலக்கிய உலகிலும் ஆன்மிக உலகிலும் ஒரு மைல்கல் சம்பவம். தமிழ் மட்டுமே அறிந்திருந்த அவர், காசியை அடைந்ததும் ஹிந்துஸ்தானி மொழியை அறியவில்லையே என வருந்தினாராம். கலைவாணியை வணங்கி சகலகலாவல்லி மாலை பாடினாராம்.

வெண்டாமரைக்கன்றி நின்பதம் தாங்க நின்வெள்ளை உள்ளத்

தண்டாமரைக்கு தகாது கொலோ- சகமேழும் அளித்து

உண்டான் உறங்க ஒழிந்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்

கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே!

- என்று தொடங்கும் பாடல்களில் நனைந்த சரஸ்வதி தேவி, உடனே அவருக்கு ஹிந்துஸ்தானி மொழி அறிவை அளித்து விட்டாளாம். அவர் பாடிய காசிக் கலம்பகத்தையும், சகலகலாவல்லி மாலையையும் ஹிந்தியில் மொழிபெயர்ப்புச் செய்த பின் அன்றைய காசி மாநகரமே அவரைக் கொண்டாடியதாம். அங்கே கம்பராமாயணத்தைத் தமிழிலும் ஹிந்தியிலும் மாறி மாறிப் பேசி சொற்பொழிவு செய்வாராம் குமரகுருபரர். அந்தச் சொற்பொழிவுகளுக்கு வந்த துளசிதாசர், குமரகுருபரரின் ஆசி பெற்றே தன்னுடைய புகழ்பெற்ற துளசி ராமாயணத்தை எழுதி அரங்கேற்றினாராம். கம்பனும் காலத்தால் பிற்பட்ட துளசியும் பல இடங்களில் ஒன்றுபோல் காட்சி தருவதற்கு குமரகுருபரரே காரணம்.

சுவாரஸ்யமான இந்தக் கதையைக் கேட்டால் நமக்கும் ஆசையாக இருக்கிறது. படிக்காமல் இத்தனை நாள் விட்டுவிட்டோமே, இனி எங்கு போய் ஹிந்தியோ, பிற மொழிகளோ படிப்பது? கலைமகள் நம் முன்னாலும் வந்து, புதுமொழியை மூளையின் செல்களில் இன்ஜெக்ஷன் போட்டுவிட்டால் எத்தனை நன்றாக இருக்கும்! உண்மையிலேயே குமரகுருபரருக்கு கலைவாணி வரம் கொடுத்தாளா என்ற கேள்வி எழுமானால், என்ன நடந்திருக்கக் கூடும் என்று ஊகிக்கலாம். குமரகுருபரர் தமிழ் மொழியில் மகத்தான புலமை பெற்றவர். தமிழ்ப்பாடல்களில் தளையே தட்டாமல் கவி எழுதும் அபார ஆற்றல் படைத்த மிகச் சிலரில் ஒருவர். ஒரு மொழியில் அவருக்குள் பொலிந்த பூரண ஞானத்தால் காசிக்குப் போனதும் இன்னொரு மொழியைக் கற்பது அவருக்கு மிகமிக எளிதான செயலாக இருந்திருக்க வேண்டும். இன்றைய கம்ப்யூட்டர் விற்பன்னர்களைக் கேளுங்கள்... ஒரு கம்ப்யூட்டர் லாங்குவேஜ் தெரிந்தவர்கள் இன்னொன்றை அறிவது மிகச் சுலபம் என்பார்கள். குருபரர் பெற்ற வரம் என்பதே மிக விரைவில் அவரால் ஹிந்தியைக் கற்க முடிந்த வெற்றியாகத்தான் இருக்க வேண்டும்.

மொழி என்பது பல பிரமாண்டமான வாயில்கள் கொண்ட மாளிகையைப் போன்றது. வாயில்களை இறுக்க மூடி நாம் இருட்டில் தவித்தது போதும்; ஜன்னல்களையும் கதவுகளையும்


காலம் என்னும் காற்று தட்டுகிறது. திறந்து விட நமக்கென்ன தயக்கம்?

உண்மையில் ஒரு மொழியைப் படிப்பது ஒரு வேலையைப் பெறும் வாய்ப்புக்காக மட்டுமா? அது அந்த மொழி பேசும் ஏதோ ஒரு சக மனிதனின் ஆன்மாவை அறியும் ஒரு எளிய முயற்சி அல்லவா?

# 31

## அறிவியல் கணக்கும், ஆன்மிகக் கணக்கும்!

பிரபல ஈழ எழுத்தாளர் அ.முத்துலிங்கம், தான் அடிக்கடி காணாமல் போவதைப் பற்றி ஒரு அருமையான கட்டுரை எழுதியிருக்கிறார். சிறு வயதில் அவரது அம்மா, அவர் கையில் காசைக் கொடுத்து கடைக்கு அனுப்புவாராம். “காசு பத்திரம், தொலைத்து விடாதே” என்று பற்பல முறை சொல்லி அனுப்பி வைப்பாராம். “காசு பத்திரமாக இருக்கும். நான்தான் தொலைந்து போவேன்” என்று எழுதுகிறார் முத்துலிஙகம். “திருப்பங்களின் போது இடதா, வலதா, எந்தப் பக்கம் திரும்புவது என்ற பெரிய கேள்வி என்முன் நிற்கும். நான் தேர்ந்தெடுத்துத் திரும்பும் திசை எப்போதும் தவறாக இருக்கும்” என்று மேலும் சுவாரஸ்யமாகச் சொல்கிறார். சின்ன வயசில் காணாமல் போகாதவர்கள் யாரேனும் இருக்க முடியுமா என்ன?



அ.முத்துலிங்கம்

நான் என்னுடைய நான்கு வயதில் ஒருமுறை தொலைந்து போனேன். கி.மு., கி.பி. போல நான் தொலைவதற்கு முன், தொலைந்து கிடைத்த பின் என்று அந்தக் கதைக்கு முன், பின் இணைப்புகள் உண்டு. தொலைவதற்கு முன் நடந்த சம்பவம், நாங்கள் குடும்பத்தோடு போன ஒரு சினிமா பற்றியது. 'திருமலை தென்குமரி' என்று அந்தக் காலத்தில் வந்த பக்திப் படத்துக்கு வீட்டில் அழைத்துப் போனார்கள். 'திருப்பதி மலை வாழும் வெங்கடேசா...' என்று சீர்காழி வெங்கலக்குரலில் பாடுவாரே, அந்தப் படம்தான். படத்தில் ஒரு கோஷ்டி, டிராவல்ஸ் பஸ்ஸில் கோயில் கோயிலாகப் போகும். ஒரு முருகன் கோயிலில் ஒரு சின்னப் பையன் தொலைந்து போவான். அவனுடைய அம்மா, அப்பா எல்லாரும் முருகனைப் பார்த்து மனமுருக வேண்ட, பையன் கிடைத்துவிடுவான்! படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த என் அப்பா, நக்கலாகக் கமெண்ட் அடித்தார்: "குழந்தை தொலைந்தால் போலீஸ் ஸ்டேஷன் போய் புகார் கொடுப்பாங்களா, கோயிலுக்குப் போய் அழுவாங்களா? என்ன படம் எடுக்கறான்?"



இது நடந்த அடுத்த நாள் அப்பாவுடன் நானும் என் இரு அக்காக்களும் திருவல்லிக்கேணியில் எங்கள் வீட்டின் அருகே இருந்த முருகன் கோயிலுக்குப் போனோம். ஒருநாளும் என் அப்பா சைக்கிளில் ஏறி மிதித்ததை நாங்கள் கண்டதில்லை. நான் சிறுமி என்பதால் என்னை உட்காரவைத்து சைக்கிளை உருட்டிக் கொண்டுதான் போவார். மற்றவர்கள் நடந்து வர வேண்டும். கோயிலுக்கு உள்ளே போனதும் யாரோ ஒரு ஆள் சைக்கிளில் வெளியே போக, அது அப்பாதான் என்று நினைத்து, நான் அந்த ஆள் பின்னாலேயே ('அப்பவே அவளுக்குக் கொஞ்சம் போறாது' என்று அக்காக்கள் சொல்வார்கள்) போனது இப்போதும் நினைவிருக்கிறது. அப்புறம் என்ன நடந்தது? நான் எங்கே காணாமல் போனேன்? எப்படி மூன்று மணி நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்ப வந்தேன் - எதுவுமே என் நினைவு அடுக்குகளில் பதியவில்லை.

கோயிலில் நான் தொலைந்தது தெரிந்ததும் அப்பாவுக்கு 'சொரேர்' என்றது. முன்தினம் சினிமாவில் முருகன் கருணையால் குழந்தை கிடைத்ததை நான் கேலியாகப் பேசியதற்கு அந்த முருகன் கோயிலிலேயே தண்டனையா? அப்பா கதறி அழுது முருகனிடம் மன்னிப்புக் கேட்டார். பிறகுதான், போலீஸ் ஸ்டேஷன் போனார். அதற்குள் நான் வீடு வந்து சேர்ந்தேன்.


நான் வீடு வந்ததும் எல்லோரும் தூக்கிக் கொண்டாடியதும், எப்போதும் சண்டை போடும் அக்காக்கள் பாசத்தைப்

பொழிந்ததும், குடும்பத்துடன் முருகன் கோயில் போய் வந்ததும், அம்மா திருஷ்டி சுற்றியதும், “பயப்பட்டிருப்பா குழந்தை” என்று அத்தை கொழுமோர் - லேசாய்ச் சுடவைத்து மொறமொறவென்று இருக்கும் - காய்ச்சிக் கொடுத்ததும், அப்பா அல்வா வாங்கிக் கொடுத்ததும், இரவு நான் தூங்கிவிட்டதாக நினைத்து அத்தையும் அம்மாவும் என் படுக்கைக்கு அருகில் பலமுறை வந்து நான் பத்திரமாக இருக்கிறேனா என்று பார்த்துச் சென்றதும் தித்திப்பாக என் நினைவில் இருக்கிறது. முருகன் அருளால் கிடைத்த குழந்தை என்று எங்கள் தெருவே என்னைக் கொண்டாடியதும், நான் பலமுறை பலரிடம் நடந்த சம்பவத்தை ஒரு எழுத்தாளரின் லாகவத்துடன் மிகையாக விவரித்தும் (‘அப்படியே ஒரு வேல் என்கிட்ட வந்தது...’), உபரி விவரங்கள். இன்று? அம்மா இல்லை, அத்தை இல்லை, நான் பிறகு தொலைந்தே போகவில்லை. இனிமையான அந்த நாட்கள்தான் தொலைந்து போய்விட்டன.




இந்தச் சம்பவத்தை நான் பின்னாளில் பலமுறை யோசித்துப் பார்த்திருக்கிறேன். என் அப்பாவின் சினிமா பற்றிய விமர்சனத்தை முருகன் கேட்டு அவருக்கு ஒரு பாடம் புகட்ட விரும்பி என்னைக் கொஞ்ச நேரம் மறைத்து வைத்தான் என்பது அறிவியல்ரீதியாக மட்டுமே சிந்திக்கும் ஒரு மனிதருக்கு அபத்தமாகப் படலாம். “நடந்தது ஒரு தற்செயலான நிகழ்வு. நீ

காணாமல் போனாய். எங்கேயோ கொஞ்ச நேரம் அலைந்து திரிந்தாய். திடீரென்று வீடு இருக்கும் திசை ஞாபகம் வந்து அங்கே போயிருக்கிறாய்" என்று அவர் என்னிடம் விளக்கம் தரலாம். ஆனால், எங்கள் குடும்பத்தைப் பொறுத்தமட்டில் இது ஒரு அப்பட்டமான ஆன்மிக அனுபவம். முருகனின் திருவிளையாடல் மட்டுமே. எந்தப் பார்வை உண்மையானது? அறிவியலா, ஆன்மிகமா?



மார்கன் ராபர்ட்ஸன்



லிங்கன்



உலகத்தின் ஆரம்பம் தொடங்கி அறிவால் முழுதும் விளக்க முடியாத சம்பவங்கள் நடந்தபடியேதான் இருக்கின்றன. மார்கன் ராபர்ட்ஸன் என்பவர் ஒரு நாவல் எழுதினார். ஆண்டு 1898. நாவலின் பெயர் டைட்டனின் அழிவு. அந்தக் கதையில் டைட்டன் என்கிற பிரமாண்டமான சொகுசுக் கப்பல் ஒரு ஐஸ் பாறையில் மோதி முழுகுகிறது. பல பேர் இறந்து போகிறார்கள்... எங்கேயோ கேட்ட கதை போல் இல்லை?

1912-ல் டைட்டானிக் கப்பல் ஐஸ் பாறையில் நிஜமாகவே மோதி முழுகியது. சம்பவத்துக்கு முன் எழுதப்பட்ட நாவல் எப்படி நிஜத்துக்கு இவ்வளவு அருகில் அமைந்தது?

நம்பவே முடியாத பொருத்தங்களை பல இடங்களிலும் கேள்விப்படுகிறோம்.

லிங்கன் 1860-லும் கென்னடி 1960-லும் அமெரிக்க ஜனாதிபதியானார்கள். சரியாக நூறு வருஷம் இடைவெளி. இருவரும் கருப்பினத்தவரின் உரிமைக்காகப் பாடுபட்டார்கள். இருவரும் வெள்ளிக்கிழமைகளில் தத்தம் மனைவிகள் அருகில் இருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.


கென்னடி, லிங்கன் இருவரும் தலையின் பின் பகுதியில் குண்டு துளைத்து இறந்தார்கள். இருவரையும் கொன்றவர்கள் பிறந்த வருடங்கள் 1839, 1939. சரியாக நூறு வருஷம்! இந்த இரு குற்றவாளிகளும் பிடிபட்டு பின்னர் வழக்கு நடக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

லிங்கன், கென்னடி இருவரும் இறந்த பின்னர், ஜான்சன் என்ற பெயருள்ளவர்கள் அவர்களுக்கு அடுத்து ஜனாதிபதியானார்கள்- ஆண்ட்ரூ ஜான்சன், லிண்டன் ஜான்சன்.


லிங்கன், கென்னடி இரண்டு பெயர்களுக்கும் ஆங்கிலத்தில் ஏழு எழுத்துகள்.



வில்லியம் பாலே



நியூட்டன்



ஐன்ஸ்டீன்

தலை சுற்றுகிறதல்லவா? இவை எல்லாமே எதேச்சையாக நடந்ததா? அல்லது ஏதோ ஒரு விதி, கடவுளின் சட்டம், முன்பே தீர்மானிக்கப்பட்ட ஓர் அம்சம், தவிர்க்க முடியாமல் எல்லோர் வாழ்வின் சம்பவங்களிலும் உறைந்துள்ளதா?

‘பிரபஞ்சம் கடவுளால் இயக்கப்படுகிறதா?’ என்ற கேள்விக்கு பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வில்லியம் பாலே (William Paley) என்ற பாதிரியார் அழகான விளக்கம் அளித்தார். “ஒரு பாதையில், ஒரு கடிகாரத்தைப் பார்க்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதன் துல்லியமான அமைப்பைப் பார்க்கும்போது என்ன முடிவுக்கு வருவீர்கள்? நீங்கள் நேரே பார்க்க முடியாவிட்டாலும்கூட அந்தக் கடிகாரத்தை யாரோ ஒருவர் தயாரித்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவீர்கள் அல்லவா? அதேபோல் இயற்கையில் இருக்கும் மிக மிக ஒழுங்கான அமைப்பைப் பார்க்கும்போது இதைப் படைத்த ஒரு கடவுள் இருக்கிறார் என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியுள்ளது” என்று சொல்கிறார் வில்லியம் பாலே. நியூட்டனும் ஐன்ஸ்டீனும் இந்தத் தத்துவத்தைக் கிட்டத்தட்ட ஏற்றுக்கொள்கிறார்கள்.

கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விக்கு ஆன்மிகத்தின் பதில் “இருக்கிறார்”. அறிவியலின் பதில், “இல்லை” என்பதல்ல, “இருக்கக் கூடும்” என்பதே!

இந்த இரண்டும் சந்திக்கும் இடத்தில்தான், காணாமல் போன பிள்ளைகளைக் கிடைக்கச் செய்யும் முருகன் அருளை நினைத்து விம்மும் பக்தி, நம் வாழ்வை அழகாகவும் அர்த்தமுள்ளதாகவும் செய்கிறது. சிறு வயதில் காணாமல் போய் கிடைத்த பிள்ளைகள் பெரியவர்களாகி வெளியே போகும்போதும், “பத்திரம்; ஜாக்ரதை. முருகனை வேண்டிக்கிட்டுப் போ” என்று சொல்லும் அப்பாக்களின் குரலில் தொனிக்கும் இறை நம்பிக்கை, காவல் காக்கும் வேலாக நம்மைப் பாதுகாக்கிறது.



பாரதி பாஸ்கர்

**ப**ண்டிகைக் கால சாலமன் பாப்பையா பட்டிமன்றங்களில், இட ஒதுக்கீடு எதுவுமின்றி இடம் பெறுபவர். சிறந்த சிந்தனை, சீரிய சொல்லாட்சி, எளிய தமிழ்நடை இவரது பலம். எதிரணியைத் தாக்கும் ஏவுகணைப் பேச்சிலும் இலக்கியத் தரம் குறையாமல் மிளிர்பவர்.

இன்ஜினீயரிங், எம்.பி.ஏ., பட்டம் பெற்றவர். கல்லூரிக் காலங்களிலேயே கம்பன் கழக மேடைகளில் வலம் வந்தவர். பன்னாட்டு வங்கியில் உயர் பணி; பட்டிமன்றத்தில் தனி பாணி!

சின்னத்திரையில் இவரது ‘மகளிர் பஞ்சாயத்தும்’, ‘மங்கையர் சாய்ஸும்’, ‘வாங்க பேசலாம்’ நிகழ்ச்சியும் மெகா சீரியல் அளவுக்கு மக்கள் மத்தியில் பிரபலமானவை.

மேடைகளில் இலக்கியத் தேரைச் செலுத்தும் இவர், சமுதாய மேடைகளில் பெற்ற விருதுகள்...

‘ராஜீவ்-மூப்பனார் சாதனையாளர் விருது’.


நகைச்சுவையாளர் சங்கத்தில் ‘சிறந்த பேச்சாளர் விருது’

திருச்சியில் அனைத்து மகளிர் சங்கத்தினர் வழங்கிய ‘சாதனைப் பெண் விருது’.

விகடன்
பிரசுரம்

பட்டி மன்றம் மூலமாக புகழ்பெற்ற
திருமதி. பாரதி பாஸ்கர் அவர்களைப்பற்றி அறியாதவர்கள்
தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலகனைத்திலும் வாழும்
தமிழர்களில் யாருமே இல்லை. அவருடைய பேச்சாற்றல்,
அவருடைய விசாலமான அறிவு, எந்தவொரு விஷயத்தை
ப்பற்றி விவாதம் நடந்தாலும் திருமதி. பாரதி பாஸ்கர்
அவர்களின் வாத விவாதங்கள், அவர் சொல்லும்
உதாரணங்கள் அனைவரையும் சிந்திக்க வைக்கிறது,
ரசிக்க வைக்கிறது. அதேபோல அவர் எழுதியுள்ள
"சிறகை விரி, பற!" என்ற ஆன்மீக நூல் எல்லோரையும்
சிந்திக்க வைக்கும், ரசிக்க வைக்கும் என்பதில்
சந்தேகமில்லை. அவர் எல்லா புகழோடும்
நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்

அன்புடன்,





Printed Books
Rs.75/-
ISBN 978-81-8476-495-6